வெளியீடு 23-8-2003

Issued 23-8-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 31, 2003– தொகுதி 35 – எண். 2

**Friday the 31st January, 2003 – Volume 35 – No. 2**

*பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
31-1-2003
225510
சென்னை
563/2003


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 7) — 201-234

2. கவன ஈர்ப்பு—

(அ) வேலூர்—காட்பாடி, பாலாறு குறுக்கே பாலம் — 234-237

(ஆ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் செட்டிக்குளம் சாலை பழுது — 237-239

(இ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நல்லுக்குறிச்சி கால்வாய் — 239-240

(ஈ) வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல், நிலை — 240-242

(உ) கொடைக்கானல், குன்னூர் அரசு மருத்துவமனைகள் இரத்த வங்கிக் கட்டடம் — 242-244

(ஊ) நீலகிரி மாவட்டம், அரசு மருத்துவமனைகள், போதிய மருத்துவர்கள் இன்மை — 244-246

(எ) நீலகிரி மாவட்டம், ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடன் உதவி — 247-249

(ஏ) தகுந்த பயிற்சி இல்லாதோர்க்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதைத் தடுத்தல் — 249-253

(ஐ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மின்னழுத்தக் குறைவு — 254-256

(ஒ) நீலகிரி மாவட்டம், மரங்களை வெட்டத் தடையால் பாதிப்பு — 256-261

பக்கங்கள்

2. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஓ) அவினாசி, நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல் அவசியம் — 261-263

3. அறிவிப்புகள்—

(அ) எடுத்துக்கொள்ளப்பட்டவை நீங்கலாக எஞ்சிய கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான பதில்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் — 263

(ஆ) தமிழ்நாடு நிலத்தடிநீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003 (ஆஇ.) — 343

4. அறிக்கைகள் அளித்தல்—

(அ) மதிப்பீட்டுக் குழு — 263-264

(ஆ) பொதுக் கணக்குக் குழு — 264

(இ) பொது நிறுவனங்கள் குழு — 264

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு — 264-265

(உ) மனுக்கள் குழு — 265

5. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)—

தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 — 265-266

பக்கங்கள்

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும்—

திருமதி வி. சிவகாமி — 266-278

திரு. பி.எஸ். அருள் — 279-285

திரு. செ.கு. தமிழரசன் — 286-294

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 294-342

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003 — 344-346

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 344, 345

(ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 346-348

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 346, 347

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 348-350

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 348, 349

8. அரசினர் தீர்மானம்—

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — 350-351

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 351-355

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 17, சித்ரபானு – திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஜனவரி 31, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்."

*உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்@
### (பட்டியல் – 7)

1—

### தரைப்பாலம் புதுப்பித்தல்

**வினா 9799—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ராணிப்பேட்டை—ஆற்காடு செல்லும் பாலத்திற்கு அருகில் உள்ள தரைப்பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 46 முழுவதும் 4 வழிப்பாதையாக மாற்றுவதற்கான பணிகள் தேசிய*

---

*@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளவாறு அமைந்துள்ளன.*

நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தால் ஆய்வு செய்யப்பட்டு தற்போது பணிகள் துவங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பழைய பாலங்களைப் புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்தல் பணியும் அவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது.

2—

## பாதுகாப்புச் சுவர்

**வினா 15842—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து ராதாபுரம் செல்லும் சாலையின் கீழ்ப்பகுதியில் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் கிணறுகள் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் கி.மீ. 0/2—ன் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான இரு கிணறுகளைச் சுற்றியும் தற்போது பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு உள்ளது.*

*(ஆ) எனவே, இப்போது ஆபத்தை விளைவிக்கும் சூழ்நிலை இல்லை.*

3—

## சாலை செப்பனிடல்

**வினா 17880—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வத்தலக்குண்டு—பேரையூர் சாலையில் பிரிந்து வகுரணி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையான வத்தலக்குண்டு—பேரையூர் சாலையில் கி.மீ. 32/4—ல் பிரிந்து வகுரணி செல்லும் சாலை கி.மீ.0/0—3/2 ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0—2/4 வரை மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 2/4—3/2 வரை சாலையினைச் சீர் செய்ய இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் பகுதி—3—ல் ரூ.4.30 இலட்சத்திற்கு கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.*

4—

## சாலை செப்பனிடல்

**வினா 17884—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வலங்காகுளம் திடியன்சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் மொத்த நீளம் 2.20 கி.மீ. ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்ய சுமார் ரூ.17.50 இலட்சம் தேவைப்படும். மதுரை மாவட்டத்திற்கான பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் Master Plan (2002—2007) உசிலம்பட்டி தொகுதிக்கான சாலைப்பட்டியலில் இச்சாலை சேர்க்கப்பட்டுள்ளது.*

[2003 ஜனவரி 31

5—

## சாலை செப்பனிடல்

**வினா 17888—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், திடியன் நாட்டாமங்கலத்தில் பிரிந்து உச்சப்பட்டி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது திடியன்—நாட்டாமங்கலம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் உச்சப்பட்டி சாலை (கி.மீ. 0/1—1/4) ஆகும். இச்சாலை 1999—2000 ஆம் ஆண்டு இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு திட்டம்—I-ன்கீழ் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

6—

## கோயில்கள் புதுப்பித்தல்

**வினா 8854—திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியத்தில் காணியம்பாக்கம் பிரசன்னீஸ்வரர் ஆலயமும், தேவஸ்தானத்தில் அருள்மிகு ஸ்ரீரங்கநாதப்பெருமாள் ஆலயங்கள் மிகவும் பழுது அடைந்து உள்ளதைப் புதுப்பித்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஜனவரி 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காணியம்பாக்கம் கிராமம், அருள்மிகு பிரசன்னீஸ்வரர் ஆலயம், தேவஸ்தானத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீரங்கநாதப்பெருமாள் திருக்கோயில்கள், சட்டப்பிரிவு 46(I)—ன்கீழ் விளம்புகை செய்யப்பட்டு, பரம்பரை அறங்காவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், அருள்மிகு பிரசன்னீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகளை உபயதாரர்கள் மூலம் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அருள்மிகு ஸ்ரீரங்கநாதப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.1,80,000/— மதிப்பீட்டில் உபயதாரர்கள் வழியாகச் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

7—

## அகதிகள் முகாம்

**வினா 28955—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கான முகாம்கள் எத்தனை?

(ஆ) முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கை விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 31—10—2002 அன்று நிலவரப்படி மூன்று முகாம்கள் உள்ளன. அவை முறையே தோப்புக்கொல்லை, அழியாநிலை, தெக்காத்தூர் முதலியன ஆகும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடியில் உள்ள தோப்புக் கொல்லை, அறந்தாங்கியில் உள்ள அழியாநிலை மற்றும் திருமங்கலத்தில் உள்ள தெக்காத்தூர் ஆகிய மூன்று முகாம்களையும் சேர்த்து 31—10—2002 அன்றைய நிலவரப்படி மொத்தம் 2,996 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். அவர்களில் குழந்தைகள் 778 பேர்களும், 2,218 பெரியவர்களும் தங்கியுள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | முகாம் இடங்கள் | குழந்தைகள் | பெரியவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தோப்புக்கொல்லை | 320 | 1,174 | 1,494 |
| 2. | அழியாநிலை | 154 | 437 | 591 |
| 3. | தெக்காத்தூர் | 304 | 607 | 911 |
| | மொத்தம் | 778 | 2,218 | 2,996 |

8—

## மாணவர் விடுதி

**வினா 17702—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சிறுகிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



9—

## சாதிப் பிரிவுகள்

**வினா 22598—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மட்டும் எவ்வளவு சாதிப் பிரிவுகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மட்டும் எவ்வளவு சாதிப் பிரிவுகள் உள்ளன என்று கணக்கிடப்படவில்லை.

(ஆ) எழாது.

10—

## விடுதிகள்

**வினா 23106—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் படிக்கும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிகள் கூடுதலாகக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் கல்லூரி மாணவ/ மாணவியர்களுக்குக் கூடுதல் விடுதிகள் திறப்பது குறித்த திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

[2003 ஜனவரி 31

11—

## மாணவர் விடுதி

**வினா 23540—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஒன்றியம், பழவந்தாங்கல் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி இந்தக் கல்வியாண்டில் துவக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

புதிய விடுதி துவக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

12—

## பட்டா

**வினா 29445—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியிலுள்ள அம்மன்கோயில் தெருவில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம், ஊராட்சி அம்மன்கோயில் தெருவில்



2003 ஜனவரி 31]

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

13-

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 2944—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

14-

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 29447—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**15-**

## விதைப் பரிசோதனை நிலையம்

**வினா 14200—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் விதைப் பரிசோதனை நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் முழுமைக்கும் சேவை செய்யும் வகையில் விதைப் பரிசோதனை நிலையம் ஒன்று தற்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வருவதால் சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் தனியாக மற்றொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைக்க அவசியமில்லை.

**16-**

## விவசாயப் பண்ணை அமைத்தல்

**வினா 14773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் விவசாயப் பண்ணை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**17-**

## பழ நாற்றுகள்

**வினா 17112—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் பழ நாற்றுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாவட்டம் எடப்பாடி பகுதி விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 50 சதவிகித மானியத்திலும், மத்திய சார்பு திட்டமான ஒருங்கிணைந்த வெப்ப வறட்சி மற்றும் குளிர் மண்டல பகுதி அபிவிருத்தித் திட்டம் மூலம் 50 சதவிகித மானியத்திலும், மா, கொய்யா, சப்போட்டா, வாழை, ஸ்டிராபெரி போன்ற பழக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2001—2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள முள்ளுவாடி, கருமந்துறை, மானியார்குண்டம், ஏற்காடு அருநூத்துமலை அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 8,22,548 எண்ணிக்கை செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு 5,98,965 செடிகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டன. 1284 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

[2003 ஜனவரி 31

18—

## மானியம் வழங்குதல்

**வினா 18613—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சான்று பெற்ற பயறு விதைகளுக்கு தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ள மானியத்தைத் தொடர்ந்து வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மாவட்டத்தில் சான்று பெற்ற உளுந்து பயறு பயிர்களுக்கு 2000—2001ஆம் ஆண்டு வரை மானியம் வழங்கப்பட்டது. தற்பொழுது உளுந்து மற்றும் பச்சை பயறு பயிர்களுக்கு மத்திய அரசால் மானியம் வழங்கப்படவில்லை. தற்பொழுது கொண்டைக்கடலை பயறுக்கு மானியம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், கொண்டைக்கடலை இம்மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவு பரப்பளவில் பயிரிடப்படுவதாலும், வேளாண் துறையின் மூலம் கொண்டைக்கடலை சான்று விதையாக உபயோகிக்கப்படாத காரணத்தினாலும் இதற்கான மத்திய அரசு மானியம் ஒதுக்கீடு பெறப்படவில்லை. வேறு பயறு வகை பயிர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் எதுவும் மத்திய, மாநில அரசு மூலம் செயல்படுத்தப்படவில்லை.

19—

## பொன்னி விதை நெல்

**வினா 19866—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய அலுவலகங்கள் மூலமாக வழங்கப்படும் பொன்னி விதை நெல் மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்தில் அதிக விலைக்கு விற்கப்படுகிறதா?



2003 ஜனவரி 31]

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு விற்கப்படும் விதை நெல்லை ஒரே சீரான விலையில் விற்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொன்னி விதை நெல் மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்தில் அதிக விலைக்கு விற்கப்படவில்லை. மேலும் மாவட்டத்தில் உள்ள விவசாய அலுவலகங்களில் வழங்கப்படும் விதை நெல்லுக்கான விற்பனை விலை முந்தைய ஆண்டின் சராசரி அங்காடி விலையினைக் கணக்கிட்டு நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் மாவட்டத்திற்கு மாவட்டம் விலை மாறுபடுகிறது.

20—

## சொட்டு நீர்ப்பாசன கருவி

**வினா 21174—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தென்னந்தோப்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் செய்ய கருவிகள் கேட்டு பெண், சிறு விவசாயிகள், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் மானிய விலையில் அரசு வழங்குவது கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) இதில் எவ்வளவு பேருக்கு சொட்டு நீர்ப்பாசன கருவி அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தென்னந்தோப்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் செய்ய கருவிகள் கேட்டு விண்ணப்பித்துள்ள விவசாயிகளின் விவரம் கீழ்வருமாறு:

[2003 ஜனவரி 31

1. சிறு விவசாயிகள் .. 27 பேர்

2. பெண் விவசாயிகள் .. 27 பேர்

3. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் .. இல்லை

மொத்தம் .. 54 பேர்

(ஆ) விண்ணப்பித்த 54 பேருக்கும் சொட்டு நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**21—**

## அடையாள அட்டை

**வினா 21221—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளிடம் நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்ய அரசு சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு அடையாள அட்டை வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளிடமிருந்து நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்வதில்லை.

**22—**

## மணிலா பயிர் பாதுகாப்பு

**வினா 22145—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மணிலா பயிரை பருவ காலத்தில் கம்பளி புழுக்கள் தாக்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்னெச்சரிக்கையாக செயல்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவப்பு கம்பளிப் புழுக்களைப் பொறுத்தவரை, காரிஃப் பருவ நிலக்கடலை பயிரில் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி நிலையில் மட்டுமே காணப்படும் புழுவாகும். மழை பெய்தவுடன் நிலத்தில் உள்ள சிவப்பு கம்பளிப் புழுக்களின் கூட்டுப்புழுக்கள் அந்துப் பூச்சியாக மாறி இனப்பெருக்கம் செய்து முட்டைகள் இட்டு, புழுக்களாக மாறி சேதம் ஏற்படுத்தும். நடப்பு ஆண்டில் மே, ஜூன், ஜூலை மாதங்களில் மழை பெய்யாத காரணத்தால் சிவப்பு கம்பளிப் புழுக்கள் தாக்கும் வாய்ப்பு சேலம் மாவட்டத்தில் இல்லை. மேற்கொண்டு மழை பெய்தாலும் இனி புழுவின் தாக்குதல் இருக்காது. இருப்பினும் பயிர்களுக்கு பூச்சி நோய் தாக்குதல் ஏற்படுகின்றதா என தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. கம்பளிப் புழுத் தாக்குதல் தென்பட்டால் உடன் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் செயல்படுத்துவதன் வாயிலாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**23—**

## கடனுதவி

**வினா 22405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வறண்ட கிணறு அடிமெட்டு வெட்டி மேம்பாடு செய்ய கடன் உதவி செய்ய அரசு நிதி ஒதுக்கம் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி பகுதியில் நீர்மட்டம் குறைந்துள்ள கிணறுகளுக்கு கடன் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு வறண்ட கிணறு அடிமெட்டு வெட்டி மேம்பாடு செய்ய கடன் உதவி செய்ய அரசால் நிதி ஒதுக்கம் செய்யப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

24—

## உழவர் பயிற்சி நிலையம்

**வினா 26518—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் புதிய உழவர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இந்த மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே ஓர் உழவர் பயிற்சி நிலையம் இயங்கி வருவதால் புதியதாக ஓர் உழவர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) சேலம் மாவட்டத்தில் சிலநாயக்கன்பட்டி என்னும் இடத்தில் ஓர் உழவர் பயிற்சி நிலையம் தற்போது இயங்கி வருகிறது.

25—

## மலர்க் கண்காட்சி

**வினா 26549—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு உதகையில் மலர்க் கண்காட்சி நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், மலர்க் கண்காட்சி மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டில் 19—5—2001 மற்றும் 20—5—2001 ஆகிய தேதிகளில் உதகையில் மலர்க் கண்காட்சி நடைபெற்றது.



(ஆ) மேற்படி மலர்க் கண்காட்சி மூலம் அரசுக்குக் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூ.7,04,993 (ரூபாய் ஏழு இலட்சத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று) ஆகும்.

26-

## கடன் வசதி

**வினா 26587—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மிளகாய் எத்தனை ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது என அரசு அறிவிக்குமா?

(ஆ) மிளகாய் பயிரிட விவசாயிகளுக்கு மானியத்துடன்கடன் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 76,138 ஹெக்டேரில் மிளகாய் பயிரிடப்படுகிறது.

(ஆ) மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மானியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

| மானியத் தன்மை | அளவு | மானியம் (ரூபாயில்) | பொருள் வடிவு | நிதிவடிவு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| பரப்பு விரிவாக்கம் | 1 எக்டர் | 1250 | 1500 எக்டர் | 18.75 |
| பூச்சி மற்றும் நோய்த் தடுப்பு மருந்துக்காக | 1 எக்டர் | 250 | 5000 எக்டர் | 12.50 |
| செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் | 1 எக்டர் | 750 | 4000 எக்டர் | 30.00 |
| மினிகிட் வழங்குதல் | 1 எண் | 50 | 6000 எண்கள் | 3.00 |
| | | | மொத்தம் | 64.25 |

[2003 ஜனவரி 31

27—

## மானியம்

**வினா 27714–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு மத்திய அரசின் மானியத்தினை தாமதமில்லாமல் அரசு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு மத்திய அரசின் அதிகாரம் பெற்ற நிறுவனமான தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி மூலம் ஆண்டுதோறும் மானிய நிதி உதவி பெற்று தமிழகத்தில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் காலதாமதம் ஏதும் ஏற்படுவதில்லை.*

*(ஆ) ஒவ்வொரு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் தென்னை வளர்ச்சி வாரியம் நிதி உதவி அனுமதி அளித்து இரண்டாவது காலாண்டில் மாநில அரசின் அனுமதி ஆணை வழங்கப்படுகிறது. அந்நிதி ஆண்டிற்குள் மானியத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

28—

## பணி நிரந்தரம்

**வினா 27725–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டிலுள்ள விதைப் பண்ணைகளில் 50 ஆண்டுகளாகப் பணிபுரியும் விவசாய தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 ஜனவரி 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் அந்தந்தப் பருவத்தில் செய்யப்படும் பயிர் சாகுபடிப் பணிகளுக்கு விவசாயத் தொழிலாளர்கள் அவ்வப்போது தேவைக்கு ஏற்ப தற்காலிகமாக வேலைக்கு எடுக்கப்பட்டு பணிபுரிகின்றனர். எந்த ஒரு விவசாயத் தொழிலாளரும் அரசு விதைப் பண்ணைகளில் நிரந்தரமாகப் பணிக்கு அமர்த்தப்படுவதில்லை. எனவே, அரசு விதைப் பண்ணையில் தினசரி விவசாயத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கிடும் நிலை எதுவும் எழவில்லை.*

*ஆ) வினா எழவில்லை.*

29—

## தேங்காய் உற்பத்தி

**வினா 27730அ–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தேங்காய் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தேங்காய் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்தில் மொத்தம் 3.24 இலட்சம் எக்டரில் பயிர் செய்யப்பட்டு, 31921 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தித் திறன் எக்டர் ஒன்றுக்கு 9868 தேங்காய்களாகும். மேலும், தேங்காய் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மத்திய அரசு உதவியுடன் பெரும் நிதி ஒதுக்கப்பட்டு தரம் மிக்க தென்னங்கன்றுகள் மாநில தென்னை நாற்றங்கால்களில் உற்பத்தி*

செய்யப்பட்டு வருடந்தோறும் மொத்தம் 12 இலட்சம் நெட்டை மற்றும் நெட்டைXகுட்டை தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தேங்காய் உற்பத்தியினை மேலும் அதிகரிக்க தென்னை மேம்பாட்டு வளர்ச்சி வாரியம், கொச்சி மூலம் மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொழில் நுட்பங்களையும் வழங்கி வருகிறது. செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்படுகின்றன.

*(ஆ)* தேங்காய் உற்பத்திக்கான திட்டங்கள் யாவும் பல ஆண்டுகளாகவே செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

**30—**

## நிருவாக சீரமைப்பு நடவடிக்கைகள்

**வினா 27737—திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசு விதைப் பண்ணையின் செயல்பாடுகளை நிருவாகச் சீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம். நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசு விதைப் பண்ணையின் உற்பத்தியினை அதிகரிக்கவும், பண்ணையைச் சீரான முறையில் செயல்படுத்தி அருகிலுள்ள விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களைச் செய்துகாட்டும் மாதிரிப் பண்ணையாக நடத்திடவும், ஒவ்வொரு பண்ணைக்கும் பண்ணை மேம்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழு ஒரு பயிர் சாகுபடிப் பருவத்தில் மூன்று முறை கூடி பண்ணையைப் பார்வையிட்டு பண்ணை மேம்பாட்டிற்கான அறிவுரைகள் வழங்க நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர மாநில அளவில் வேளாண்மை ஆணையர், வேளாண்மை கூடுதல் இயக்குநர் (இடுபொருள்), வேளாண்மை இணை இயக்குநர் (அரசு விதைப் பண்ணை) மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்(விதைகள்—I) ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு பண்ணைகளைத் திடீரென பார்வையிட்டு பண்ணைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.





*(ஆ)* இதற்கான பதில் எழாது.

**31—**

## தொழிற்சாலை

**வினா 28847—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் நடவடிக்கைகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**32-**

## விவசாயப் பயிற்சி மையம்

**வினா 28851— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் சரிவர இயங்காமலிருக்கும் விவசாயப் பயிற்சி மையத்தை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

[2003 ஜனவரி 31

**விடை —**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி உழவர் பயிற்சி நிலையக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த விவசாயப் பயிற்சிப் பள்ளியின் வாயிலாகப் பயிற்றுவித்து வந்த ஓராண்டு வேளாண் சான்றிதழ் பயிற்சி, அரசு ஆணை எண் 566(வே.உ.5) நாள் 3—9—1992 உத்தரவின்படி நிறுத்தப்பட்டது. இப்பள்ளிகளில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேளாண்மை உற்பத்தி நுட்பங்களில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சி பெற்றுத் தேறியவர்கள் சுயமாக நவீன வேளாண்மை செய்யவும் தேவைப்படும்போது வேளாண் துறையில் வயல்விளக்க அலுவலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டனர். தற்போது மேல்நிலைப் பள்ளிகளிலேயே விவசாயப் பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், வயல்விளக்க அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவது தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டதாலும், இந்தப் பயிற்சி மையங்கள் மேற்கண்ட அரசாணையின்படி நிறுத்தப்பட்டன. மீண்டும் இப்பயிற்சிப் பள்ளிகளைத் திறக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**33—**

## சோதனைச் சாவடி

**வினா 16929—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வணிக வரித் துறைக்குச் சொந்தமான சோதனைச் சாவடிக் கட்டடங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் அரசு அலுவலகங்கள் இயங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை —**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போது 29 சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 14 சோதனைச் சாவடிகள் அரசு



2003 ஜனவரி 31]

கட்டடங்களிலும், 10 சோதனைச் சாவடிகள் அரசின் புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகளிலும், மீதமுள்ள 5 சோதனைச் சாவடிகள் தனியார் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. பாதுகாப்பு மற்றும் தனித் தன்மை ஆகிய காரணங்களால், அரசுக் கட்டடங்களில் இயங்கும் சோதனைச் சாவடிகளில் வேறு அரசு அலுவலகங்கள் இயங்குவதற்கு வாய்ப்பில்லை.

**34—**

## கேளிக்கை வரி

**வினா 28562—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997—1998ல் ரூ.109 கோடியாக இருந்த கேளிக்கை வரி வசூல், 2000—2001ல் ரூ.68 கோடியாகக் குறைந்ததற்குக் காரணம் என்ன?

**விடை —**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

1—8—1998க்கு முன் டப்பிங் திரைப்படங்களுக்கு 50 சதவிகிதமும், டப்பிங் அல்லாத திரைப்படங்களுக்கு 40 சதவிகிதமும் கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டு வந்தது. இவ்வரி விகிதங்கள் 1—8—1998 முதல் டப்பிங் திரைப்படங்கள் என்பதற்குப் பதிலாக, புதிய திரைப்படங்களுக்கு 30 சதவிகிதம், பழைய திரைப்படங்களுக்கு 20 சதவிகிதம் என்று குறைத்து மாற்றியமைக்கப்பட்டது. மீண்டும் இவ்வரி விகிதங்களை 12—6—2000 முதல் புதிய திரைப்படங்களுக்கு 25 சதவிகிதம், பழைய திரைப் படங்களுக்கு 20 சதவிகிதம் எனக் குறைக்கப்பட்டது. இவ்வரி விகிதக் குறைப்புகளினால் கேளிக்கை வரி வசூல் 1998—1999 முதல் குறைந்து வருகிறது.

**35—**

## கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா 3416—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 31

(அ) வந்தவாசியிலுள்ள கிராமிய மின் விநியோகக் கூட்டுறவுச் சங்கம் இலாபகரமாகச் செயல்படுகிறதா?

(ஆ) அவ்வாறு இலாபகரமாக இயங்கவில்லையெனில் சீர் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை –**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசியிலுள்ள கிராமிய மின் விநியோகக் கூட்டுறவுச் சங்கம் இலாபகரமாகச் செயல்படவில்லை.

(ஆ) சங்கத்தின் பணிகள் 6—4—2002 முற்பகல் முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது இக்கூட்டுறவுச் சங்கம் செயல்படவில்லை.

**36—**

### சமையல் எரிவாயு

**வினா 16133– திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் குடும்பத்தினருக்கு இலவசமாக சமையல் எரிவாயு வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை –**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தினருக்கு இலவசமாக சமையல் எரிவாயு வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில்



2003 ஜனவரி 31]

இல்லை. ஆனால், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசாணை (நிலை) எண் 143, நாள் 10—10—2001ன்படி, வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகள் ஆகியோர் புதிதாகத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கு இலவசமாக ஒருமுறை மட்டும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**37—**

### கடன்

**வினா 17074–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் மாதம் முடிய வியாபார அபிவிருத்திக்காக எவ்வளவு பேர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு கடன் வழங்கப்பட்டது?

(இ) கடன் வழங்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை –**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரை வியாபார அபிவிருத்திக்காக 64 நபர்கள் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்.

(ஆ) 64 நபர்களுக்கும் கடன் வழங்கப்பட்டது.

(இ) வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.184.25 இலட்சம் ஆகும்.

[2003 ஜனவரி 31

38—

## புதிய கட்டடம்

**வினா 17406—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் பழுதடைந்த நிலையிலுள்ளதால், அதற்கு பதில் புதிய கட்டடம் கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வருவதாலும், வங்கியின் கட்டட நிதியில் தொகை ஏதும் இல்லாததாலும், மேற்கண்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

39—

## கூட்டுறவு வங்கி

**வினா 21233—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இந்த 2002—2003 நிதியாண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்களை அரசு தெரிவிக்குமா?



2003 ஜனவரி 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

40—

## பயிற்சியாளர்கள் நியமனம்

**வினா 21240—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு பட்டம் மற்றும் பட்டய பயிற்சியாளர்கள் நியமனம், சங்கத்தின் நிர்வாக சபை முடிவுக்கு எடுக்கப்படுகிறதா அல்லது வேலைவாய்ப்பு மூப்பு அடிப்படையில் எடுக்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு பட்டம் மற்றும் பட்டய பயிற்சியாளர்கள் நியமனம் சங்கத்தின் நிர்வாக சபையால் நியமிக்கப்படும் குழுவால் வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியல் மூலம்தான் செய்யப்படுகின்றது.

41—

## இரும்புக்கதவு அமைத்தல்

**வினா 21650—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 31

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன?

(ஆ) அதில் எத்தனை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம், பாதுகாப்பு அறை மற்றும் இரும்புக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 211 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன.

(ஆ) இரும்புப் பெட்டகம் மட்டும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் .. 206

பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்புக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் .. 179

**42—**

## சொந்தக் கட்டடம்

**வினா 22612—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரத்தில் செயல்படும் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரத்தில் செயல்படும் நியாய விலைக் கடை சிவசுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடை



2003 ஜனவரி 31]

மேற்சொன்ன வங்கிக்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், வேறு கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**43—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 25824—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒ.ஜி.அள்ளி ஊராட்சி, கிட்டலகாரம்பட்டியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓ.ஜி.அள்ளி ஊராட்சி, கிட்டலகாரம்பட்டியில் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை இயங்கி வருகிறது.

**44—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா 26413—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோணங்கினி அள்ளி நியாய விலைக் கடையைப் பிரித்து தின்னம்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்று நடப்பாண்டில் அமைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2003 ஜனவரி 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*கோணங்கினி அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் கோணங்கினி அள்ளி நியாய விலைக் கடை 390 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இந்த தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு சிக்கனப்பட்டியில் ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை கோரும் தின்னம்பட்டியில் 170 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடை அமைத்தபின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் பகுதிநேரக் கடையில் 200க்கு குறையாத குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டுமென்ற வரையறைகள் பொருந்தாததால் தின்னம்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**45—**

### கூட்டுறவுப் பண்டகசாலை

**வினா 26452—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கிவரும் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் தற்போதைய செயல்பாடுகளை முற்றிலும் சீர்திருத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகளை சீர்திருத்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:*



2003 ஜனவரி 31]

*1) கூட்டுக் கொள்முதல் குழு மீண்டும் அமல்படுத்தப்பட்டுள்ளது.*

*2) கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை இலக்கு ஒரு கடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*3) புதியதாக துவக்கப்பட்ட நாமக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு நடைமுறை மூலதனக் கடனாக ரூ.20.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.*

*4) கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நியாய விலைக் கடைகள் மூலம் ஊட்டி தேயிலை, அரசு உப்பு மற்றும் காதிப் பொருட்களை விற்பனைக்கென குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*5) 2001—2002 ஆம் கலால் ஆண்டில் 108 மதுபானக் கடைகளை நுகர்வோர் கூட்டுறவுகள் ஏற்று நடத்தி வருகின்றன.*

*6) நகர்ப்புற மக்களுக்குத் தேவையான ஆவின்பால் அட்டை விற்பனையும் நுகர்வோர் கூட்டுறவுகள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன.*

*7) கூட்டுறவுப் பண்டகசாலை நியாயவிலைக் கடைகள் மூலம் வேட்டி, சேலைகள் மலிவு விலையில் விற்கப்பட்டு வருகின்றன.*

*8) நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, பணியாளர் செலவினம் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.*

**46—**

### இலவசத் தொகுப்பு வீடுகள்

**வினா 4750—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய சேலம் உட்பட தமிழகத்தில் ஏழை மக்கள் எத்தனை பேருக்கு இலவச தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய சேலம் மாவட்டம் உட்பட தமிழ்நாட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்—புதிய வீடுகள்*

திட்டத்தின்கீழ் 33944 வீடுகளும், கச்சா வீடுகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் 15970 வீடுகளும் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. அதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் முறையே 1133 புதிய வீடுகளும், 552 கச்சா வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

47—

## தொகுப்பு வீடுகள்

**வினா 6912–திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, தேவனாஞ்சேரி ஊராட்சியைச் சார்ந்த இணைபிரியான் வட்டம் கிராமத்தில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை சரிசெய்ய அரசு முன்வருமா?

**விடை –**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள நிதி நெருக்கடியில் பாபநாசம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியைச் சேர்ந்த இணைபிரியான் வட்டம் கிராமத்தில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை பழுதுநீக்கம் செய்ய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பில்லை.

48—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா 6915–திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சாத்தங்குடி கிராமத்தில் உள்ள நாற்பது குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை –**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அகராத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சாத்தங்குடி கிராமத்தில் உள்ள நாற்பது





குடும்பங்களுக்கு நடப்பு நிதியாண்டில் அரசு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்திரா நினைவு குடியிருப்பு அல்லது பிரதம மந்திரி கிராம வளர்ச்சி (ஊரக குடியிருப்பு) திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

49—

## தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல்

**வினா 15399–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணார்குளம் கிராமத்தில் சுமார் 40 குடும்பத்தினர் குடிசை வீடுகளில் வசித்து வருவதால் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை –**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002—2003 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் தொகுப்பு வீடுகள் பயனாளிகள் தேர்வு செய்யும்பொழுது, மேற்படி 40 குடும்பத்தினருக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க இருக்கன்துறை ஊராட்சி மன்றம் மூலம் கிராம சபை தீர்மானம் நிறைவேற்றி சமர்ப்பிக்கும்பட்சத்தில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின்படி தகுதியான நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிருவாக அனுமதி பெற்று தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்கும்.

50—

## தொகுப்பு வீடுகள்

**வினா 17087–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி, ரெங்கசமுத்திரம் கிராமத்தில் ஆதிதிராவிட

மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை –**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் 2000—2001 ஆம் ஆண்டில் 30 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ரெங்கசமுத்திரம் கிராமத்தில் இதுவரை தொகுப்பு வீடுகள் கட்டப்படவில்லை. இக்கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 30 குடும்பத்திற்கு மட்டும் வீட்டுமனைப் பட்டா உள்ளது. சுழற்சி முறையில் மீண்டும் இவ்வூராட்சி தேர்வு செய்யப்படும்போது இக்கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு வாய்ப்பு உள்ளது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 10—00*

## 2. கவன ஈர்ப்பு

### (அ) வேலூர்–காட்பாடி, பாலாறு குறுக்கே பாலம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55—ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. இன்று கடைசி நாளாக இருக்கின்ற காரணத்தினால் இரண்டுக்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன், திரு. ப. நீலகண்டன் மற்றும் திரு. எம்.எஸ். சந்திரசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ப. நீலகண்டன்.



**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர்—காட்பாடி பழைய பாலம் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டது உடைந்து போனதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பாலமானது வேலூர், காட்பாடி வழியாக ஆந்திர மாநிலத்திற்குச் செல்லும் கடலூர்—சித்தூர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை எண் 9) கி.மீ. 192/0—ல் உள்ளது. வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையே பாலாறு குறுக்கிடுகின்றது. இச்சாலையிலிருந்து பிரிந்து சென்று அச்சாலையிலேயே மறுபடியும் இணையும் பழைய பாலாறு சாலையில் செங்கற்களால் கட்டப்பட்ட வளைவு பாலம் — Arch bridge — உள்ளது. இப்பாலம் அகலம் குறைவாக இருப்பதாலும், பலவீனமாக இருப்பதாலும், இரண்டு சக்கரம் மற்றும் இலகு ரக வாகனங்கள் மட்டுமே சென்று வந்தன. இதன் அருகிலேயே கடலூர்—சித்தூர் சாலையில் ஒரு புதிய பாலம், 10 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இதன் வழியே அனைத்து ரக வாகன போக்குவரத்தும் நடைபெற்று வருகின்றது. 1996 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையின் காரணமாகச் செங்கற்களால் கட்டப்பட்ட பழைய பாலம் உடைந்துவிட்டதால் போக்குவரத்திற்குப் பயனற்றுப் போய்விட்டது. பழைய பாலத்தில் சென்ற போக்குவரத்தும், புதிய பாலம் வழியே செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. இதைத் தவிர்க்க பழைய பாலத்தைத் திரும்ப கட்ட தீர்மானிக்கப்பட்டது. இப்பாலத்தை 14 கோடி ரூபாயில் திரும்ப கட்ட ஒரு கருத்துரு பன்மாநில பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் பிப்ரவரி திங்கள் 2001—ல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறவில்லை. மீண்டும், இக்கருத்துருவைத் தற்போதைய விலை விவரப்படி 19 கோடி ரூபாயில் பன்மாநில பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் எடுத்துக்கொள்ள மத்திய அரசுக்கு ஆகஸ்ட் திங்கள் 2002—ல் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் இப்பாலப் பணி தொடங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. நீலகண்டன்.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடியிலிருந்து, வெளிமாநிலங்களிலிருந்து, புகழ்பெற்ற சி.எம்.சி. மருத்துவமனை உள்ள வேலூருக்கு வருவதென்றால் இரயில் மூலம் வரும் நோயாளிகள், இப்பாலத்தின் வழியாகத்தான் நூற்றுக்கணக்கில் வருகிறார்கள். மேலும், ஆந்திர மாநில எல்லை 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் நாள்தோறும் அதிகமான வாகனங்கள் சென்று வருகின்றன. வேலூர் மாநகருக்கு மாநில அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இரயில் மூலம் வருவதென்றால் காட்பாடி இரயில் நிலையத்தில் இறங்கி இப்பாலத்தின் வழியாகத்தான் வர வேண்டும். போக்குவரத்து அதிகம் உள்ள இப்பாலத்தில் சிறு விபத்து ஏற்பட்டாலும் போக்குவரத்து தடைபடுகிறது. அதனைச் சரி செய்வதற்குப் பல மணி நேரம் ஆகிவிடுவதால் பொது மக்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஆண்டிலேயே புதிய பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்—சித்தூர் சாலையில் வேலூர் அருகே பாலாற்றின் குறுக்கே இடிந்து விழுந்த பழைய பாலத்தை திரும்பக் கட்ட பன்மாநில பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் (Economic and Inter State importance) பரிந்துரைத்து, முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10—05*

எனினும் 23—12—2001—ல் 1990 கி.மீ. மாநில மற்றும் பிரதான மாவட்டச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மேம்பாடு செய்ய மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணையில் இந்தச் சாலை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பாண்டிச்சேரி, தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களையும் இணைக்கும் சாலையாக இருப்பதால் இதன் முக்கியத்துவம் கருதி மத்திய அரசிடம் பரிந்துரைத்து தேசிய நெடுஞ்சாலையாக மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்பொழுது இந்தப் பாலப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.



**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர்—காட்பாடி வழியாக பாலாற்றின் குறுக்கே பத்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு புதிய பாலம் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தப் பாலம் பழுதடைந்து இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் அந்தப் பாலத்தைப் புதுப்பித்து இப்போது மக்கள் இலகுவாகப் பயணம் செய்கின்ற ஒரு சூழ்நிலையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு மேற்கொண்டிருக்கின்றது. ஆனாலும்கூட, பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தருகின்ற மக்கள் பயன்படுத்துகின்ற முக்கிய சாலையாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் புதிய பாலம்கூடப் போதுமானதாக இல்லாத சூழ்நிலையில், ஏற்கெனவே இருக்கின்ற அந்தப் பழைய பாலத்தைப் புதுப்பித்துத் தருவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டிருந்தாலும்கூட அந்த முயற்சி மிக விரைவாக எடுக்கப்பட்டு, அதன் மூலமாக இரண்டு சக்கரம் மற்றும் இலகு ரக வாகனங்கள் மட்டுமே பயன்படுத்துகின்ற வகையில் அந்தப் பாலத்தைப் புதுப்பித்துத் தந்தால்தான் அங்குள்ள மக்களுக்கும், பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தருகின்ற மக்களுக்கும் இலகுவாக இருக்கும் என்ற காரணத்தினால் அந்தப் பழைய பாலத்தைப் புதுப்பித்துத் தருவதற்கும், இன்னொரு புதிய பாலத்தைக் கட்டித் தருவதற்கும் அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிந்து விழுந்த பழைய பாலம் புதுப்பிப்பதற்கு ஏற்றவகையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மீண்டும் ஒரு புதிய பாலம் கட்டுவதற்கு இரண்டு திட்டங்களின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இருப்பினும் வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### (ஆ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் செட்டிக்குளம் சாலை பழுது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரகூர் தொகுதி, ஆலத்தூர் செட்டிக்குளம் சாலையைப் புதுப்பிக்காததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியிலிருந்து பெறப்படுகின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து இனி வருங்காலங்களில் இந்தப் பணியின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப நபார்டு திட்டத்தின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,'ஆலத்தூர்—செட்டிக்குளம்' சாலை பல ஆண்டுகளாகப் பழுதுபட்டிருக்கிறது. வருகிற இந்த நிதி ஆண்டிலாவது அந்தப் பாலத்தை நபார்டு வங்கி மூலமாகச் சேர்த்து, மக்கள் பணியே மகேசன் பணி என்று பணியாற்றிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா காலத்தில், அந்தச் சாலையைச் சீர் செய்து கொடுத்தால் அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும். ஆகவே இந்த நிதி ஆண்டில் சேர்த்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி, ஆலத்தூர்—செட்டிக்குளம் சாலை கிலோ மீட்டர் 0.0 முதல் 13.8 வரை அரியலூர் நெடுஞ்சாலைக் கோட்டப் பராமரிப்பில் உள்ள தார்த்தளமுடைய இதர மாவட்டச் சாலையாகும். இதன் மொத்த தூரம் 13.80 கிலோ மீட்டர் ஆகும். இதில் கிலோ மீட்டர் 0/0, 7/0 வரை சாலை நல்ல நிலையில் உள்ளது. இதில் கிலோ மீட்டர் 7/0, 13/0 வரை ஆறு கிலோ மீட்டர் தூரம் சாலையை நபார்டு திட்டத்தில் மேம்பாடு செய்து தோராயமாக ரூபாய் ஐம்பது இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி முக்கியத்துவத்திற்கேற்ப நபார்டு திட்டத்தின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





முற்பகல் 10—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே அது பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொன்னதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் நல்லுக்குறிச்சி கால்வாய்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. சிவசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.கே. சிவசாமி.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நல்லுக்குறிச்சியில் உள்ள கால்வாயை வெட்டிச் சீர்செய்ய வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லுக்குறிச்சி கால்வாயில் இதுவரை 5,000 மீட்டர் நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுச் சீர் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,760 மீட்டருக்கான சீர் செய்யும் பணி அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. சிவசாமி.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் மிகவும் அவசியமான ஒன்றாகும். நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர், ஒட்டங்குளம், நல்லுக்குறிச்சி, வீராளங்குளம், புளியாண்டார்கோட்டை, சொல்லங்குடி ஆகிய

கிராமங்களில் வாழ்கின்ற இரண்டாயிரம் விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டே பணியை அரசு தொடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள 1,760 மீட்டருக்கான சீர் செய்யும் வேலையை, இப்பணியின் அவசியம் கருதி வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. சிவசாமி.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் செய்வதற்கு உறுதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஈ) வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல், நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. ஞானசேகரன், செ.கு. தமிழரசன் மற்றும் ப. அரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க அரசு சட்டம் இயற்றி ஆணை பிறப்பித்தும் இன்னும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க 9—3—2002—ல் ஆளுநர் உரையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.





அதற்கிணங்க சட்டப் பேரவையில் இதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தை எதிர்த்துக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் போராட்டம் நடத்தியது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆசிரியர்களின் பணி உரிமைகள் காக்கப்படும் என்று வாக்களித்து, அதுபற்றி ஆராய குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதிமொழிகளை ஏற்று கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் 2—9—2002 முதல் போராட்டத்தை விலக்கிக் கொண்டது.

மேற்சொன்ன குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இப்பரிந்துரைகளைப் பரிசீலித்து, முழுமையாக ஏற்று, அரசாணை (நிலை) எண் 279, உயர்கல்வி, நாள் 1—10—2002—ல் அரசு ஆணையிட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் திருத்தச் சட்டம், 2002 மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 2002 ஆகியவற்றுக்குத் திருத்தங்கள் அவசரச் சட்டம் வாயிலாகக் கொண்டு வரப்பட்டன.

திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டு, 16—10—2002 முதல் இச்சட்டம் அமலுக்கு வருவதாக அரசு ஆணையிட்டுள்ளது.

முனைவர் அண்ணாவி சுசீலா திருமாறன், மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மனையியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வரை திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும், முனைவர் எஸ். மகாலிங்கம், வேலூரிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மைய இயக்குநரை அப்பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராகவும் நியமனம் செய்து அரசு ஆணையிட்டது. அவர்கள் பதவி காலம் முடிந்து விட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். பதிவாளர் (பொறுப்பு) ஆக முனைவர் எஸ். சின்னம்மை என்பவரை 6—1—2003 முதல் பல்கலைக்கழகம் நியமித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு குழு --Adhoc Committee-- ஒன்றை உருவாக்கியுள்ளது. உயர்கல்வித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் இதில் உறுப்பினர்கள் ஆவார்கள். 22—1—2003 அன்று பிற்பகல் 3 மணியளவில் இக்குழு உயர் கல்வித் துறைச் செயலாளர் அறையில் கூடியது. இக்கூட்டத்தின்போது திருவள்ளுவர் பல்கலைக்கழகம் குறித்த முக்கிய பொருட்கள் விவாதிக்கப்பட்டன.

[2003 ஜனவரி 31

முற்பகல் 10—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

## (உ) கொடைக்கானல், குன்னூர் அரசு மருத்துவமனைகள், இரத்த வங்கிக் கட்டடம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. ஞானசேகரன், கா. கந்தசாமி, ஏ.கே. செல்வராஜ் மற்றும் கு. அன்பழகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொடைக்கானல், குன்னூர் அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கிக் கட்டடம் கட்டியும், உபகரணங்கள் வழங்கியும் இன்னும் அவை திறக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் உள்ள குருதி வங்கி செயல்படுவதற்கு அனைத்துத் துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மேற்காணும் மருத்துவமனைக்கு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. உரிமம் பெற வேண்டி, உரிமத் தொகையான ரூ.1000 செலுத்தப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசு மருந்து ஆய்வாளர்கள் தணிக்கை செய்து சில குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். இதற்கிடையில் உரிமக் கட்டணத்தை மைய அரசு ரூ.7500 ஆக உயர்த்தியது. உரிமக் கட்டணம் முழுவதும் தற்போது செலுத்தப்பட்டு குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டு உரிமம் வழங்க மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மருந்துக் கட்டுப்பாடு இயக்குநருக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளார். இந்த ரத்த வங்கியை ஆய்வுக் குழு மீண்டும் 24—1—2003—ல் தணிக்கைச் செய்து முடித்துள்ளது. இந்த வங்கிக்கான உரிமம் புதுடில்லி, மத்திய உரிம ஒப்புதல் அதிகாரிகளிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் குன்னூர் அரசு மருத்துவமனையில் உள்ள





குருதி வங்கி செயல்பட அனைத்துத் துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. குருதி வங்கி உரிமத் தொகையான ரூ.7500—ம் செலுத்தப்பட்டு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநருக்கு அனுப்பியுள்ளார். மேற்காணும் மருத்துவமனையின் குருதி வங்கிக்கு உரிமம் வழங்க வேண்டி மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் அவர்களால் 23—1—2003 அன்று மத்திய உரிம ஒப்புதல் அதிகாரி, புதுடில்லி அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் குன்னூர் அரசு மருத்துவமனை குருதி வங்கிக்கு உரிமம் வழங்கப்பட்டு குருதி வங்கி செயல்படத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலை மலைகளின் இளவரசி என்று சொல்வார்கள். மிகப் பெரிய மலை நாடுகளிலே இதுவும் ஒன்று ஆகும். கொடைக்கானலைச் சுற்றியுள்ள கிராமங்கள் பல நூறு கிலோ மீட்டர்களுக்கு பரந்து விரிந்த மலை இடுக்குகளிலே இருக்கின்றன. அதுமாத்திரமல்ல, கொடைக்கானல் ஒரு உலகப் புகழ்பெற்ற, பிரசித்தி பெற்ற மலை நாடாகும். இந்த உலகத்தினுடைய அனைத்து நாடுகளிலிருந்தும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், கொடைக்கானலை வர்ணிக்கிறீர்கள். என்ன வேண்டும் என்று மட்டும் கேளுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. குளிரினைப் பொறுக்காத மக்கள் பல்வேறு நோய்களாலே பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இரத்த வங்கி, கட்டடம் கட்டியும் இன்னும் திறக்காமல் காலதாமதமாவது நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இருக்கக்கூடாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, குன்னூர் மலைகளின் ராணி என்று சொல்லக்கூடிய உதகமண்டலத்தைச் சேர்ந்த ஊர். அங்கேயும் இதே நிலைதான் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, துரிதமாக, போர்க்கால அடிப்படையிலே அந்தக் கட்டடங்களைத் திறக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று மெத்தப் பணிவோடு கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மற்றும் நீலகிரி மலைப் பகுதிகளிலே வாழ்கிற மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற அந்த நல்ல உயர்ந்த நோக்கத்தோடுதான் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த இரண்டு இடங்களிலும் இரத்த வங்கி அமைக்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் இப்போது முடிக்கப்பட்டுவிட்டன. இந்த இரத்த வங்கிகளுக்கு அனுமதி கொடுப்பதற்கு மைய அரசினுடைய மருந்துக் கட்டுப்பாடு இயக்குநருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. நம்முடைய பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் எல்லாம் ஆய்வு செய்து சென்றிருக்கிறார்கள். அந்த ஆய்வு அறிக்கைக்கு அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அந்த ஒப்புதலுக்காகத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, கொடைக்கானல் மற்றும் குன்னூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தக் குருதி வங்கிகளுக்கு உடனடியாக உரிமங்கள் வழங்கப்பட்டுவிடும் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறது.

## (ஊ) நீலகிரி மாவட்டம், அரசு மருத்துவமனைகள், போதிய மருத்துவர்கள் இன்மை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் எச்.எம். ராஜு மற்றும் ஏ.கே. செல்வராஜ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் போதிய அளவில் மருத்துவர்கள் இல்லாதது குறித்த" அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மருத்துவப் பணியிடங்கள் மொத்தம் 51. தற்போது பணிபுரியும் மருத்துவர்கள் 40 பேர். காலியாக இருக்கிற இடங்கள் 11. உதகமண்டலம் அரசு மருத்துவமனையில், சேட் மருத்துவமனையில் 3 பெண் உதவி மருத்துவர்கள், இரண்டு சிறப்புத் தகுதி பெற்ற பெண்





மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 21—1—2003 அன்று நடைபெற்ற கலந்தாய்வின்போது மருத்துவர் எவரும் மாறுதலுக்கு, அங்கே நீலகிரி மாவட்டத்திற்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. அதனால்தான் இந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதிலே தாமதம் ஏற்பட்டுள்ளது. இப்போது அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மண்டலத்தில், உதகமண்டலத்திலே உள்ள அரசு மருத்துவமனையில் 4 இடங்கள் காலியாகவும், நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சருடைய தொகுதியிலுள்ள மருத்துவமனைகளிலே மொத்தம் 5 இடங்கள் காலியாக்வும் இருந்து கொண்டிருக்கின்றன. தற்போது தேயிலை விலை வீழ்ச்சி அடைந்திருக்கிற காரணத்தினாலே நீலகிரி மக்கள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மருத்துவமனைகளுக்கு அவர்கள் சென்று நல்லமுறையிலே சிகிச்சை பெறுகின்ற வகையிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக மருத்துவர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய கலந்தாய்வின்போது மருத்துவர்களை நியமித்தும் அவர்கள் இதுவரையில் பணியிலே சென்று சேரவில்லை என்ற தகவலையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். புதிதாக நியமிக்கப்படுகிற மருத்துவர்கள் மலைப் பிரதேசப் பகுதியான நீலகிரி பகுதியிலே பணிபுரிவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் தொகுதியிலே உள்ள அரசு மருத்துவமனையில் கிட்டத்தட்ட 6 மாதகாலமாகப் பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தாலே, டி.ஜி.ஓ. படித்த மருத்துவர் இல்லாத காரணத்தாலே மேட்டுப்பாளையம் பகுதியில் இருக்கிற மக்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற சங்கடம் எல்லாம் டாக்டர்கள் புதிதாக நியமிக்கப்பட்டாலும் சரி அல்லது ஏற்கெனவே பணியிலே இருக்கின்ற மருத்துவர்களாக இருந்தாலும் சரி ஏனோ இந்த உதகை, நீலகிரி மாவட்டத்திற்குச் செல்வதற்கு மட்டும் தயங்குகிறார்கள். எனவேதான்

[திரு. செ. செம்மலை] [2003 ஜனவரி 31

அங்கே அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதிலே எங்களுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் உணர்ந்து பார்த்துத்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற மலைப் பிரதேசங்கள், இன்னும் கிராமப்புறப் பகுதிகள் ஆகிய இடங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகள் ஆகட்டும் அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகட்டும் அங்கே தற்போது இருக்கின்ற அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு வசதியாக 500 டாக்டர்களை நியமிப்பதற்கு இப்போது புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்பட இருக்கின்றன. அப்படிப் புதியதாக நியமிக்கப்படுபவர்கள் நீலகிரி மாவட்டம் ஆகட்டும் அல்லது மேட்டுப்பாளையம் போன்ற மற்ற பகுதிகள் ஆகட்டும், அங்கே முதன்முதலாக நியமிக்கப்படுபவர்கள் கட்டாயமாக, குறைந்தபட்சம் 2 ஆண்டுகளாவது அங்கேயே அவர்கள் பணியாற்ற வேண்டுமென்ற அந்த நிபந்தனையோடுதான் அவர்கள் இனிமேல் எதிர்காலத்திலே நியமிக்கப்பட இருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே அந்தப் பணியிடங்கள் நிச்சயமாக நிரப்பப்பட்டு அங்கே மருத்துவர்கள் இல்லையென்ற நிலை நிச்சயமாக ஏற்படாத அளவிற்கு அரசு பார்த்துக்கொள்ளும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. செல்வராஜ் அவர்கள் மேட்டுப்பாளையத்திலே பெண் மருத்துவர் இல்லையென்ற அந்தக் குறைபாட்டை இரண்டு நாட்களுக்கு முன்புகூட என்னிடம் எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக அந்த மருத்துவமனைக்குப் பெண் டாக்டர் நியமிக்கப்பட வேண்டுமென்று எங்கள் துறையினுடைய இயக்குநருக்கு நான் கட்டளையிட்டதன் பேரில், அந்த மருத்துவமனைக்கு deputation அடிப்படையிலே ஒரு பெண் மருத்துவர் நேற்று நியமிக்கப்பட்டுவிட்டார் என்ற அந்த நல்ல செய்தியை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன், கவன ஈர்ப்புக் கொடுத்தால்தான் கேட்க முடியும்.



2003 ஜனவரி 31]

## (எ) நீலகிரி மாவட்டம், ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடன் உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கா. கந்தசாமி, வி. ஜெயராமன் மற்றும் இரா.தா. இன்பத் தமிழன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு தாட்கோ மூலம் படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு அவர்களுக்குக் கடன் உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கடந்த நிதி ஆண்டில் 2001—2002—ல் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த 1167 நபர்களுக்கு ரூ.148.60 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.36.65 இலட்சம் மானியமாகவும், மீதி 111.95 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன்களாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1020 பேருக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் மீதமுள்ளவர்களுக்கு தனி நபர்களாகவும் மானியம் மற்றும் கடனாக 25—3—2002 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. அதிலே, அந்த மாவட்ட அமைச்சரான மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரான திரு. கா. கந்தசாமி அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்தி வரவேற்று பேசினார்கள். நடப்பு நிதியாண்டில் 2002—2003—ல் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒப்புதல் அளித்து தாட்கோ மூலம் செயல்படுத்தப்படுகிற மாவட்ட செயல் திட்டத்தின்படி நீலகிரி மாவட்டத்தில் 2064 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.168.31 இலட்சம் கடனாக வழங்கப்படவுள்ளது. இதில் 74.16 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. மேற்கண்ட கடன் தொகையில் 75 சதவிகிதம் சுய உதவிக் குழுக்களுக்கும் மீதமுள்ள 25 சதவிகிதம் தனி நபர்களுக்கும் வழங்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டில் தேசிய துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும்

மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 15 குழுக்களுக்கு ரூ.75 இலட்சம் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டு துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளையும் குழுக்களாக அமைக்கும் பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழக தனி நபர் கடன் உதவி திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சம் தனி நபர் கடன்களாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு படித்த 155 இளைஞர்களுக்கு ரூபாய் 8.91 இலட்சம் செலவில் சிறந்த வேலைவாய்ப்புத் தொழில் பயிற்சி தரப்பட்டது. நடப்பு நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தில் 185 படித்த இளைஞர்களுக்கு ரூபாய் 15.54 இலட்சம் செலவில் வேலைவாய்ப்புத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 43,206 நபர்களுக்குப் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 15.86 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்கள் தொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு தாட்கோ மானியத்துடன் கடன் வசதி செய்து தரவும் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைப் பிரதேசமாகும். அங்கு ஆதிதிராவிடர் பெருமக்கள் பெருமளவில் வாழ்கின்றனர். படித்த இளைஞர்களின் எதிர்கால வாழ்வு கருதி 50 விழுக்காடு கடனை மானியமாக வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரை விட்டு நீலகிரிக்கு எப்போது போனீர்கள்? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர்களுக்கு 50:50 என்ற அளவில், பாதி மானியத்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர்களுக்கு, தனி நபர் கடன் வழங்கக்கூடியதற்கு மானியம் 25 சதவீதம். அதாவது, அவர்களுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாய் மானியமாகக் கிடைக்கும். எவ்வளவு தொகை கடன் பெற்றாலும் ஒருவருக்கு மானியம் அதிகபட்சமாக 25,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த ஆதிதிராவிட இளைஞர்கள் கடன் பெற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகும்போது கடன் தர மறுக்கிறார்கள். அதற்கு, வங்கிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன், வங்கி அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசினார்கள். கடந்த காலங்களில், குறிப்பாக தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல்வேறு கடன்களை முறை தவறி, உண்மைக்கு மாறாக, தவறான முறைகளில் வழங்கியதன் விளைவாக, அதனை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்கிற அடிப்படையில்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வங்கி அதிகாரிகளை அழைத்து நேரடியாகப் பேசி முறையாகப் பயிற்சி பெற்ற, படித்த இளைஞர்களுக்கு தாட்கோ மூலமாகக் கடன் வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## (ஏ) தகுந்த பயிற்சி இல்லாதோர்க்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் சரியான, தகுந்த பயிற்சி இல்லாமல் வழங்கப்படும் ஓட்டுநர் உரிமங்களைத் தடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2003 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் உரிமம் கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் மனு முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, மோட்டார் வாகன விதிகளுக்குட்பட்டு முதலில் பழகுநர் உரிமம் Learners Licence வழங்கப்படுகிறது. பழகுநர் உரிமம் பெற்ற 30 நாட்களுக்குப் பின்னால், மோட்டார் வாகன ஆய்வாளரால் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்ற பின்னரே முறையான ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தகுந்த பயிற்சி இல்லாமல் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த பயிற்சி இல்லாமல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். இப்போது தினம் தினம் பத்திரிகையைப் புரட்டினாலே, பெரிய அளவிலே சாலை விபத்துகள் நடந்து வருவது என்பது அன்றாட நிகழ்ச்சியாக, செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. அதனால், இன்றைக்குப் பல்வேறு வகையிலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள் சேதம், உயிர் சேதங்களெல்லாம் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம், வாகன ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குவதில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படாததுதான். எனவே, அதிக அளவிலே விபத்துகளைத் தடுப்பதன் பொருட்டு ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குவதில் தற்போதுள்ள விதிகளைச் சற்றுக் கடுமையாக்கி, அந்த விதிகளையெல்லாம் மாற்றிக் கொடுத்தால் இந்த விபத்துகள் ஏற்படுவது தடுத்து நிறுத்தப்படும் என்பதுதான் என்னுடைய நிலை. அந்த விதத்திலே கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தற்போதுள்ள விதிமுறைகளை மாற்றுவதற்கு ஆவன செய்யுமா? அதேபோல, அந்தச் சட்ட திட்டங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? ஓட்டுநர் உரிமம் பெறுவதிலே, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியிலே இருக்கின்றவர்களும், அங்கே ஓட்டுநர் உரிமம் வழங்கும் அதிகாரிகளும் ஆகிய இருவரும் ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சரியான முறையிலே உரிமம் வழங்கப்படாத காரணத்தினால்தான், பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. அந்த விதத்திலே, இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளிலே தற்போதுள்ள நிலைமையை மாற்றி அந்தச் சட்ட திட்டங்களையெல்லாம், விதிமுறைகளையெல்லாம் மாற்றுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.



2003 ஜனவரி 31]

முற்பகல் 10—35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவன ஈர்ப்பின்போது குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பிரச்சினைகள் எல்லாம் கடந்த காலத்திலே, கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்தன என்பதெல்லாம் உண்மைதான். அப்படிப்பட்ட நிலையை அறிந்ததற்குப் பின்புதான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது விபத்துகளைப் பெருமளவிலே கட்டுப்படுத்த வேண்டும், விபத்துகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தத் துறைக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி அதற்கான சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி இப்போது நமது போக்குவரத்துத் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விபத்துகளைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிலே ஒரு குறிப்பிட்ட அம்சமாகத்தான் —லைசென்ஸ்— ஓட்டுநர் உரிமம் வழங்குவது குறித்தும் இப்போதிருக்கின்ற விதிமுறைகளை இன்னும் கடுமைப்படுத்தி அதைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இப்போது ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு துறையின் மூலம் — மிகக் கடுமையான நடவடிக்கை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள்: இன்னும் சொல்லப்போனால், கடுமையான நடவடிக்கை மட்டுமல்ல—மிகக் கடுமையான நடவடிக்கைகளை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, அந்த முறையில்லாமல், தவறுதலாக ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு யாராவது அதிகாரிகள் அனுமதித்தார்கள் என்றால், அந்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இப்போது ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலே கடுமையான நடவடிக்கையை, அணுகுமுறையைக் கையாளுகின்ற அரசு, அதே நேரத்திலே ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை அனுமதிப்பதிலே கடுமையான விதிமுறைகளை இன்றைக்குக் கையாண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓட்டுநர் பயிற்சி வழங்கும் பயிற்சிப் பள்ளிகளுக்கு இப்போது 12 புதிய விதிமுறைகளையெல்லாம் உருவாக்கி, அந்த விதிமுறைகளையெல்லாம் கடைப்பிடித்தால்தான் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் வழங்க முடியும் என்ற முறையில்

சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனுடைய தொடர்ச்சியாக இந்த வாரத்திலே, கடந்த 27 மற்றும் 28 ஆகிய 2 நாட்களில்கூட, இதற்காகவே நமது மாநில அளவிலே போக்குவரத்துத் துறையினுடைய வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் வட்டாரப் போக்குவரத்துத் துறை ஆணையாளர் தலைமையில் மாநிலம் முழுவதும் இருந்து வந்திருக்கின்ற உயர் அதிகாரிகளை எல்லாம் கூட்டி இதற்காகச் சிறப்பு ஆலோசனையும், ஆய்வும் செய்யப்பட்டன. அதனுடைய அடிப்படையில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டு, இப்போது ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் வழங்குவதிலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலும், அதேபோலப் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பதிலும் கடுமையான நடைமுறைகளைக் கொண்டு வந்து, விபத்துகள் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மிக்க நன்றி. அந்த விதத்திலே தற்போது நடைபெற்றிருக்கின்ற விபத்துகளில் பெரும்பாலானவை N.H. என்று சொல்லப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பக்கத்திலே மருத்துவமனைகள் இல்லாத காரணத்தினால், விபத்துக்குள்ளாகிறவர்கள், அவர்கள் டிரைவர்களாக இருந்தாலும் சரி, பயணிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் அந்த இடத்திலே அடிபட்டு சரியான சிகிச்சை கிடைக்காமல் இறந்து விடுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விபத்து நடக்கும் இடத்தில் பயணிகளைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளைத் தடுப்பதற்காக ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலும் மற்றும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி





வழங்குவதிலும் கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு கையாள்கிறது. அதையும் மீறி விபத்துகள் நடந்துவிட்டால், நடந்துவிட்ட விபத்திலே பாதிக்கப்பட்டவர்களைக் காக்க உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க, விபத்து அவசரச் சிகிச்சை வசதிகளைச் செய்து தர ஏற்பாடு செய்வதற்கும் இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முயற்சிகளை, சிறப்பான திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்களால் இப்போது தேசிய நெடுஞ்சாலைகளிலே ஏற்படுகின்ற விபத்துகளுக்காக, விபத்து அவசர சிகிச்சை மையங்களை அமைக்க ஏற்பாடு செய்து, தனியார் மருத்துவமனைகளின் உதவியோடு, ஆம்புலென்ஸ் வசதியோடு Para-medical Officers என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதி நேர மருத்துவர்களின் உதவியோடு இன்றைக்கு விபத்து அவசரச் சிகிச்சை மையங்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

முதன்முறையாக, தேசிய நெடுஞ்சாலைகளான, சென்னை—பெங்களூர் நெடுஞ்சாலையிலே, சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலே 13 இடங்களிலே Trauma Care Centre என்று சொல்லக்கூடிய விபத்து அவசரச் சிகிச்சை மையங்களை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்க ஆணையிட்டிருக்கிறார்கள். முதற்கட்டமாக இப்போது 13 இடங்களிலே இந்த Trauma Care Centres-ஐத் திறந்து வைப்பதற்கு, ஆரம்பித்து வைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதிலே இன்றைக்கு 8 இடங்களில் Trauma Care Centres—விபத்து அவசரச் சிகிச்சை மையங்கள்— தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதியிருக்கின்ற 5 இடங்களிலும் மிக விரைவிலே இந்த மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மையங்கள் மாமண்டூர், இரஞ்சி, பெரம்பலூர், ஸ்ரீபெரும்புதூர், திருவலம், இரத்தினகிரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் Trauma Care Centres — விபத்து அவசரச் சிகிச்சை மையங்கள் — இப்போது செயல்பட்டு வருகின்றன. சாரம், விழுப்புரம், காவேரிப்பாக்கம், பள்ளிகொண்டா, புதுக்கோயில் ஆகிய 5 இடங்களில் மிக விரைவில் இந்த மையங்கள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலைகளில் 50 கிலோ மீட்டருக்கு ஒரு மையம் என்ற விகிதாச்சாரத்திலே இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஐ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மின்னழுத்தக் குறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. சி. இராசேந்திரன், திருமதி பூபதி மாரியப்பன் மற்றும் திரு. ப. அரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தொடர்ந்து மின்னழுத்தக் குறைவு ஏற்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 11 கே.வி. மின் பாதைகளில் உள்ள கம்பிகளை அதிகத் திறன் கொண்ட மின் கம்பிகளாக மாற்றும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. எனவே, தற்பொழுது மின் விநியோகம் மேம்பாடு அடைந்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்படாத வகையில் மின் விநியோகம் பராமரிக்கப்படுகிறது.

மேலும், திருச்சிற்றம்பலம் என்னும் இடத்தில் புதியதாக 33/11 கே.வி. புதிய துணை மின் நிலையம் ரூ.110 இலட்சம் செலவில் நிறுவுவதற்கு பணிகள் தொடங்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதனை வரும் 31—3—2003—க்குள் இயக்கி வைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் பேராவூரணியில் உள்ள 66/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த ரூ.629.44 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு, 10—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு வரும் 2003—2004 ஆம் ஆண்டில் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்கூறிய வேலைகள் முடிக்கப்பட்டதும் பேராவூரணி பகுதியில் மின் அழுத்தம் மற்றும் விநியோகம் மேலும் மேம்பாடு அடையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் முழுக்க முழுக்க இப்போது விவசாயத்திற்குத் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் ஆழ்குழாய் மூலமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி, தண்ணீர் பெறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்த ஆண்டே இங்கிருக்கின்ற அனைத்துத் துணை மின் நிலையங்களையும் தரம் உயர்த்தவும், புதிதாகத் துணை மின் நிலையங்கள்—தொடங்கப்பட வேண்டியவற்றை—தொடங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது எடுத்து நிறைவேற்றுமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் அனைத்துத் துணை மின் நிலையங்களையும், அதாவது 33/11 கே.வி. துணை மின் நிலையங்களை 63/13 கே.வி. ஆக உயர்த்துவது இந்த ஆண்டிலேயே செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசானது இந்த ஆண்டில் நிறைவேற்றித் தருவோம் என்று அறிவித்ததற்கு மாவட்டத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, கல்லணை கால்வாய்ப் பாசனப் பகுதியிலே சேர்ந்த பகுதியாகும். இந்த ஆண்டு கல்லணை கால்வாயிலே நிரந்தரமாகத் தொடர்ந்து தண்ணீர் தரவில்லை என்பதை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஆழ்குழாய் கிணறுகளிலேயிருந்து விவசாயம் செய்கின்ற நிலைமை அந்தப் பகுதியில் இருக்கிறது. நெல் பயிர் மட்டுமல்ல, கரும்பையும் விவசாயம் செய்கிறார்கள். கரும்புக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் தரவில்லை என்று சொன்னால், கரும்பினுடைய பிழி திறன்கூட குறைந்து கரும்புக்குக் கிடைக்கிற விலை குறைந்து போகிறது. அது மட்டுமல்ல,

[திரு. ப. அரசன்] [2003 ஜனவரி 31

ஒரு விவசாயினுடைய ஆழ்குழாய்க் கிணற்றிலேயிருந்து, அது சட்டப்படி தவறு என்று சொன்னாலும், மனிதாபிமான அடிப்படையிலே பக்கத்திலே இருக்கிற விவசாயி அந்தத் தண்ணீரைப் பெற்று விவசாயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்து, அதுமட்டுமல்லாமல் ஆழ்குழாய்க் கிணறுகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திலே மின்சாரம் தரப்படும் என்கின்ற உத்தரவாதத்தைத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்தில் எங்கெல்லாம் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறதோ அதெல்லாம் கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் கூறிய பகுதியில் மின் அழுத்தக் குறைவு இருந்தால் உடனடியாக அது சரி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—45*

## (ஒ) நீலகிரி மாவட்டம், மரங்களை வெட்டத் தடையால் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு, திரு. சி. சிவசாமி, திரு. ஏ.கே. செல்வராஜ் மற்றும் திரு. எம்.ஏ. ஹக்கீம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் மக்களின் பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சில்வர் ஓக் போன்ற மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



2003 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

*நீலகிரி மாவட்டத்தில் பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சில்வர் ஓக் போன்ற மரங்களை வெட்டுவதற்குத் தடையேதும் விதிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் தனியார் காடுகள் மற்றும் மலைதளப்பகுதிகளில் மரங்கள் வெட்டுவதை முறைப்படுத்திட பின்வரும் சட்டம் மற்றும் விதிமுறைகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணைகள் நடைமுறையில் உள்ளன:*

*1. தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949 மற்றும் விதிகள்;*

*2. தமிழ்நாடு மலைதள (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு மலைதள (மரங்கள் பாதுகாப்பு) விதிகள் 1957;*

*3. நீதிப்பேராணை மனு எண் 202/95ன் மீது உச்ச நீதிமன்றத்தில் 12—12—1996ல் வழங்கப்பட்ட ஆணை.*

*மேற்குறிப்பிட்ட சட்டம் மற்றும் விதிகளின்படி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு வட்டாட்சியர், மாவட்ட வன அலுவலர், வேளாண்மைச் செயற்பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகியோர் அடங்கிய குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுதான் விதிகளுக்குட்பட்டு மரம் வெட்ட பெறப்படும் மனுக்களின் மீது ஆய்ந்து தக்க ஆணை வழங்கும். அவ்வாணைகளின்படிதான் மரங்கள் வெட்டப்பட வேண்டும். உச்ச நீதிமன்ற ஆணைப்படி, இயற்கையாகத் தோன்றி வளர்ந்துள்ள மரங்களை வெட்ட இயலாது.*

*சில்வர் ஓக் மரங்களைப் பயிரிடுதல்*

*சில்வர் ஓக் மர இனம் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு வளர்க்கப்பட்ட ஓர் இனமாகும். இயற்கைக் காடுகளில் இவ்வகை மரங்கள், தானே தோன்றி வளரும் இயல்புடையவையன்று. தேயிலை, காபி போன்ற தோட்டப் பயிர்களின் ஊடே கோடை காலங்களில் அதிகபட்ச சூரியஒளி மற்றும் தொடர்ச்சியான வறட்சி ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க நிழல் தரும் மரங்களாக இம்மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இம்மரங்கள் அப்பகுதிகளின் மண் வளங்களைப் பாதுகாக்கவும்*

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2003 ஜனவரி 31

உறுதுணையாக உள்ளன: விவசாயிகள் தமது பட்டா நிலங்களிலும் தோட்டங்களிலும் பயிரிட்டு வளர்க்கின்றனர். கட்டுமானப் பணிகளில் முட்டுக்கட்டைப் பலகைகளாகவும் (Scaffoldings) போக்குவரத்து செய்யப்படும் பொருள்களுக்கு ஏதுவான பெட்டிகளாகவும் (Packing cases) இம்மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்படி வகையில் தனியார் காடுகளில் சில்வர் ஓக் மரங்கள் வெட்டப்படுவது தடையேதும் செய்யப்படவில்லை. ஆனால் பல்லுயிர் பரவல், இயற்கைச் சூழல், பசுமைப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதற்குரிய சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி மரங்கள் வெட்டுதல் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்ட ஆட்சியரால் 2002—2003ல் பின்வரும் நாட்களில் கமிட்டி கூட்டங்கள் நடத்தப்பட்டு மரங்கள் வெட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) 15—4—2002

2) 18—9—2002

3) 20—11—2002

4) 24—1—2003

ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள் மரங்கள் விவரம்:

| பொருள் | நீலகிரி வடக்கு கோட்டம் | நீலகிரி தெற்கு கோட்டம் | கூடலூர் கோட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| எத்தனை மனுக்கள் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது | 5 | 4 | 1 | 10 |
| எத்தனை மரங்கள் வெட்ட அனுமதிக்கப்பட்டது | 1731 (சில்வர் ஓக்) | 55 (கற்பூர சீகை) | 75 (சில்வர் ஓக்) | 1861 |

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைதள (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம் 1955ன்படி கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கு இடையிலான கால அளவு இரண்டு மாதங்களுக்கு மேற்படக்கூடாது.



2003 ஜனவரி 31]

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை சமர்ப்பித்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள், அவர்களுடைய சொந்த பட்டா நிலங்களில் அவற்றை வளர்ப்பதற்கு எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது! எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது! அது அவர்களுடைய தேவைகளுக்கு என்று சொல்கிறபோது, அத்தியாவசியமான, தவிர்க்கமுடியாத, கண்டிப்பான, குடும்பத் தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருக்கிறது. ஒரு மலையில் வருவது பாதிக்கப்படலாம்; அல்லது செழிப்பும், மண் வளங்களும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய அளவுக்குக்கூட மரங்கள் வேரோடு எடுக்கப்பட்டு வருகின்றன அல்லது அதனால் பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று சொல்லக்கூடிய பிரச்சினைகள்கூட எழலாம். ஆனால், மழை நீரை எந்த வகையிலும் பாதிக்காத வகையில், ஆனால் அதே நேரத்தில் இந்த மரங்களின் வாயிலாக இவர்கள் —வேறு வழி இல்லாமல்—தங்களுடைய குடும்பங்களுக்கு, தங்களுடைய தேவைகளுக்கு, கட்டாயம் அவசியமான வழக்கமாக, கடந்த காலங்களில் செய்ததைப் போன்றே இன்றைக்கும் தொடர்ந்து அந்தக் கடமைகளைச் செய்தால்தான் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்கிற ஒரு சூழ்நிலை; பட்டா நிலங்களாக இருக்கின்ற காரணத்தினால்; அரசுத் துறைகளில், அரசு சம்பந்தப்பட்ட இடங்களில் அல்லது பொதுவான அரசுக்கு சம்பந்தப்பட்ட உரிமையுடைய இடங்களில் இருக்கும் என்று சொன்னால், கடுமையான பாதிப்பு, அதிலே மக்களிடையே பிரச்சினை ஏற்படலாம் அல்லது ஒருவருக்கொருவர் மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது. அவரவர்களுக்குரிய பட்டா நிலங்களில் இந்த மரங்கள் வளர்க்கப்படுகிற காலத்திலேயே—ஒரு வேளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எதற்காகச் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால்—இது வெட்டப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது, தடை விதிக்கப்படும் என்ற சூழ்நிலை இருக்குமென்று சொன்னால், அதைப் போடுவதற்கு முன்னாலேயே, வளர்ப்பதற்கு முன்னாலேயே அதைத் தடுக்கலாம். அப்படிப்பட்ட ஒரு காலக்கட்டம் இல்லாமல், வளர்ந்து பாதுகாக்கப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு அது கட்டாயம் அவர்களுக்குத் தேவை என்ற சூழ்நிலையில் வெட்டப்பட இருக்கிறபோது, தடை விதிப்பதனால் அவர்களுடைய குடும்பப் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. அதைத் தவிர்த்து, மாற்று வழிகளில் ஏதாவது அவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலினை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—50

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சில்வர் ஓக் மரங்களை வெட்டுவதற்குத் தடை ஏதுமில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வன அலுவலர், வட்டாட்சியர் இவர்களுடைய குழு பரிசீலனை செய்து வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியொரு சூழ்நிலை இருக்குமானால், அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக, இதற்கு அனுமதி அளிக்கக்கூடிய அரசுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி அவர்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கடந்த ஆண்டில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், மரம் வெட்டுவதற்காக நடைபெற்ற அந்தக் கமிட்டி கூட்டங்களில் 10 மனுக்கள் மட்டும் ஏற்கப்பட்டு, சுமார் 1861 மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இது நீலகிரி மாவட்ட மக்களுடைய அந்தக் கோரிக்கைக்கு முழுமையாக ஏற்புடையதாக இல்லை. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் நீலகிரி மாவட்ட மக்கள் தேயிலை விலை வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டு—நொந்துபோன அந்த இதயங்களுக்கு மருந்தைத் தடவுவதுபோல—இந்த சில்வர் ஓக் மரங்களை விற்பதன் மூலமாக அவர்கள் வாழ்க்கையை நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு நீலகிரி மாவட்ட மக்களுக்கு உதவ வேண்டுமென்று ஊட்டி தேயிலையைக் கொண்டுவந்து, நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுடைய இதயத்தில் பால் வார்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்தகால தி.மு.க.





ஆட்சியில் ஏற்பட்ட அந்தப் புண்ணுக்கு மருந்தைத் தடவுகின்ற விதமாக, இந்த சில்வர் ஓக் மரங்களை வெட்டுவதற்கு இருக்கக்கூடிய நடைமுறைகளை இன்னும் கொஞ்சம் எளிதாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நீலகிரி மாவட்ட வனச் சரகங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை அந்தக் கமிட்டி கூடுகிறது. பட்டா நிலத்தைச் சேர்ந்தவர்கள் கொடுக்கின்ற மனுவை ஆய்ந்து, பசுமைப் பாதுகாப்பு, இயற்கைச் சூழல் இவற்றை மனதிலேகொண்டு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இதுவரைக்கும் கடந்த 15—4—2002, 18—9—2002, 20—11—2002, 24—1—2003 போன்ற நாட்களில் இந்தக் கமிட்டி கூடி அனுமதி கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரணாலயம் புதியதாக அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பறவைகள் வரவேண்டும்; அது சரணாலயம் அமைப்பதற்குத் தகுந்த இடமா என்பதை வனத் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அது சரியான இடமாக இருந்தால் அனுமதி கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

## (ஒ) அவினாசி, நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல் அவசியம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு திரு. எஸ். மகாலிங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[2003 ஜனவரி 31

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அவினாசி நகர் பொதுமக்களின் நலன் கருதி, அவினாசியில் கூட்டுறவுத் துறை மூலம் நகரக் கூட்டுறவு வங்கி அமைப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசியில் ஏற்கெனவே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய கிளையும், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளையும், அவினாசி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் கூட்டுறவு ஊரக வளர்ச்சியினுடைய வங்கியும் செயல்பட்டு வருகின்றன. அவினாசி மக்களுடைய அனைத்து நகரக் கூட்டுறவு வங்கியினுடைய நோக்கங்களையும் நிறைவேற்றுகின்ற வகையிலே அவினாசி நகரில் வைப்பு நிதி சேகரித்தும், பொதுமக்களுக்குக் கடன் வழங்கியும் இந்த வங்கிகள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. எனவே, அவினாசி நகரில் நகர கூட்டுறவு வங்கி ஒன்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட சிங்கமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களின் திசை நோக்கி எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

அவினாசி ஒரு பேரூராட்சி ஆகும். இதன் சுற்றுவட்டார மக்கள்தொகை சுமார் 50,000 ஆகும். மக்களின் நலன் கருதி, அரசு மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டாவது நகரக் கூட்டுறவு வங்கி அமைத்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2003 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நகர வங்கி தொடங்கப்பட வேண்டுமேயானால், 10 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் உள்ள பகுதிகளில், 3,000 உறுப்பினர்களைச் சேர்த்து, அதன் மூலமாக 400 இலட்சம் ரூபாயைப் பங்குத் தொகையாகச் செலுத்திடுதல் வேண்டும். 5 இலட்சத்திற்கும் அதற்கு மேல் 10 இலட்சத்திற்குள்ளும் உள்ள பகுதிகளில் 200 இலட்சம் ரூபாயைப் பங்கு முதலீடாக வைப்பதுடன், 2,000 உறுப்பினர்களையும் சேர்த்திடுதல் வேண்டும். அதுமட்டுமல்லாது, 1 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள பகுதிகளில் 100 இலட்சம் ரூபாயையும், 1,500 உறுப்பினர்களையும் சேர்க்கின்ற வகையில் இந்த வங்கிகளுடைய பணிகளெல்லாம் இருக்கின்றன. அதற்கு மேலாக, இந்தப் பகுதியிலே பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மாத்திரமல்லாது, வர்த்தக வங்கிகளான ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, கத்தோலிக்கன் சிரியன் வங்கி, கனரா வங்கி போன்ற வங்கிகளெல்லாம் இந்தப் பகுதியிலே செயல்பட்டு வருகின்றன. எனவே, அப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடு இருக்கிறபோது, அந்த இடங்களிலே இலாபகரமாக இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நடத்த இயலாமை இருக்கின்றது. உறுப்பினர் அவர்களுடைய நல் வேண்டுகோளுக்கிணங்க ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியைப் பெறுகின்ற வகையில், இத்தகைய நடைமுறைகளின்படி அமைக்கப்படுமேயானால், அந்த வங்கிகளை அமைப்பதற்கு அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

### (அ) எடுத்துக்கொள்ளப்பட்டவை நீங்கலாக எஞ்சிய கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான பதில்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, எஞ்சிய கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. சிவசாமி.

[2003 ஜனவரி 31

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது, பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சார்பாக திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 131 முதல் 133 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எண்பத்து எட்டாவது வரையிலான 16 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரனுக்குப் பதிலாக திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் அளிப்பார்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா



அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, 2002—2003—ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது முதல் பதிமூன்றாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (உ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 12—வது பேரவையின் 2001—2003 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதினைந்தாவது முதல் பத்தொன்பதாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

### தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, திரும்பப் பெறுதல். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"7—5—2002 ஆம் நாளன்று அறிமுகம் செய்த, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) திரும்பப் பெற அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைத் திரும்பப்பெறுகிறேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும். திருமதி வி. சிவகாமி அவர்கள்.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வார காலமாக உங்களிடம் மன்றாடியதன்பேரிலே, இந்தக் கடைசி நேரத்திலே எனக்கு ஒரு வாய்ப்பு அளித்திருக்கிறீர்கள், அதற்கு அவையிலுள்ள உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பேசும் வேளையிலே, நான் சொல்வதைக் கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் இல்லையே, என்பதை நினைக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. நேற்றைக்கு அவர்கள் நடந்துகொண்டதை நீங்கள் எல்லாம் பார்த்தீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மக்கள் பிரதிநிதிகளுக்கு எவ்வளவு பாதுகாப்பு நமது அரசு தந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் பார்த்தீர்கள். காலையில் வந்தவுடனே அவர்கள் என்னென்னமோ ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். நான் ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு முன்பாக என்னுடைய மனதிலே உள்ள சில வருத்தத்தைச் சொல்லிவிட்டுப் பேசலாம் என்று இருக்கிறேன். நேற்றைக்கு சி.எம். செல்லுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்தேன். அங்கே டி.வி. எல்லாம் ரெடியாக இருந்தது. அப்போது பக்கத்திலே



உள்ளவர்களைப் பார்த்து இப்பொழுதே ரெடியாக இருக்கிறீர்களே, அவர்கள் எல்லாம் வெளியே வர இரண்டு மணிக்கு மேல் ஆகுமே என்றேன். இல்லை, இப்பொழுது சண்டை போட்டுவிட்டு வெளியே வரப்போகிறார்கள். அதனால்தான் ரெடியாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் அப்போதே கொஞ்சம் தள்ளியிருந்துகொள்ளலாம் என்று எண்ணினேன். ஏனென்றால் என்னால் சீக்கிரம் எழுந்திருக்க முடியாது.

நான் நேற்று கொஞ்ச தூரத்திலிருந்து பார்த்தேன். அருகில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர், தம்பி அவர்கள் கொஞ்சம் ஏமாந்திருந்தால் இங்கே பெரிய சச்சரவே நடந்திருக்கும். இந்த நிலை மாற வேண்டும்.

முற்பகல் 11—05

என்னைப் பொறுத்த அளவில், எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்வது என்னவென்றால், இந்த ஆளுநர் உரையை நான் பத்து முறைக்குமேல் படித்தேன். இதிலே ஏதாவது ஒரு குறை இருக்கிறதா? ஏதாவது ஒரு தவறு இருக்கிறதா என்று பார்த்தேன். அத்தனை திட்டங்களும் பொன்போன்ற திட்டங்கள். நான் சொல்வதை தயவுசெய்து இங்கே உள்ள பத்திரிகையாளர்களெல்லாம்—இந்த நாட்டின் நிலைமையை நிர்ணயிக்கிறவர்கள்; நீங்கள் பத்திரிகைகளில், எப்படி அவர்கள் வெளிநடப்புச் செய்வதை மிகப் பெரியதாகப் போட்டீர்களோ அதேமாதிரி இதையும்—போட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு தாய் கூலி வேலைக்குச் சென்றுவிட்டு, வீட்டுக்குக் களைத்து வருகிறாள். மகள் பள்ளிக்குச் சென்றுவிட்டுவந்து ஓடிப்போய் அவள் மடியில் படுக்கிறாள். அம்மா, நன்றாகப் படித்தாயா என்று தாய் கேட்கிறாள். படித்தேன் அம்மா என்று மகள் சொல்கிறாள். நாளை காலையிலே நீ போகும்போது நான் உணவுக்குத் தயார் செய்யவேண்டும். எழுந்திரு அம்மா என்று தாய் சொல்கிறாள். அவள் எழுந்துகொள்ளும்போது, அம்மா, நான் 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து பள்ளியிலிருந்து வந்திருக்கிறேன், ஏன் இந்தக் கவலையான வார்த்தையை என்னிடம் சொல்கிறாய் என்றாள். அப்போது சொல்கிறாள் தாய், பொறு, இப்போது நீ ஒன்பதாவது படிக்கிறாய், பத்தாவது முடித்தவுடனே நம் மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் உனக்கு மிதிவண்டியைத் தரப்போகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மிதிவண்டியைத் தரப் போகிறார். அந்த மிதிவண்டியிலே நீ அழகாகச் சென்று வருவாய் கண்மணியே, இப்போது ஒரு வருடம் மட்டும் நீ பொறுத்துக்கொள் என்கிறாள். இது தவறா? இந்தத் திட்டம் தவறா?

ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான அரசு விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. இன்று அதற்குச் சொந்தமாகக் கட்டடம் ஆதிதிராவிட மக்களுக்கு 32 இலட்சம் ரூபாயில் கட்டியது தவறா? அதேமாதிரி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 12 இலட்சம் ரூபாயில் கட்டியது தவறா? இப்படி நூற்றுக்கணக்கான கட்டடங்களைக் கட்டியது தவறா? எதைத் தவறு என்று சொல்கிறீர்கள்? ஆளுநர் உரை முடிந்துவிட்டது. அதைத் தமிழிலே படித்ததாகக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டதாகப் பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதற்குப் பின்பாக அந்த ஒன்றையே எடுத்துக்கொண்டு, அதையே கையில் பிடித்துக்கொண்டு, உங்களுக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு நீங்கள் மோசம் செய்கிறீர்களே அது ஏன்?

சமத்துவபுரம் என்று ஒன்றை நீங்கள் கட்டினீர்கள். நான் இப்போதுதான் சட்டமன்றத்திலே முதலாவதாகப் பேசுகிறேன். தயவுசெய்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எனக்குக் கொஞ்ச நேரம் அளிக்க வேண்டும். எனக்கு முழு வாய்ப்பு கிடைக்குமா, கிடைக்காதா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த ஆதிதிராவிட மக்களுடைய பணத்திலே அத்தனையும் கட்டினார்கள். கடைசியிலே அங்கே யாரும் குடிபோகவில்லை. 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. யாருக்கு? அந்த ஆதிதிராவிட மக்களுக்கு. இப்படி நீங்கள் செய்தது நியாயமா? மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று செய்திருக்கிறாரே, தொகுப்பு வீடுகள் என்று, கச்சா வீடுகள் என்று. இது தவறா? எதைத்தான் தவறு என்று சொல்கிறீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள். அம்மா சொல்வது இதுதான். இது நியாயம் இல்லை. இன்று நாட்டினுடைய நிதிநிலைமை என்ன? இந்த நிதிநிலைமையிலும்கூட எத்தனை கட்டடங்கள்; எத்தனை சுகாதார மகளிர் வளாகங்கள், நினைத்துப் பாருங்கள். நெஞ்சில் கை வையுங்கள். எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் சொல்கிறேன், எல்லாத் தோழமைக் கட்சிக்காரர்களுக்கும் சொல்கிறேன். ஓட்டு போடப்பட்டு நாம் யாரால் ஜெயித்தோம்? அந்த நன்றியை மறக்க வேண்டாம். என்னைப் பொறுத்த அளவிலே என்னுடைய உயிருக்கு உத்தரவாதத்தை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு பாதுகாப்போடுதான் இருக்கிறேன். அந்தத் துணிவோடுதான் நான் பேசுகிறேன். இல்லையென்றால் என்னால் பேசவும் முடியாது. வெளியே போனால் எனக்கு போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது. அதனால் என்னுடைய உயிர் தப்பியது என்ற துணிவிலேதான் நான் பேசுகிறேன். எதைத்தான் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை.





அதுமட்டுமல்ல, நீங்கள் செய்தது ஒன்றா, இரண்டா? சொன்னால் ஓராயிரம் சொல்லலாம். எனக்கு ஐந்து மணி நேரம் கூடக் கொடுத்தால் நான் சொல்வேன் அவர்கள் செய்ததையெல்லாம். நீங்கள் ஆதிதிராவிட மக்களுக்குச் செய்த ஒவ்வொரு கெடுதியையும் நாடு அறியும். ஆசிரியர்கள், ஊழியர்கள் எல்லாம் போராட்டம் செய்தார்கள். நீங்கள் இரண்டு சதவீதம் தான் இருக்கிறீர்கள் என்று அம்மையார் அன்றைக்கே சொன்னார்கள். அத்தனையையும் உயர்த்தி ஆயிற்று, மின் கட்டணத்தை உயர்த்தி ஆயிற்று, பஸ் கட்டணத்தை உயர்த்தி ஆயிற்று, அரிசி விலையை உயர்த்தி ஆயிற்று, அந்தப் பாமர மக்களிடம் இருந்து வாங்கி, உங்களுக்கு அத்தனையும்தானே கொடுத்திருக்கிறேன் என்று அம்மா அவர்கள் போன அசெம்பிளியிலே சொன்னார்கள். அவர்கள் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு, அவர்கள் குழந்தைகளுக்கு, அவர்கள் மனைவியருக்கு அத்தனை பாதுகாப்பும் தந்திருக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நன்றாக நினைத்துப் பாருங்கள், அந்தப் பாமர மக்கள் எங்களை நம்பி ஓட்டுப் போட்டார்கள், ஒருவேளை சோற்றுக்கு ஓடி ஓடி அலையும் அந்த மக்கள் ஓட்டுப் போட்டார்கள். நான் உண்மையைச் சொல்கிறேன், மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றிய உண்மையைச் சொல்கிறேன். இந்தக் காலம் உள்ளவரை, அந்த வான் உள்ளவரை, இந்த வையம் உள்ளவரை, நாட்டில் நன்மைகள் தீமைகள் மாறிமாறி வந்தாலும், அவர் புகழ் மாறாது ஐயா, மாறாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் கை தட்டலுக்காகவும், நீங்கள் தொடர்ந்து பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் பேசவில்லை. என்னுடைய உயிருக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காகவும் பேசவில்லை. நான் ஏழையாகப் பிறந்தேனேயொழிய, கோழையாகப் பிறக்கவில்லை.

முற்பகல் 11—10

அந்த இரவு நேரத்திலே, டி.வி.யைப் பொதுமக்கள் பார்த்துவிட்டு, இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் எங்களுக்கு ஓட்டுப் போட்ட மக்களுக்கு நான் ஒன்றும் நலப் பணிகள் செய்ய முடியவில்லையே, அத்தனையும் உங்களுக்கு வாரி வழங்கி இருக்கிறேனே என்று சொல்கிறார் என்று சொன்னார்கள். அன்று என்ன நடந்தது தெரியுமா? என்னுடைய தொகுதியிலே ஏழெட்டு இடங்களிலே ஆசிரியர்கள், பள்ளிக்கூடங்களுக்கு வந்தவுடனே, 10 நாட்கள் ஏன் வரவில்லை பள்ளிக்கூடத்திற்கு, உங்களுக்கு என்ன குறை வைத்தார்கள் அம்மா? உங்களுக்குச் சம்பளம் 10 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள், என்னென்னவோ தருகிறார்கள், உங்களுடைய குடும்பத்திற்குத் தருகிறார்கள், உங்களுக்கு உடம்பு சரியில்லையென்றால்,

டாக்டர் செலவுக்குத் தருகிறார்கள், எத்தனையோ தந்தும் உங்களுக்குப் போதவில்லையா? எங்கள் பிள்ளைகளுக்குச் சரியாகப் பாடம் சொல்லிக் கொடுங்கள், கொடுக்காவிட்டால் விடமாட்டோம், ஒன்பதரை மணியா, நான்கரை மணிக்குப் போகணுமா? அதைக் கடைப்பிடியுங்கள் என்று சொல்லி மக்கள் நின்று கொண்டிருந்தார்கள். எப்பேர்ப்பட்ட விந்தை அது?

அதுமட்டுமல்ல, எங்கள் அம்மா சொன்னார்கள், அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தோமே சம்பளம், அதற்காக மக்களுக்கு அவர்கள் என்ன செய்தார்கள்? ஒரு சத்துணவு டீச்சர், கூடத்திற்குள்ளே வந்தபோது எங்கே 10 நாள் போய்விட்டு வந்தாய் என்று கேட்டதற்கு, நான் போராட்டத்திற்குத்தானே போனேன் என்கிறார். போ, போய் போராட்டம் பண்ணு, நாங்கள் எல்லாம் வரி கொடுத்தோம் என்று சொன்னவர்கள் அல்லவா மக்கள்? முதலமைச்சர் அம்மா, என்ன சொன்னார்கள்? இதய தெய்வம் முதலமைச்சர் சொன்னார்கள், இந்த ஏழையெளிய மக்களிடமிருந்து நாங்கள் வரிப் பணத்தை வாங்கித்தானே உங்களுக்குச் சம்பளம் கொடுத்தோம், அந்த ஏழையெளிய மக்களுக்கு நீங்கள் சரியாகச் சோறு போடுங்கள் என்று சொன்னார்கள். மதிய உணவைப் பற்றிச் சொல்கிறேன். அதனால் இன்றைக்கு எத்தனை பேர் பயன்பெறுகிறார்கள்? பசியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? பட்டினியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? எனக்குத் தெரியும், அந்த மக்களுக்கு இந்த மதிய உணவு போடுவது எவ்வளவு உபயோகமாக இருக்கிறது என்பதை நாடே அறியும். உங்களுக்குத் தெரியாது. அங்குச் சென்று பார்த்தீர்களா? கிராமப்புறத்தைப் பார்த்தீர்களா? அந்த மக்களைப் பார்த்தீர்களா? பார்க்கவே இல்லை. உங்களுக்கு ஓட்டுப்போட்ட மக்களுக்காகப் பேசக்கூட இல்லாமல், சட்டமன்றத்தில் இருக்கும் நீங்கள், எப்படி நாட்டுப்புறத்திற்குப் போய் ஏழையெளிய மக்களைப் பார்க்கப் போகிறீர்கள்? அவர்கள் சொல்கிறார்கள், தாயே, இந்த நாட்டிலே அம்மையார் இருக்கும்வரை, காலங்கள் இருக்கும்வரை, நேரங்கள் இருக்கும்வரை கண்டிப்பாக அவர் நினைவாக நாங்கள் வாழ்வோம். இதைப் பெருமைக்காகச் சொல்லவில்லை ஐயா,

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நாட்டில் பஞ்சம்தான். போன வருடம் என்னுடைய தொகுதியிலே பயங்கரமான குடிநீர்ப் பஞ்சம் இருந்தது. அப்போது குடம் ஒன்று 50 பைசாவிற்கு விற்றது. ஆனால், அந்த டி.வி.யில் என்ன போட்டார்கள்? 5 ரூபாய் என்று போட்டார்கள். உடனே இதை அறிந்த அமைச்சர்



பெருமகன், அவர்கள் அள்ளி வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், சேர்மன், கலெக்டர் இன்னும் கமிஷனர், அத்தனை பேரும் சென்று வீடு வீடாகத் தண்ணீர் கொடுத்தோம். 3 நாட்கள் தண்ணீர் இல்லாததற்கு, வருடம் முழுவதும் உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் பிடியுங்கள் என்று அத்தனையும் வழங்கினோம். எங்கே ஒரு குரல் அழுகுரல் கேட்டாலும் கிட்டேபோய் ஏன் என்று கேட்கும் முதலமைச்சரை ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? உங்களுக்கு ஓட்டுப் போட்ட மக்கள், உங்களுக்காகப் பாடுபடுகிற மக்கள், உங்களுக்காக ஒருநாள் வெயிலிலே நின்று ஓட்டுப் போட்ட மக்களுக்காக வந்து பேச வேண்டும்; என்ன சொல்கிறார்கள்? என்ன நல்ல திட்டம் அறிவிக்கப் போகிறார்கள்? அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் எதைச் செய்யப் போகிறார்கள் என்று கேட்க வேண்டாமா? இதய தெய்வமே நான் ஒன்று சொல்கிறேன், எனக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை, நான் சேற்றிலேயும் கிடந்தவள், இந்தமாதிரி ஏ.சி.—யிலேயும் இருந்தவள். அதனாலே, என்னுடைய தொகுதியைப் பற்றி இவர்கள் உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். எவ்வளவு தூரம் செய்தார்கள்? ஆனால், இன்றைக்கு இவர்கள் பொய்யை எல்லாம் மெய்யாக்கியது யார்? புரட்சித் தலைவிதான். வேறு யாரும் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று நான் நிறைய 'notes' கொண்டுவந்தேன். ஆனால், பேச விடமாட்டார் போல இருக்கிறது.

*முற்பகல் 11—15*

முதலாவது, நமது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஓர் இடத்தில் உட்கார வேண்டும். அந்த இடத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் விவாதம் நடத்தலாம். ஆனால், அவர்கள் இடத்திலிருந்து எழுந்து வந்து இன்னோர் இடத்திலே போய் அவரைக் கொலை செய்ய முயலுவது எவ்வளவு பெரிய அநீதி. இதற்கெல்லாம் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய உயிர் உள்ளவரை, தாங்கள் இவ்வளவு நேரம் கொடுத்ததை நான் மறக்கவே மாட்டேன்.

அதுமட்டுமல்ல, அம்மா அவர்கள் என்னுடைய தொகுதிக்கு அம்பராம்பாளையம் குடிநீர்த் திட்டம் அறிவித்தார்கள். ஆனால் முன்பிருந்தவர்கள் இப்போது வருதுங்க, அடுத்த மாதம் ஜி.ஓ. போட்டுவிடுவோமுங்க என்றார்கள். ஆனால் இதய தெய்வம் முதலமைச்சரான மூன்றாவது மாதமே அந்தத் திட்டத்திற்கு ஜிஓ. போட்டு நிறைவேற்றினார்கள். இன்றோ, நாளையோ, மறுநாளோ—அன்புச்

[திருமதி வி. சிவகாமி] [2003 ஜனவரி 31

சகோதரர் திரு. ஜெயராமன் அவர்களுக்குத் தெரியும்—நம்முடைய மாண்புமிகு உறுப்பினரின் பொள்ளாச்சி தொகுதி அதில் சேருகிறது. தாராபுரம் தொகுதி அதில் சேருகிறது. கிணத்துக்கடவு தொகுதி அதில் சேருகிறது. இப்படி 3 தொகுதிகளும் சேருகின்றன. அதற்கு ரூ.50 கோடி வாரி வழங்கியுள்ளார்கள். தாராபுரத்திலே முன்பு என்ன செய்தார்கள்? இதோ வந்துவிட்டது திட்டம், இதோ ஜி.ஓ. வந்துவிடும் என்றார்கள். மக்களை ஏமாற்றினார்கள். நீங்கள் திருமதி சிவகாமிக்கு ஓட்டுப் போட்டீர்கள் என்றால், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வராது என்றார்கள். அவர்கள் ஆட்சியில் 5 வருடங்களாக இதோ அதோ என்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் காலம் கடத்தினார்கள். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். அவர்கள்தான் போன மாதம் ஜி.ஓ. போட்டு இப்போது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.20 கோடியே 68 இலட்சம் வாரி வழங்கினார்கள். அந்த தெய்வத்துக்கு நான் வணக்கம் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல என்னுடைய தொகுதியிலே ஒரு குட்டி அணைக்கட்டுத் திட்டம் வரப்போகிறது என்று சொல்லி அங்கிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களிடம்—பெயர் சொல்லக் கூடாது—முன்பு நிறையப் பணம் வசூல் பண்ணிவிட்டு, அந்தத் திட்டத்தை அப்படியே போட்டுவிட்டார்கள். குறைந்தபட்சம் அவர்கள் வசூல் பண்ணியது மட்டும் 5 இலட்சம் ரூபாய் இருக்கும். இன்றைக்கு அந்த சின்னகரை ஓடை என்ற திட்டத்தை அம்மா அவர்களிடம் கண்டிப்பாகச் செய்யுங்கள் அம்மா என்று கேட்டதன்பேரில் பழைய குப்பையை எடுத்துப் பார்த்து சிவகாமிக்கு, அவருடைய தொகுதிக்கு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, ஒரு ஓடை 50 வருடங்களாக இதோ வந்து விட்டது, அடுத்த மாதம் பாருங்கள் உங்களுக்கு ஜி.ஓ. வந்துவிடும், அடுத்த மாதம் டெண்டர் விட்டுவிடுவோம் என்று இப்படியே சொல்லி முன்பு ஏமாற்றினார்கள். ஆனால் அந்த செக்கான் ஓடைத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம்தான் நிறைவேற்றினார்கள், இப்போது அதற்கு டெண்டர் விட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

அதேபோல, அலஞ்சியம் பாலம் வேண்டுமென்று 50 வருடங்களாகப் போராட்டம்; போன ஆட்சியிலே 3 முறை போராட்டம்; இதனைச் செய்தார்களா என்றால், இதையும் நிறைவேற்றவில்லை. மாண்புமிகு இதய் தெய்வம் அம்மா அவர்கள் கண்டிப்பாக இந்த நிதி ஆண்டில்



2003 ஜனவரி 31] [திருமதி வி. சிவகாமி]

இதைச் செய்து தருவார்கள் என்று நம்பி இருக்கிறேன். முன்பு எத்தனை எத்தனையோ உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளைச் சொல்லி மக்களை ஏமாற்றினார்கள். இனி மக்கள் ஏமாற மாட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் நான் சொல்வது என்னவென்றால் அம்மா அவர்கள் அன்று பேசினார்களே, அந்தப் பேச்சைத் தயவுசெய்து கிராமப்புற மக்களிடத்திலே சொல்லவேண்டும். அந்தப் பாமர மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள்; அவர்கள் அம்மாவை நம்பி வாழ்பவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எம்.ஜி.ஆருடைய கொள்கையைக் கொண்டவர்கள். அந்த மக்களுக்குக் கண்டிப்பாகப் பாலத்தைக் கட்டி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; அம்மா அவர்கள் நம்முடைய தமிழகத்திலே புதிதாக சுயநிதிக் குழுக்களை பெண்களுக்காக ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதுவரை அடுப்படியிலே முடங்கிக் கிடந்த பெண்கள் இன்று தினம் 30 ரூபாய் சம்பாதிக்கிற திறனை அம்மா அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தத் திறன் மூலமாகத் தன்னிச்சையாகப் பெண்கள் காலூன்றி வாழ வழிவகை செய்திருக்கிறார்கள். கோடானுகோடி மக்களுக்கு நீங்கள் தெய்வம் அம்மா, பெண்களுக்கு தெய்வம் அம்மா நீங்கள். யார் வேண்டுமானாலும் சொல்லட்டும். அம்மாவைப் புகழ்கிறவர்கள் தொகுதிக்கு ஏதோ அம்மா அவர்கள் நிறையச் செய்வார்கள் என்று கருதிப் புகழ்வதாகச் சொல்வார்கள். ஆனால், இல்லவே இல்லைங்க, சத்தியமாகச் சொல்கிறேன். அப்படி இல்லைங்க, ஐயா. என் மனதில் உள்ளதைச் சொல்கிறேன். ஐயா, அப்படிப்பட்டவள் நான். இன்றைக்குப் பெண்கள் நிமிர்ந்து போய் போலீஸ் ஸ்டேஷனில் கேட்கிறார்கள். முதலில் பெட்டிஷன் கொடுக்க வேண்டுமென்றால், எம்.எல்.ஏ. சிபாரிசோடு போக வேண்டும். ஒன்றியச் செயலாளர் சிபாரிசோடு போக வேண்டும். இப்போது அது தேவையில்லை. நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இதோ பாருங்கள், எங்கள் குடும்பத்திலே பிரச்சினை என்று சொல்கிறார்கள். இதற்காகத்தான் இதுபோன்ற மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கினார்கள்.

முற்பகல் 11—20

அதுமட்டுமா? இன்றைக்கு இந்தத் துணி கட்டியிருக்கிறேன் பாருங்கள். இவர்கள் பட்டினியாகக் கிடந்தார்கள். மூன்று வருடங்களுக்கு முன்பு இதற்காக எத்தனை கொலை நடந்தது? எத்தனை தற்கொலை நடந்தது? அதில் ஏதாவது பெரிது பண்ணினார்களா? இப்போது கைத்தறி நெசவாளர்களிடமிருந்து துணி எடுத்து அரசு எத்தனை கோடி

நஷ்டமானாலும் சரி, அவர்கள் வாழ வேண்டும், அவர்களுக்கு வழிவகை செய்ய வேண்டும், இந்த நாட்டினுடைய பிரதிநிதிகள் அவர்கள், இந்த நாட்டிலே பிறந்த மக்கள் யாரும் பட்டினி கிடக்க வேண்டாம் என்பதற்காக இதைச் செய்தார்கள். பாரதி, அவர் பாரதி, தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. அம்மையார் அவர்கள் உட்கார்ந்திருந்த இருக்கையைப் பார்த்துச் சொல்கிறேன், அவர் பாரதி. எனக்குப் பாரதி. நாட்டில் உள்ள இலட்சோப இலட்சம் பெண்களுக்கு பாரதி.

மனுநீதி செய்வதிலே—நான் எழுதி வைத்ததை ஒன்றும் பேசவில்லை. நான் சொந்தமாகத்தான் பேசுகிறேன்—அதாவது நீதி செய்வதிலே, போன மாதம் எல்லாம் பார்த்தீர்கள், தன்னுடைய பிள்ளை தவறு செய்தாலும்கூடத்—தேர்க் காலிட்டு—தன்னுடைய மகனைக் கொன்றான், அந்த மனு நீதிச் சோழன். இன்றைக்கு நான் உயிரோடு நிற்கிறேன் என்றால் அதற்குக் காரணம் அம்மா, முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி. இவர்களைப் பற்றிக் குறை சொல்வதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது இவர்களுக்கு? சொல்லக்கூடாது இந்த வார்த்தைகளை எல்லாம். இவர்கள் நாட்டிற்கு என்ன செய்தார்கள்? தன்னுடைய குடும்பத்தையே தாங்குவதற்கு எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் இவர்கள். ஓட்டுப் போட்ட மக்களுக்காகப் பேச வராத உறுப்பினர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களே, நீங்கள் என்னென்ன செய்தீர்கள் என்று ஒரு பட்டியல் போட முடியுமா? சமத்துவபுரம் ஒன்றைத்தான் சொல்வீர்கள். இப்போது, நீங்கள் கட்டின சமத்துவபுரங்களை எல்லாம் போய்ப் பாருங்கள், பார்த்துவிட்டு. தயவுசெய்து சொல்லுங்கள். நான் உண்மைக்குப் புறம்பாகச் சொல்லவில்லை, உண்மையாகச் சொல்கிறேன். பத்திரிகையாளர் குழுவினர் ஆங்காங்கே இதைப் போய்ப் பாருங்கள், சிவகாமி சொல்வது உண்மையா அல்லது பொய்யா என்று தெரியும்.

வணக்கம் தாயே. எனக்கு ஒரு வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பில் பேசும்போது நீங்கள் வந்தால் எனக்குப் பேச வராது. தெய்வத்தின் முன்னால் பக்தன் போல் இருக்கிறேன். பக்தன் மனதில் இருக்கிற அத்தனையும் தெரியும் தெய்வத்திற்கு, பக்தன் தான் சொல்ல மறுப்பான். மனதிற்குள்ளேயே நினைத்துக்கொள்வான். அதுபோலத்தான் நானும். இதை நான் மனதாரச் சொல்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே, தனக்கு ஓட்டுப் போட்ட மக்களுக்காகப் பேசக்கூட வராத இவர்கள் அன்னையைப் பார்த்துக் கேள்வி கேட்கிறார்கள். ஆளுநர் உரையிலே எது குறை என்றே எனக்குத் தெரியவில்லை. எல்லாம் சொன்னேன்,



உங்களிடம். அம்மா, என்ன குறை சொல்லியிருக்கிறார்கள், ஆளுநர் என்ன குறை சொல்லியிருக்கிறார்கள். ஒன்றுமே இல்லை. எல்லாம், நல்ல நல்ல பொன் போன்ற திட்டங்கள்.

இப்போது ஆதிதிராவிட மக்கள் எவ்வளவு மனம் குளிர்ந்து அந்த சைக்கிளிலே போகிறார்கள். 10 பெண்கள் அப்படியே போகும்போது, எவ்வளவு அழகான காட்சி அது, தெரியுங்களா? என்னை அறியாமல் கண்ணீர் விழுகிறது. இதுபோன்ற ஒரு தெய்வம் அப்போது நான் படிக்கும்போது இல்லையே! இல்லாவிட்டால் நான் பட்டப் படிப்பு அல்லவா படித்திருப்பேன். நான் எட்டாவது தானே படித்துவிட்டேன். எனக்கு இங்கிலிஷ்கூடத் தெரியவில்லையே! தாயே, உங்களைப்போல ஒரு தெய்வம் நான் பார்த்தது இல்லை; அம்மா, பார்த்தது இல்லை.

உளமாரச் சொல்கிறேன். நான் ஒரு தியாகியின் மகள். என் தந்தை சொல்வார், எந்த நேரத்திலும், எந்த வேளையிலும் நீ, எதை நல்லது என்று நினைக்கிறாயோ, அதை அந்த இடத்திலேயே செய்து விடு என்று. நான் இப்போது நினைக்கிறேன். இந்த மண் உள்ளவரை, நாட்டிலே உயிர், ஜீவன் உள்ள வரை—எனக்கு அடுக்கு மொழி எல்லாம் தெரியாது—இந்த வானகமே, வையகமே, இந்த மன்றமே தாயினுடைய புகழ் பாடும், என் உயிர் உள்ள வரை நானும் பாடுவேன். இன்றைக்குச் சொல்கிறேன், அம்மா சொன்ன திட்டத்திலே, அம்மா போட்ட திட்டத்திலே இவர்கள் ஆயிரம் குறைகள் சொல்லலாம்.

*முற்பகல் 11—25*

ஆனால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நான் அப்போதே சொன்னேன். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு அத்தனையும் வாரி வழங்கினார்களே, ஓட்டுப்போட்ட எங்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறார்களே, உங்கள் வேலையையாவது ஒழுங்காகச் செய்யுங்கள் என்று அவர்கள் வேலை வாங்குகிறார்கள். நாம் குழு போட வேண்டியது இல்லை. அவர்களுக்கென்று நாம் ஒரு அதிகாரி வைக்க வேண்டியதில்லை. மக்களே அதிகாரிகளாகிவிட்டார்கள். மாண்புமிகு அம்மா சொல்கிறார்கள், மக்களுக்காகத்தான் நீங்கள் ஊழியர், மக்கள் சேவைக்காகத்தான் நீங்கள் ஊழியர். அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் யாரால் வந்தார்கள்? அந்த மக்களால் வந்தார்கள். அந்த மக்களுக்காகப் பேச வரவில்லையே இவர்கள். இன்றைக்கு என்ன நடக்கிறது இந்த சட்டசபையிலே. நமது

மாண்புமிகு தலைவர் அவர்கள் என்ன அறிவிக்கப் போகிறார்கள், அம்மா அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று கேட்பதற்காக இருக்கிறார்களா? எல்லோரும் வெளியிலே நின்று கொண்டிருக்கிறார்கள். இப்போது நான் வெளியே போனால் தெரியும். ஆனால் எனது இதய தெய்வம் எனக்குக் காவல் கொடுத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இருந்தாலும் உயிர் மேல் எனக்குப் பயம் எல்லாம் கிடையாது உயிர் போய்விடுமே என்று. என்னுடைய உயிர் உள்ளவரை, தாயே, இந்த உலகத்திலேயே காலத்தை வென்று காவியமாகி, ஏழையெளிய கோடிக்கணக்கான மக்களுடைய கண்ணீரைத் துடைத்து, என்னுடைய கண்ணீரையும் துடைத்து இன்று என்னைப் பேச வைத்திருக்கிறீர்கள். ஒரு வருட காலத்திற்கு முன்பே நான் போய்ச் சேர்ந்து இருப்பேன். ஆனால் அம்மா அவர்களுடைய அருளால் நான் உயிரோடு இன்று உங்களோடு பேசுகிறேன்.

இவர்கள் சொல்கிறார்கள். இந்தத் திட்டம் எல்லாமே வேஸ்ட் என்று. எது வேஸ்ட், மாணவர்களுக்கு வ்டுதிக் கட்டியது வேஸ்ட்டா? மகளிர்க்கு சைக்கிள் கொடுத்தது வேஸ்ட்டா? இல்லை சுய உதவிக் குழுக்களுக்காக, கோடிக்கணக்கில் அள்ளிக்கொடுத்து பெண்களை, வாழ வைத்து இருக்கிறார்களே அது வேஸ்ட்டா? முடங்கிக் கிடந்தவர்களை, இனி வாழ்வேயில்லை என்று இருந்தவர்கள் அத்தனைபேரும் உறுப்பினர்களாக்கி இன்று எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு 10,000 ரூபாய் கடன் வழங்கி இருக்கிறார்கள்; மெழுகுவர்த்தி தயாரித்து சம்பாதிப்போம் என்று தைரியமாகச் சொல்லி வாழ்கிறார்களே அது தவறா? எதுதான் தவறு என்று சொல்கிறீர்கள்? அதை இங்கே வந்து சொல்லலாமே? (மணியடிக்கப்பெற்றது) எடுத்தவுடனே ரகளை, எடுத்தவுடனே சண்டை, எடுத்தவுடனே பேச்சு, அத்துமீறிய பேச்சு. புகழப் பிடிக்கவில்லையா? உட்காருங்கள். போற்றப் பிடிக்கவில்லையா? உட்கார்ந்துகொள்ளுங்கள். அம்மாவைப் பார்த்தாலே உங்களுக்கு ஏன் அப்பா அவ்வளவு ஆத்திரம்? என்னால் தாங்க முடியவில்லை, இங்கே உட்கார்ந்துகொண்டு. ஏனென்றால், ஒரு தாயுள்ளம்—தாய்க்குத்தான் தெரியும், தன் பிள்ளையுடைய கஷ்டம் தாய்க்குத்தான் தெரியும். கொண்டு வந்தால்தான் தந்தை. கொண்டு வந்தாலும் கொண்டு வராவிட்டாலும் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதைச் செய்தாலும் மன்னிக்கிறது அம்மா உங்கள் உள்ளம். மன்னிக்கத் தெரிந்த உமது உள்ளம் மாபெரும் கடல், அம்மா மாபெரும் கடல். யாரையும் மன்னிக்கிறீர்களே? எதையும் மன்னிக்கிறீர்களே? என்ன செய்தாலும். சிறையில் வாழ்ந்த போதும்கூட அந்த 28 நாட்கள் எத்தனை





சித்திரவதைப்படுத்தினார்கள்? பாவிகள் என்று அவர்களைச் சொல்லலாமா, சொல்லக்கூடாதா, சட்டமன்றத்திலே. சண்டாளர்கள் என்று சொல்லலாமா. அத்தனையையும் தாங்கிக்கொண்டு அவர்கள் செய்த அத்தனை அக்கிரமத்தையும் தாங்கிக் கொண்டு, எழுந்து எழுந்து பதில் சொல்கிறார்களே, உங்களுக்கு நெஞ்சம் வலிக்கவில்லையா? இரங்கவில்லையா? தயவுசெய்து பத்திரிகையாளர்களே, ஓட்டுபோட்ட மக்களுக்காகப் பேசுவதைப் போட வேண்டாமா? சிவகாமி வந்து அம்மாவுக்கு ஐஸ் வைக்கிறார் என்று நீங்கள் நினைக்கலாம்.. இல்லவே இல்லை. சத்தியமாக இல்லை. நாட்டு நடப்பை நான் அப்படியே சொல்லிவிட்டேன். எந்த ஆட்சி வந்தாலும் சரி, அவர்கள் நல்லது செய்தால் அவர்களைப் போற்றுங்கள். தீமை செய்தால் எதிர்த்துக்கொள்ளுங்கள். பல நல்ல திட்டங்கள் இதில் இருக்கின்றன. பண நெருக்கடி, நிதிப் பற்றாக்குறை இத்தனையும் இருந்தாலும் அந்த ஓட்டு போட்ட மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நான் நன்மை செய்கிறேன் என்று செய்கிறார்கள். எந்த வகையிலாவது அவர்களுக்கு நல்ல திட்டத்தை அறிவிக்கலாம் என்று அறிவிக்கிறார்கள். எத்தனையோ திட்டங்கள் இதில் இருக்கின்றன. இப்போது என்னுடைய தொகுதிக்கே இத்தனை திட்டங்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால் 234 தொகுதிக்கும் எத்தனையோ திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இதுவும் நிதி பற்றாக்குறையில்தான். நீங்கள் எல்லாம் நாட்டு நலனை நிர்ணயிக்கிறவர்கள். காலையில் எழுந்து கிராமப்புற மக்கள்கூட சட்டமன்றத்தில் என்ன செய்கிறார்கள் என்று பத்திரிகையைப் பார்க்கிறார்கள். நன்மையை நன்மையாகப் பாருங்கள். தீமையைத் தீமையாகப் பாருங்கள். இவர்கள் செய்தது நியாயமா? இப்படிக் காலியாக வைத்தது நியாயமா?

முற்பகல் 11—30

மக்கள் மேலே கவலை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பிள்ளைகள் மேலேயே அவர்களுக்குக் கவலை இல்லாததால்தான் அங்கே பெரிய குழப்பம் என்று நிறைய பேர் அவர்களுடைய கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அவர்கள் வீட்டிலேயே மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள், பாவம் என்ன செய்வது? அந்தப் பிரச்சினை இருக்கிறது. அதனால்தான் சட்டமன்றம் வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அவர் நின்றிருக்கவே கூடாது. இப்போது எனக்கு உடல் நலம் சரியாக இல்லை. நிஜமாகச் சொல்கிறேன், எனக்கு 15 நாட்களாக உடம்பு சரியில்லை. நான் சட்டமன்றம் வராமல்

[திருமதி வி. சிவகாமி] [2003 ஜனவரி 31

இருந்தால் என் தொகுதி மக்கள் விடுவார்களா? ஏன் அம்மா பேசவில்லை, இப்படிப் போய் உட்கார்ந்து கொண்டுவிட்டாய்? நீ ஏனம்மா பேசமாட்டேன் என்கிறாய்? சட்டமன்றத்தில் கேளம்மா, பாலத்தைக் கேள், குடிக்கத் தண்ணீர் கேள், அப்படியென்று சொல்கிறார்கள், இவற்றையெல்லாம் அவரிடம் யாரும் கேட்கவில்லையா? கேட்பார்கள். அவர்கள் ஊமைகள் அல்ல, இனி பேசுவார்கள். இதைப் போடுங்கள் நிச்சயம் அவர்கள் பேசுவார்கள்.

எனக்கு இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். நிறைய பேச வேண்டுமென்று எழுதி வைத்திருந்தேன். ஒன்றுமே பேச முடியவில்லை. அதுவும் அம்மா இருந்ததனாலே எனக்கு பேசுவதற்குக் கொஞ்சம் தயக்கம். அம்மா, 'கார் கண்டால் மழை பொழியும்; களம் கண்டால் வீரன் மகிழ்வான்; தேர் வந்தால் வீதி சிறக்கும்; 'திரு' வந்தால் குலம் சிறக்கும்; யார் வருவார் உன் நலம் காக்க தாயே'. நீங்கள்தானே தாயே, அது நீங்கள்தான் தாயே'. வேறு யாரும் இல்லை.

அதுமட்டுமா, பாமர மக்கள், படிப்பறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவைக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்களே, இதைச் சொல்கிறார்கள், முதலில் எடுத்தவுடனேயே 'முதலமைச்சர்' 'முதலமைச்சர்' என்று எழுதுகிறார்கள் என்று. நீங்கள் நினைக்கலாம், சிவகாமி இந்த அம்மாவைப் பாராட்டுகிறார் என்று. இல்லவே இல்லை ஐயா. அந்த அம்மா பேசினார்களே, 2 சதவீதம் இருக்கிற உங்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேனே; (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் 98 சதவீதத்தினருக்கு நான் என்னத்தைச் செய்வேன்? என்னை நம்பியிருக்கிற இந்தப் பாமர மக்களை எங்கே கொண்டு போய் மூடி வைக்கட்டும்? எந்தக் கூடையில் போட்டுக் கவிழ்ப்பேன் என்று கேட்டார்களே, அதில் இருக்கிறது. அந்த ஒரு வார்த்தையில்தான் அம்மா பட்டி தொட்டி கிராமங்கள் எல்லாம் உங்களைப் போற்றுகிறது, புகழ்கிறது, வணங்குகிறது தாயே. ஐயா, இன்னும் கொஞ்சம் பேசிக் கொள்ளட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும் அம்மா.

**திருமதி வி. சிவகாமி:** ஆக, இனி எனக்கு வாய்ப்புக் கிடைக்குமோ, என்னமோ தெரியவில்லை. இருந்தாலும் இந்த அரிய வாய்ப்பை எனக்கு அளித்த இதய தெய்வம் அம்மா அவர்களையும், சபாநாயகர் அவர்களையும் என் உயிருள்ளவரை நான் மறக்க மாட்டேன் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்துள்ளனர். குறிப்பாக, 2002—ல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு திறமையான முறையில் பராமரிக்கப்பட்டு எந்தவித தீவிரவாதம், பயங்கரவாதம் மற்றும் நக்சலைட்டுகளின் தொந்தரவு இல்லாமல் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டதை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாத அளவுக்கு நல்லதோர் ஆட்சியை, செம்மையான ஆட்சியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டு சென்னை மாநகரில் வசிக்கும் சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு, நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் போர்க்கால அடிப்படையில் வழங்கப்பட்ட முறைகளைப் பார்க்கின்றபோது, இந்த அரசு எந்த அளவுக்கு ஏழையெளிய மக்களின்மீது அக்கறை கொண்டுள்ள அரசாக இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய போனஸ் பிரச்சினையை இந்த அரசு கையாண்ட விதத்தை எண்ணிப் பார்க்கின்றபோது உண்மையிலேயே புரட்சித் தலைவி அவர்களுடைய திறமையை இந்த நாடே மெச்சிக் கொண்டிருக்கிறது. எப்படி என்று எண்ணிப் பார்க்கின்றபோது, தொழிலாளர்களுடைய பிரச்சினையை மிகச் சுமூகமான முறையில் தீர்த்து வைத்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.

முற்பகல் 11—35

எல்லாவற்றுக்கும் மேலாகக் கடந்த ஆண்டு ஆசிரியர்களுடைய பிரச்சினை; அவர்களுடைய போராட்டத்தை இந்த அரசு எப்படிச் சமாளித்தது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே எனக்கு முன்பு பேசிய சகோதரி குறிப்பிட்டதைப் போல, இந்தத் தமிழகத்தில் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டாதவர்களே இல்லை

[திரு. பி.எஸ். அருள்] [2003 ஜனவரி 31

என்கிற அளவிற்கு, அவர்களுடைய அமைப்பு அந்தளவிற்கு அமைந்திருந்தது. அந்தப் போராட்டத்தை எப்படியெல்லாம் சமாளித்தார்கள்? அந்தப் போராட்டத்தைச் சமாளிப்பதற்கு இந்தச் சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய உரையை இன்றுகூட எண்ணிப்பார்க்கின்றபோது, இந்த நாடே எந்தளவிற்கு அவர்களுடைய உரையை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நாமெல்லாம் மகிழ்ச்சி அடைந்தே ஆகவேண்டும். அந்த அளவிற்கு அவர்களுடைய பிரச்சினையில் தீர்வு கண்டவிதம்; இந்த சட்டமன்றத்தில் எந்த அளவிற்கு தமிழக மக்கள் மனதிலே ஆழமாக இடம்பெற்றிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, ஏழை எளிய மக்கள் மீது இந்த அரசு எந்த அளவிற்கு பற்றும் பாசமும் கொண்டுள்ள அரசாக இருக்கிறது என்பதற்கு உதாரணமாக இந்த ஆசிரியர்களுடைய போராட்டத்தைச் சமாளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகம் முழுவதும் இந்த அரசின் சார்பில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அது எந்தளவிற்கு இன்று வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது, சென்ற ஆண்டுகூட என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் அந்த மருத்துவ முகாம் நடந்தது. அன்று அந்த முகாமில் மொத்தமாகப் பயனாளிகளாக வந்தவர்கள் 4 ஆயிரத்து சொச்சம் பேர்தான். ஆனால் இந்த ஆண்டு என்னுடைய தொகுதியிலே இரண்டு ஒன்றியங்களில் தனித் தனியாக இந்த இலவச மருத்துவ முகாமை நடத்தினோம். ஒரு முகாமிலே மட்டும் 4 ஆயிரத்து சொச்சம் நபர்களும், இரண்டாவது முகாமில் கிட்டத்தட்ட 7 ஆயிரம் பயனாளிகளும் வந்து பயன் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறபோது, தமிழகத்திலே இலவச மருத்துவ முகாமுக்கு இந்த அரசின் சார்பில் நடைபெற்ற அந்த மருத்துவ முகாமிலே எந்த அளவிற்கு மக்கள் ஈடுபாட்டுடன் இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது இந்த அரசை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், பொருளாதார நெருக்கடி எந்த அளவுக்கு இருந்தாலும், சென்ற ஆண்டு தீபாவளிக்கு காவிரி டெல்டா பாசன விவசாயக் குடும்பங்கள், 10 இலட்சம் ஏழை எளிய குடும்பங்கள் பயன்பெறும் வகையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ரூபாய் 21 கோடி செலவில் அவர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கியதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த நாடே பாராட்டியது. இது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.



2003 ஜனவரி 31] [திரு. பி.எஸ். அருள்]

ஆளுநர் உரையிலே பக்கம் 11—ல் இந்த ஆண்டு நடவு செய்த சம்பா பயிர்களில் 40 சதவிகித அளவிற்கு மட்டுமே காப்பாற்றப்படலாம் என்பது தெளிவாகி உள்ளது என்று குறிப்பிட்டதைப் பார்க்கிறபோது, இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏழை மக்களின் பக்கம் இல்லாமல் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டிருக்கிறது, ஆளுநர் உரை சரியாக இல்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால், ஆளுநர் அவர்கள், உரையைப் படிப்பதற்கு முன்பே வெளிநடப்புச் செய்துவிட்ட எதிர்க்கட்சிகள் அதிலே இருக்கின்ற ஷரத்துகளை இன்னொரு முறையாவது அவர்கள் படித்து நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் வைக்க ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இந்த அரசு குறிப்பாக 40 சதவிகிதம் மட்டுமே காப்பாற்றப்படும் என்கின்ற நிலையை முன்னேற்பாடாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் விவசாயிகளுக்கு நல்லதொரு பலனையும் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு மத்திய அரசிடம் ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிற மாநில அரசுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002 டிசம்பர் திங்களில் டெல்லியில் நடைபெற்ற ஐம்பதாவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில், பத்தாவது திட்டக் காலத்திலேயே மகாநதி மற்றும் காவிரி நதிகளை இணைக்கும் வகையில் நதிகளை இணைக்கும் இத்தொடர் பணியை முடிக்க வேண்டுமென மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளதையும், மேலும் தென்னக தீபகற்பத்தில், மேற்கு நோக்கிப் பாயும் பம்பா அச்சன் கோயில் நதியை, வைப்பாறு நதியுடன் இணைப்பது போன்ற பணிகளை பத்தாவது திட்டக் காலத்திலேயே செய்து முடிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டதையும் பார்க்கிறபோது, அது அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையில் பட்டிருப்பதை எண்ணி மிகவும் ஆனந்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக சென்னை மாநகர் தவிர, 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

|திரு. பி.எஸ். அருள்| [2003 ஜனவரி 31

*முற்பகல் 11—40*

அதற்கு மேலாக லாட்டரிச் சீட்டுக்குத் தடை விதித்த விதத்தை எண்ணுகின்றபோது, அரசுக்கு எவ்வளவோ வருமானங்கள், வரிகள் வந்தாலும்கூட, எந்த வகையில் அந்த வரிகள் வந்தாலும்கூட, அந்த வரி இந்த அரசுக்குத் தேவையில்லையென்று ஒரு நல்ல திட்டத்தோடு இந்த லாட்டரிச் சீட்டுக்குத் தடை விதித்ததை எண்ணிப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே இருக்கின்ற ஏழை மக்கள், பாமர மக்கள் இந்த அரசை வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பத்திரிகையாளர்கள் அந்தப் பத்திரிகையிலே பிரசுரிப்பது இல்லை. இந்த அரசு எந்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிறதோ அதைப் புறக்கணித்துவிட்டு, எதிர்க்கட்சிகள் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறதோ அதைத் தலையங்கமாகப் போட்டுவிடுகின்ற ஒரு நிலைதான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த நிலையை அன்பார்ந்த பத்திரிகைத் துறையினர் மாற்றிக்கொள்ள வேண்டும். அரசு செய்கின்ற நல்லதை மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கூறவேண்டும். அதில் ஏதாவது தவறு இருந்தால் நீங்கள் சுட்டிக்காட்டுவதற்கு இந்த அரசு எந்த நேரத்திலும் உங்களுக்குத் தடையாகவோ, தயக்கமாகவோ இருந்தது கிடையாது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஏரி குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளதைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். மற்றும் மகளிர் சுய சார்புக் குழு கிராமந்தோறும் ரூபாய் 80 ஆயிரம் செலவிலே அவர்களுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கின்ற ஒரு திட்டம்; இது அவர்களுக்குக் கூட்டம் நடத்துவதற்கு மட்டுமே கட்டிக் கொடுக்கப்படவில்லை. கூட்டமாக இல்லாமல், அந்த ஏழை எளிய மகளிர் சுய சார்புக் குழுவைச் சேர்ந்த மகளிர் அந்தக் கிராமத்திலே சிறுசிறு சுப நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்வதற்கும் ஏதுவாக அமைகின்ற வகையிலே, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்கின்ற வகையிலே அதுபோன்ற கட்டடங்களை இந்த அரசு அவர்களுக்கு ரூபாய் 80 ஆயிரம் செலவிலே ஒவ்வொரு கட்டடத்தையும் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்த அளவிலேகூட சுய சார்புக் குழு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளிலே முடித்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டம் என்னுடைய தொகுதியிலே வருகின்ற



2003 ஜனவரி 31] [திரு. பி.எஸ். அருள்|

காரணத்தால், ஒரு ஐந்து நிமிடம் இந்தப் புதிய வீராணம் திட்டத்தைப் பற்றி மட்டும் பேசுவதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சரியாக ஐந்து மணித் துளிகளில் முடித்துவிடுங்கள். இது எதிர்பாராமல் உங்களுக்கு வந்த வாய்ப்பு. (சிரிப்பு)

**திரு. பி.எஸ். அருள்:** இந்த வீராணம் திட்டம் என்பது வேறு, அது வேறு. வீராணம் திட்டம் என்று சொன்னாலே அது பலருக்கு கிலி பிடித்து விடுகின்ற ஒரு திட்டமாக அந்த வீராணம் திட்டம் இருந்தது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எல்லாம் அது ஒரு திட்டம். ஏனென்றால் தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் வீராணம் திட்டம் என்ற ஒரு திட்டம் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம் தோல்வியடைந்த நிலையிலே அதிலே அரசுக்கே ஈனப்பெயர், அவப்பெயர் கிடைத்தது. வீராணம் திட்டம் என்று சொன்னால் அது ஊழல் என்கின்ற ஒரு நிலை இருந்தது. அந்த நிலை மாற்றப்படவேண்டும் என்பதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டம் என்ற ஒரு திட்டத்தை 720 கோடி ரூபாய் செலவிலே இங்கே துவக்க உள்ளார்கள். அதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு அடிப்படைத் தேவைகளை வைத்துத்தான் அந்தத் திட்டத்தைத் துவங்குவார்கள். ஆனால் தி.மு.க. வினுடைய அரசால் அப்போதிருந்த கருணாநிதி அவர்கள் அந்த வீராணம் திட்டத்திலே அங்கே அடிப்படைத் தேவைகளை ஒன்றுமே செய்யாமல் குழாய் அமைப்பதிலேயே, குழாய் வடிவமைப்பதிலேயே அவருடைய நேரத்தைச் செலவிட்டு அதில் பலகோடி ரூபாய் ஊழல் செய்யமுடியுமா என்கிற ஒரு நிலையிலேதான் இருந்தாரேயொழிய, இந்தத் திட்டத்தை நல்லமுறையில்போட்டு சென்னை மாநகருக்குக் குடிநீர் கொண்டுவரவேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கோடு செயல்படாத அரசாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு வீராணம் திட்டத்திலே ஊழல் செய்துவிட்டது என்று குற்றம் சாட்டப்பட்ட அரசு என்பது இந்தியா பூராவும் தெரியும். வீராணம் திட்டத்திலே ஊழல் செய்த அரசு தி.மு.க. அரசு என்பது பலதரப்பு மக்களாலே அறியப்பட்ட விஷயம். அதனாலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை எப்படியாவது நல்லமுறையிலே செயல்படுத்தி, பெயர்பெற்று விடுவாரோ என்ற நோக்கத்தோடு அனைத்து எதிர்க்கட்சிகளும் வரிந்துகட்டிக்கொண்டு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதாரண ஒரு

தலைவியல்ல. இரவு அவர் உறங்குவதற்கு முன்புகூட என்ன செய்தியை வெளியிடுகிறார்கள் என்று உற்று நோக்குகின்ற, உலகமே பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு புதுமையான பெண்ணாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர் தூங்குவதற்கு முன்பு கொடுக்கிற செய்திதான் மறுநாள் சில பத்திரிகைகளைத் தவிர, பல பத்திரிகைகளில் தலையங்கமாக வந்துகொண்டிருக்கிறது. இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இந்தத் திட்டம் எப்பேர்ப்பட்ட ஒரு திட்டம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது, ஒரு மனிதனுக்குக் குடிநீர் எவ்வளவு அவசியமானது, அதுவும் 50 இலட்சம் மக்களுக்கு இந்தக் குடிநீர் கிடைப்பதற்கு, வழிவகை செய்கின்ற இந்த அரசைப் பாராட்ட மனம் இல்லாதோர் ஒரு சிலர்; குறிப்பாக நான் அந்தப் பாட்டாளி மக்கள் கட்சியினரைக் கேட்கிறேன்; இரண்டு தினங்களுக்கு முன்புகூட இங்கே சேப்பாக்கம் கெஸ்ட் ஹவுஸ் அருகிலே அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். எதற்காக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்? ஏன் இதை நடத்தினார்கள் என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலேதான் எனக்கு ஓர் உண்மை தெரிகிறது. ஏனென்றால் இது எங்கு இருக்கிறது? அம்பு விட்டவர்கள் யார்? எய்தவர்கள் யார் என்பதை நான் ஒரு நிமிடத்திலே இரண்டு நிமிடங்களிலே விளக்கியாக வேண்டுமென்ற நோக்கத்தோடு இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு பத்தே பத்து நிமிடம் கொடுத்தீர்களென்றால், இந்த வீராணம் திட்டத்தைப்பற்றி நான்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை இருக்கிறது. தயவுசெய்து இரண்டு மணித்துளிகளிலே முடித்துவிடுங்கள்.

*முற்பகல் 11—45*

**திரு. பி.எஸ். அருள்:** நான் சிறு வயதிலிருந்து இந்த வீராணம் ஏரியைப் பற்றி நன்கு உணர்ந்த காரணத்தினாலும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், அதனுடைய உபரி நீர் அதாவது என்னுடைய தொகுதியின் வழியாக அது கடலிலே கலக்கின்ற ஒரு நிலை இருப்பதாலும் இந்த வீராணம் திட்டத்தைப் பற்றிக் குறை கூறுகின்றவர்களுக்கு ஒரு நல்ல சொல்லாக அமையும், ஒரு நல்ல பதிலாக அமையும் என்ற நோக்கத்தோடு இந்தக் கருத்தை எடுத்து வைக்க நான் ஆசைப்படுகிறேன்.



கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரி அதற்கு முன்பு வீரநாராயணபுரம் ஏரி என்று இருந்தது. விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள், அதுபற்றிய விளக்கங்களை எல்லாம் மானியக் கோரிக்கை வருகிறபோது நீங்கள் விரிவாகப் பேசலாம். ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் கடந்துவிட்ட காரணத்தினாலும், என்னை ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று இட்ட அன்புக் கட்டளையினாலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் என் தொகுதியினுடைய பிரச்சினைகளை ஒரு நிமிடத்திலே சொல்லி முடித்துக்கொள்ள நான் விழைகிறேன். எனது தொகுதியினுடைய பிரச்சினை; 1992—ல் போடப்பட்ட சாலைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள், அதை எல்லாம் நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்துவிடுங்கள். உங்களுடைய தொகுதி தொடர்பான கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நாளைய மறுதினம் கடலூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைக்கவும், 135 கோடி ரூபாய் செலவில் புதிய நலத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கவும் வருகை தர இருக்கிறார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்து, கடலூர் மாவட்டமே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது என்பதை வேண்டி விரும்பிச் சொல்லி, எனக்கு வாய்ப்பு அளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் உவந்தளித்த உரையின்மீது ஆளும்கட்சி கொண்டு வந்துள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய நிதிநிலை அறிக்கை என்பது ஒரு புதினம் என்றால் ஆளுநர் உரை என்பது அதற்கான முன்னுரை. இந்த முன்னுரையிலேயே நடப்பாண்டில் இந்த ஆட்சி தரப் போகிற நல்ல திட்டங்களை, செயல்முறைகளை நாம் புரிந்துகொள்வதற்கான ஒரு முன்னோட்டத்தை உணரமுடியும். அந்த வகையிலே இந்த ஆளுநர் உரை என்பது வருங்கால அரசு நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துகிற அந்தத் திட்டங்களை முன்வைக்கிற நல்ல உரையாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து காலத்தின் அருமை கருதி இரத்தினச் சுருக்கமாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல வேண்டும் என்று விழைகிறேன்.

இந்த ஆளுநர் உரை இந்த மாமன்றத்திலே வழங்கப்பட்ட நாளிலேயே முக்கிய எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும், அதோடு இன்று தோழமை கொள்ளத் துடிக்கிற தோழமைக் கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன. ஆளுநர் தேவை இல்லை, ஆட்டுக்கு தாடி தேவை இல்லை, நாட்டுக்கு ஆளுநர் தேவையில்லை என்று அண்ணா சொன்னார் என்பதையே சொல்லிக் கொண்டிருக்கிற முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் ஆளுநர் உரை அன்றே அவர்களுடைய கட்சியை வெளிநடப்புச் செய்யச் செய்தார். ஆளுநர் தேவையில்லை என்பவர்களுக்கு ஆளுநர் உரை தமிழிலே வேண்டும் என்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநரே தேவையில்லை என்பது அவர்களுடைய அடிப்படைக் கொள்கை. ஆளுநர் உரையைத் தமிழிலே தா என்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது? எப்பொழுதுமே முரண்பாடுகளின் மூட்டையாகவும், குழப்பங்களின் குட்டையாகவும், ஒரு மாறுபட்ட, எதிலேயும் சந்தர்ப்பவாதத்தின் சிகரமாக இருக்கக்கூடிய தன்மை உடையவராகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி இருக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்று. அவர் குழம்பிய குளமாக இருப்பதனாலேதான் இன்றைக்கு சாத்தான்குளத்திலே நிற்பதற்கு, நீந்துவதற்குத் தடுமாறுகிறார்; ஓடுவதற்கு வழி தேடுகிறார்.

முற்பகல் 11—50

ஆளுநர் உரையிலே பல நல்ல திட்டங்கள் இருக்கின்றன. அதற்கு முன்னாலே, தலித்துகளின் பார்வையிலே, ஒடுக்கப்பட்ட மக்களின்





பார்வையிலே ஒரு Ambedkarist—ன் பார்வையிலே, இந்த அரசு அடித்தள மக்களுக்குச் செய்திருக்கிற சில திட்டங்களை நான் பாராட்டியாக வேண்டும். கடும் நிதி நெருக்கடியிலும் பல கோடி செலவழித்து ஏழை எளிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு 11,12 ஆம் வகுப்பு படிக்கின்ற அந்த மாணவிகளுக்கு மிதி வண்டி தருகிற திட்டத்தை இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும் செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டிலும், நடப்பு ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் அதில் உறுதிபூண்டிருக்கிறது. நான் அதை மனப்பூர்வமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு மேலே, ஆதிதிராவிட தலித் உயர்படிப்பு படிக்கிற மாணவ மாணவிகளுக்கு தொழிற் படிப்பு படிக்கிற மாணவ மாணவிகளுக்கு, கல்விக் கடன் என்று வழங்கப்பட்டு வந்தது. அந்தக் கல்விக் கடனைக் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பல முட்டு வேலிகள் போட்டுத் தடுத்து நிறுத்தியது. வருமான உச்சவரம்பு கொண்டு வந்தது. எல்லாத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை முட்டுக்கட்டையாகப் போட்டது. அன்றைக்கு அதைப் போராடி நாங்கள் நீடிக்கச் செய்தோம். ஆனால், இன்றைக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அது கடனாகவே இருக்க வேண்டாம், முழு மானியமாகத் தருகிறோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) பல கோடி செலவழித்து, இந்த நிதிநெருக்கடியிலும் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை அடித்தளத்து மக்களின் வளர்ச்சியிலே, ஒரு சமூக மறுமலர்ச்சியிலே அக்கறை உள்ள எவரும் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்குக் கல்வியைத் தருவதன் மூலம்தான் ஒரு சமூகப் புரட்சியை உருவாக்க முடியும் என்று இந்த மன்றத்தில் படமாக இருந்துகொண்டிருக்கிற எங்கள் தானைத் தலைவர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் மிக உறுதிபடச் சொன்னார்கள். அந்தக் கனவை நிறைவேற்றுகிற வகையிலே இன்றைக்கு அடுத்த பணியாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தன்னுடைய தொகுதியிலே ஆதிதிராவிட மாணவர்களுக்கு, மாணவிகளுக்கு விடுதி கட்டித் தருவதற்குக் கட்டாயமாக 12 இலட்சத்தை ஒதுக்க வேண்டும், மீதி 16, 17 இலட்சத்தை இந்த அரசு தந்து 30 இலட்சத்திற்கு மேலே—அவர்களுக்கு நிரந்தரமாக நல்ல சூழ்நிலையை படிப்பதற்கு உருவாக்குகிற வகையிலே—ஒரு நல்ல கட்டடத்தை உருவாக்கி, விடுதி கட்டித் தருவோம் என்கிற அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஒரு தொகுதியிலே மிகக் குறைந்தபட்சம் 30 இலட்சம் செலவழிக்கிற வகையிலே, 200—க்கும் மேற்பட்ட

[திரு. செ.கு. தமிழரசன்] [2003 ஜனவரி 31

தொகுதிகளிலே ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு விடுதிகள் கட்டப்பட்டு, நெடிந்துயர்ந்து இருக்கிறதென்று சொன்னால், ஆதிதிராவிட மக்களின் அடுத்த தலைமுறையை, மேம்பட்ட தலைமுறையாக (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுவதற்கு இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை, ஒடுக்கப்பட்ட மக்களின் அக்கறையிலே, அவர்களுடைய நலனிலே உண்மையான அக்கறை கொண்ட யாரும் பாராட்டியே ஆக வேண்டும்.

அதற்கு மேலே, ஒரு நாளைக்கு சுமார் 80 இலட்சம் ரூபாய்க்கு மேலே செலவழிக்கிற வகையிலே ஒரு நாளைக்கு 11 கோடி வட்டி கட்டுகிற அரசாக—கடந்தகால அரசு செய்த தவறினால், ஒரு நாளைக்கு 11 கோடி வட்டி கட்டுகிற—அரசாக இருக்கிற இந்த அரசு ஒரு நாளைக்கு 80 இலட்சத்திற்கும் மேலே செலவழித்து வறுமையிலே உழன்று கொண்டிருக்கிற அடித்தளத்து மக்களுக்கு, பட்டியினிலே தவிக்கிற மக்களுக்குச் சோறு போட முன்வந்திருக்கிறது என்று சொன்னால், இதைப் பாராட்டுவதற்கு, மனிதநேய உணர்வு இருக்க வேண்டாமா? மனிதநேயத்திலே பட்டினி என்று சொன்னால்—பட்டினி, பட்டினி என்று கூக்குரல் இட்டார்கள்—பட்டினிக்கு உடனடியாக என்ன வேண்டும்? பட்டினிக்குத் தீனி வேண்டும். பட்டினிக்குச் சோறிடுதல் வேண்டும். பட்டினிக்கு உணவு வேண்டும். உடனடியாக ஒரு தாய் உள்ளம் படைத்த தமிழக முதல்வர் ஒரு நாளைக்கு 80 இலட்சம் ரூபாய், இந்த நிதிநெருக்கடியிலே செலவழிக்கிற வகையிலே சோறு போடுவதற்கு முன்வந்தால், அதைக் குறை சொல்கிறார்கள். தட்டு ஏந்த வைத்துவிட்டார்களே என்கிறார்கள். உலகம் முழுவதும் உண்ணுகிறவன் தட்டிலேதான் உண்ண வேண்டுமே தவிர எவனும் தரையிலே போட்டு உண்ண முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரண உண்மை. உலகம் முழுவதும் உண்பவர்கள் தட்டிலே வைத்துத்தான் உண்ண வேண்டும். தட்டிலே வைத்து உண்ணாமல் வேறு எதிலே வைத்து உண்ணுவது? இவர்கள் ஊனப் பார்வையாலே எதையும் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். பார்வையிலே ஊனமுற்றவர்கள். ஆகவேதான், இப்படிப்பட்ட திட்டங்களைக் குறை சொல்வதையே வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11—55*

திருவாரூர் மாவட்டத்திலே பட்டினிச் சாவுகள், பட்டினிச் சாவுகள் என்று பட்டியல் தருகிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். திருவாரூர்



2003 ஜனவரி 31] [திரு. செ.கு. தமிழரசன்]

மாவட்டத்தில் தான் நானும் சட்டமன்ற உறுப்பினர். அதிலேயும் மிகப் பெரிய தொகுதியே என்னுடைய தொகுதிதான். முழு நிலங்களே என்னுடைய தொகுதிதான் — நன்னிலம். ஆனால், அந்தத் தொகுதியிலே இதுவரையிலேயும் ஒரு பட்டினிச் சாவும் இல்லை. என்னுடைய தொகுதியிலே மட்டும் இந்தப் பட்டினிச் சாவு ஏன் இல்லை என்று எனக்குப் புரியவில்லை. மற்ற தொகுதிகளிலே மட்டுமே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொகுதியிலே மட்டுமே இந்தப் பட்டினிச் சாவுகள் வருகிறதே, அது எப்படி என்ற அந்த மர்மமே எனக்குத் தெரியவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலேயும் அந்த நீண்ட என்னுடைய தொகுதியிலே ஒரு பட்டினிச் சாவும் — அவர்களுடைய பட்டியலிலே — இல்லை. என்ன காரணம்? இந்த அரசு வந்தவுடனேயே 360 கோடி ரூபாயை, விவசாயிகளுக்கு வட்டியை, தள்ளுபடி செய்தது.

கடந்த முறை வெள்ளத்திலே வீழ்ந்து கிடந்தபோது திருவாரூர், நாகை, தஞ்சை மாவட்டங்களுக்கு, ஒருங்கிணைந்த அந்தத் தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்கு ஒரு ஏக்கருக்கு வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு 3,000 ரூபாய் வீதம் இந்தப் புரட்சித் தலைவி அரசு வழங்கியது. இதற்கும் மேலே வறட்சி வந்தபோது ரூபாய் 24 கோடிக்கு வறட்சித் திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு அறிவித்தது. 360 கோடி ரூபாய் வட்டித் தள்ளுபடி; ஒரு ஏக்கருக்கு 3000 ரூபாய் வெள்ளத்திலே வீழ்ந்தவர்களுக்கு, வெள்ளத்திலே அவதிப்பட்டவர்களுக்கு நிவாரணம். இன்றைக்கு ரூபாய் 24 கோடியிலே வறட்சி நிவாரணம். இவ்வளவுக்கும் மேலே இன்றைக்குப் பட்டினியிலே இருப்பவர்களுக்கு உணவு. வேறு என்ன தர முடியும்?

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்காக இன்றைக்கு இருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியைவிட மிகஅதிகமாகப் போராடியவர்கள் யார்? எப்போதெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்வை நோக்கி ஓடும், நடக்கும். எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ அந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினை முட்டுக்கட்டையிலே மூழ்கும். இதுதானே கடந்தகால வரலாறு. இன்றைக்கும் காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்காக ஒரு நீண்ட தொலைநோக்கோடு, உறுதியோடு உச்ச நீதிமன்றத்திலேயே அதற்கான உரிமையைப் பெறுகிற வகையிலே ஒரு மிகப் பெரிய சாதனையைப் படைத்துக் காட்டியிருப்பது புரட்சித் தலைவியின் அரசு அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்வதற்கு நாளாகும். அதற்கு முன்னாலே ஒரு சின்ன, வேண்டுகோளை புரட்சித்

[திரு. செ.கு. தமிழரசன்] [2003 ஜனவரி 31

தலைவி அரசுக்கு நான் முன்வைக்க விரும்புகிறேன். வெள்ளம் வருகிறபோது பாதிக்கப்படுவதும், வறட்சி வருகிறபோது பாதிக்கப்படுவதும் திருவாரூர், தஞ்சை, நாகப்பட்டினம் விவசாயிகளுக்கு வாடிக்கையாக இருக்கின்றது. அவர்கள் காவிரி நதிநீரையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற விவசாயிகள். ஆகவே, அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக, வறட்சி வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, இவற்றையெல்லாம் மீறி அவர்கள் விவசாயத்திலே ஈடுபடுகிற வகையிலே நீங்கள் 10 கிராமங்களை உள்ளடக்கி ஒரு சமுதாய bore; 1 இலட்சம் ரூபாயில் ஒரு சமுதாய bore—க்கு ஆகலாம். ஒரு சமுதாய bore ஏற்படுத்தி ஒரு ஆண்டுக்கு ஆயிரம் bore-கள் என்று சொன்னாலும் உங்கள் காலத்திலே நீங்கள் பல்லாயிரக்கணக்கான சமுதாயப் bore-களை, "புரட்சித் தலைவி சமுதாய bore" என்று அந்த bore-ஐ உருவாக்குவீர்களேயானால் நிரந்தரமாகவே வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, அவர்களுக்கு வாழ்வு அளிக்கிற வகையிலே இந்தப் bore இருக்கும். புரட்சித் தலைவர் இருந்த போது இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே கைவிடப்பட்டது. அந்தச் சின்ன வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குக் கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தை வெறும் அரசியலாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். எதுவுமே கட்டாயமாகத் திணிக்கப்பட்டால் தவறு. கட்டாயத் திருமணம் தவறு; கட்டாயமாக தொழிலைப் பாதிக்கும் வகையில் ஆதிக்கம் செய்வது, ஒரு தொழிலிலே ஈடுபடுத்தக் கட்டாயப்படுத்துவது தவறு. எதுவுமே தவறு. இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் என்பது அரசமைப்புச் சட்டத்திலேயே இருக்கிற ஒன்று. ஒன்றும் புதிதான செய்தி அல்ல. எதையுமே கட்டாயப்படுத்தினால் தவறு. அதிலே ஒரு சின்னத் திருத்தத்தை புரட்சித் தலைவி அவர்கள் செய்தால் போதும். முன்கூட்டிப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்கிற அந்தச் சின்னத் திருத்தத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தால், வேறு எதுவும், வேறு ஒருவரும் ஒன்றும் சொல்ல முடியாது.

நான் கேட்கிறேன், இன்றைக்கு அதை அவ்வளவு பெரிய அரசியல் ஆக்குகிற திராவிட முன்னேற்றக் கழகம், 1991—96—லே தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி புரிந்தபோது இங்கே ஒரு அற்புதமான திட்டத்தை, பெரியார் விரும்பிய திட்டத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய திட்டத்தை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வலியுறுத்திய திட்டத்தை, இந்தச் சட்டமன்றத்திலே



2003 ஜனவரி 31] [திரு. செ.கு. தமிழரசன்]

அவர்களால்தான் முடியும் என்ற அளவிலே கொண்டு வந்தார்கள். அர்ச்சகர்களிலே இடஒதுக்கீடு தந்து, வேத ஆகமக் கல்லூரியை உருவாக்கவேண்டுமென்பதற்காக, திட்டத்தைக் கொண்டு வந்து, நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, வேத ஆகமக் கல்லூரியை உருவாக்குவதற்கு இந்த அரசு 1991—95—ல், புரட்சித் தலைவி அரசு ஆவன செய்தது. அதற்குப் பின்னால் வந்த அரசு அதை நடைமுறைப்படுத்தவில்லை. உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய காலத்திலேதான் உச்ச நீதிமன்றத்திலேயும் தீர்ப்பு வந்தது, வேத ஆகமக் கல்லூரியை வைக்கலாம் என்று. ஆனால் 5 ஆண்டு காலத்திலே, இப்போது பெரிதாகப் பேசுகிற, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சம உரிமை வேண்டுமென்று பேசுகிற, பக்கம் பக்கமாய்க் கட்டுரை எழுதுகிற, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி, 5 ஆண்டு காலமாக அந்த வேத ஆகமக் கல்லூரியைப் பற்றிப் பேசியதும் இல்லை, வாய் திறந்ததும் இல்லை, கருத்துச் சொல்லியதும் இல்லை, நடைமுறைப்படுத்தியதும் இல்லை. உச்ச நீதிமன்றத்திலே அதற்குத் தடையில்லை என்று சொன்னபோதும் அதைக் கிடப்பிலே போட்டார்கள். அதை மீண்டும் நீங்கள் கொண்டுவந்து திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்கிற உணர்வை நான் இங்கே பிரதிபலிக்க விரும்புகிறேன்.

நண்பகல் 12—00

தமிழகத்திலே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை வேகப்படுத்த வேண்டும். இலட்சக்கணக்கான எக்டேர் நிலங்கள் தமிழ்நாட்டிலே பயிரிடப்படாமல் அவை வெறும் வறட்சிப் பிரதேசமாய் வறண்டு கிடப்பதோடு விவசாய அடித்தளத்து மக்களின் வாழ்விலும் வறட்சியை உருவாக்குகிற, வீணாய்க் கிடக்கிற நிலங்களாக இருக்கின்றன. அதை மேம்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குகிற வகையிலே மத்திய அரசோடு சேர்ந்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் ஏழை எளிய மக்களுக்கு முன்னுரிமை தருகிற வகையிலே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே புரட்சித் தலைவி அவர்கள் சுயநிதிக் குழுக்களுக்கும் அவற்றைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படித் தருகிறபோது தலித்துகள் உள்ளடக்கிய விவசாயக் கூலிகள் இந்தியாவிலே, தமிழ்நாட்டிலே 100—க்கு 70 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறார்கள் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, தலித்துகள் உள்ளடக்கிய கூட்டுறவுப்

பண்ணைகளுக்கும் இந்த நிலங்களை வழங்குவதற்கான முன்னுரிமையை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*1995*—லே இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிற்கே முன்னுதாரணமான ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஏழை, எளிய அடித்தளத்து மக்களுக்குக் கடன் தருகிறபோது, விவசாயக் கூலிகளுக்குக் கடன் தருகிறபோது, அவர்களுக்குக் கடனாகத் தருவதைவிட கூட்டுறவு வங்கிகளிலே ஒரு ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக அவர்கள் வாங்குவதற்கு ஏற்ப நிலத்தையே வாங்கித் தரலாம், ஒரு ஏக்கர் வரையிலே நிலத்தையே வாங்கித் தரலாம் என்கிற ஒரு திட்டத்தை இந்த மாமன்றத்திலே *1995*—லே புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். நாங்கள் எல்லாம் பாராட்டினோம். அதற்குப் பின்னாலே வந்த அரசு அதை அப்படியே கிடப்பிலே போட்டது. இப்போது புரட்சித் தலைவி அரசு மறுபரிசீலனை செய்து ஏழையெளிய அடித்தளத்து விவசாயிகளுக்கு, குறிப்பாக தலித்துகளுக்குக் கடனாக வழங்குவதைவிட ஒரு ஏக்கர் நிலத்தை அவர்கள் கையிலே ஒப்படைக்கிற வகையில், நிலவள கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது அடிப்படைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அவற்றை வழங்குகிற வகையில் அதை மீண்டும் நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற என்னுடைய ஆதங்கத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இப்படிப்பட்ட ஏழையெளிய மக்களுக்கு, நிலம் இல்லாத ஏழையெளிய மக்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு *50* சென்ட் அல்லது அதனுடைய விலைக்குத் தகுந்த மாதிரி ஒரு ஏக்கர் நிலமாகவே வழங்கிட இந்தத் திட்டம் அறிவிப்புச் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்த அரசு அதை உயிர்ப்பித்து வழங்கி வருவதை அறிந்து நான் மகிழ்வுகொள்கிறேன். இப்படிப் பல திட்டங்களை நீங்கள் நடைமுறைப்படுத்தினாலும்கூட, அது பொதுமக்களுக்கு இப்படி இருக்கிறது என்பது தெரியாத வகையிலே இருக்கிறது. ஏழையெளிய பாமர மக்களுக்குத் தெரிகிற வகையிலே பிரச்சாரம் செய்ய வேண்டும். மிகப் பெரிய அளவிலே அதற்கான பிரச்சாரம் இருக்க வேண்டும். விளம்பரம் இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** இந்த மாமன்றத்திலே கருத்துச் சொல்வதற்கு, இங்கே இருக்கிற அனைத்து உறுப்பினர்களுக்கும், அனைத்து உரிமைகளும் இருக்கின்றன. நேற்றைக்குத் தமிழ் மாநில காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைவர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அவர்களுடைய கருத்துகளை, கட்சியின் கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். அதை எதிர்கொள்கிற, பதில் சொல்கிற பக்குவம் எதிர்க்கட்சியினருக்கு இருக்க வேண்டும். அதைத் தவிர்த்து, இதை ஒரு வன்முறைக் கூடமாக்கி சட்டப் பேரவைக்கு வருகிறபோதே சண்டை போடுவதற்கு வழி எப்படி, சண்டை போடுவதற்குக் களம் எது என்கிற வகையிலே அல்லது வெளிநடப்புச் செய்வதற்கு என்ன வழி என்று இந்த இரண்டு வழிகளையே ஒரு இலட்சியமாகக் கொண்டிருக்கிற கட்சிகள், அங்கிருந்து பாய்ந்து வந்து, பேசிய ஒரு உறுப்பினரைத் தாக்க வந்து, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், அதிலும் சட்டமன்றப் பேரவையினுடைய துணைத் தலைவராக இருந்த, முன்னாள் துணைத் தலைவராக இருந்த, இன்றைக்கு உறுப்பினராக இருக்கிற திரு. பரிதி இளம்வழுதி போன்றவர்களும் மிகக் கடுமையான முறையிலே இங்கே நடந்துகொண்டதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இங்கே பேசுகின்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு உரிமை தருவதும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதும் ஒரு மிகப் பெரிய ஜனநாயகக் கடமை. இன்றைக்கு, தமிழக முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையிலே அந்த ஜனநாயகக் கடமையிலே மிக, மிக, மிக, மிக, — *100* சதவீதத்திற்கு மேலே — அப்பட்டமான அக்கறை உள்ளவர்கள் என்பதை நாம் அறிவோம்.

*பிற்பகல் 12—05*

ஒரு சட்டத்தின் ஆட்சி என்பதற்கு எது எடுத்துக்காட்டு? காவல் நிலையங்கள்தான் எடுத்துக்காட்டு. கடந்த கால ஆட்சியிலே காவல் நிலையங்களெல்லாம் கட்சியினுடைய ஒன்றிய அலுவலகங்களாக, வட்ட அலுவலகங்களாக இருந்தன. ஆனால், இன்றைக்கு ஆளும் கட்சிக்காரர்கள் தலையீடு ஒரு காவல் நிலையத்திலே இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின் ஆட்சி, சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது. எந்தத் தலையீடும் இருப்பதாக யாரும் இதுவரையிலே, இந்த அவையிலேகூடச் சொல்ல முடியாது. அப்படி சட்டம் ஆட்சி புரிந்துகொண்டிருக்கிற இந்த அவையிலே, முதலமைச்சர்

அவர்கள் அதற்குரிய ஒரு சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கிற இந்த அவையிலே, இந்தக் கொடூரங்கள் நிகழ்கின்றன என்று சொன்னால், இந்தக் கொடூரங்களுக்கு முடிவு காண வேண்டும். இதற்கு நீங்கள் தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும்; அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை நான் இங்கே முன் வைக்க விரும்புகின்றேன்.

சமீபத்திலே, சில நாட்களுக்கு முன்னால் சுயநிதிக் கல்லூரிகள் சங்கம் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. அதிலே, நாங்கள் இடஒதுக்கீட்டைப் பின்பற்றமாட்டோம் என்ற ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். துணைவேந்தர் அவர்கள்கூட, பல.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்துவிடுங்கள். ஒரேயொரு நிமிஷம்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஆக, இடஒதுக்கீட்டு முறைக்கு எந்தப் பங்கமும் வராமல், எந்த ஆபத்தும் வராமல் நீங்கள் இந்த அரசின் கல்விக் கொள்கைகளைச் செயல்படுத்துகிற வகையிலே அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை, வழியைக் கொண்டு வர வேண்டுமென்பதை இங்கே நான் என்னுடைய கருத்தாக முன் வைத்து வாய்ப்புத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, நன்றியோடு அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அறைகளிலே இருந்து கேட்டுக்கொண்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அவைக்கே வரலாம் என்கிற அழைப்பை இப்போது விடுக்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கடந்து 3 நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்கு இப்போது எனது பதிலுரையை அளிக்கத் துவங்குகின்றேன். இன்றைக்கு எனக்கு எதிரே ஒரு விந்தையான காட்சியைக் காண்கின்றேன். எதிர்க்கட்சி வரிசைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. இப்படி அவைக்கு வராமல் புறக்கணித்து விட்டால், காலியாக எதிர்க்கட்சி வரிசைகளைப் பார்த்தால் நான் கவலை கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கருதுவார்களேயானால் அவர்கள் ஏமாந்துதான் போவார்கள்; ஏமாற்றம்தான் அடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இங்கே காலியாக இருக்கின்ற இந்த வரிசைகளைக் கண்டு நான் சிறிதும் கவலைப்படவில்லை. காலியான இந்த எதிர்க்கட்சி வரிசைகள் எதனைக் காட்டுகின்றன? இரண்டு விஷயங்களை எல்லோருக்கும் காட்டுகின்றன. ஒன்று, நம்மை எதிர்ப்பதற்கு தமிழ்நாட்டில் யாருமே இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் காட்டுகின்றன. நம்மை எதிர்க்கும், திறமையோ, திராணியோ, துணிவோ, தகுதியோ யாருக்கும் இல்லை என்பதை இந்தக் காலியான வரிசைகள் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்களித்து இந்த அவைக்கு அனுப்பிய தொகுதி மக்களுக்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே இந்தக் காலியான இருக்கைகள் காட்டிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நான் எனது உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் யாருக்காக இந்த உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். நம் மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக இந்த உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே வந்து அமர்ந்தால் என்ன? அமராவிட்டால என்ன? எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? அவர்களுக்காக நான் இங்கே பேசவில்லை. நான் தமிழ்நாட்டு மக்களுக்காகப் பேசுகிறேன். என்னுடைய பேச்சு தொலைக்காட்சி மூலமாக மக்களுக்குப் போய்ச் சேரும். தொலைக்காட்சி மூலமாக என்று ஏன் சொல்லுகிறேன்? பத்திரிகைகளில் பல வகை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—10

பத்திரிகைகளில் அவர்களுடைய உரிமையாளரின் பாலிசி—கொள்கை—என்னென்னவோ அதற்கேற்பத்தான் செய்திகளை வெளியிடுவார்கள். நான் நிருபர்களைக் குறை சொல்வதே கிடையாது. நிருபர்கள் பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? நிருபர்கள் பல பேருக்கு இந்த அரசு மீது நல்லெண்ணம் உண்டு. என் மீது நன்மதிப்பும் உண்டு. அவர்கள் நல்ல செய்திகளை உண்மையான செய்திகளை உள்ளபடியே எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பத்திரிகை அலுவலகத்தில், editorial desk—ல் எல்லாம் மாறிவிடுகிறது. ஆகவே பத்திரிகைகள் மீது நான் என்றைக்கும் நம்பிக்கை வைத்தது

இல்லை. இப்போதும் வைக்கவில்லை. தொலைக்காட்சி இருக்கின்றது. அந்தத் தொலைக்காட்சி மூலமாக இங்கே நான் ஆற்றுகின்ற உரையும் சொல்லுகின்ற கருத்துகளும் மக்களுக்குப் போய்ச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நமக்குத் தேவை. அது எனக்குப் போதும்.

இந்தச் சட்டமன்றப் பேரவை கூடுகிறது என்று சொன்னால் அது யாருக்காகக் கூடுகிறது என்பதை அனைத்து உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும், உணர வேண்டும். குறிப்பாக எதிர்க்கட்சி வரிசையில் அமரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இந்த அவைக்குச் செல்லாவிட்டால் முதலமைச்சர் வருத்தப்படுவார், ஏமாற்றம் அடைவார், கவலைகொள்வார் என்று நினைக்கிறார்கள். இந்த அவை எனக்காகவா கூடுகிறது? இந்த அவை எனக்காகவும் கூடவில்லை; அமைச்சர்களுக்காகவும் கூடவில்லை; எந்தத் தனிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும் கூடவில்லை; எதிர்க்கட்சித் தலைவர்களுக்காகவும் கூடவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காகத்தான் இந்த அவை கூடுகிறது. மக்கள் பிரச்சனைகள் இங்கே விவாதிக்கப்பட வேண்டும். மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். மக்களுக்கான திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான இந்த அவை கூடுகிறது. அண்மைக்காலமாக — குறிப்பாக இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல்— நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்க்கின்றபோது ஓர் ஆழமான சந்தேகம் எழுகின்றது. தமிழ்நாட்டில் ஒரு பிரதான எதிர்க்கட்சி இருக்கின்றதா? இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒரு பிரதான எதிர்க்கட்சி இருக்கின்றதா என்ற ஐயம் எழுகின்றது. பிரதான எதிர்க்கட்சி என்று தங்களைத் தாங்களே கூறிக் கொள்பவர்கள் இந்த அவையின் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள். நான் கேட்கின்ற கூர்மையான கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாதபோது இந்த அவையையே புறக்கணித்துவிட்டு ஓட்டம் பிடிக்கிறார்கள், வெளிநடப்புச் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்குள்ளேயிருந்து அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்ற மறுக்கிறார்கள். இந்தச் சட்டப் பேரவைக்குள்தான் அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றத் தவறுகிறார்கள் என்று சொன்னால், வெளியேகூட அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றத் தவறிவிட்டு தேர்தலில்கூட நிற்கமாட்டோம் என்று தேர்தலையும் புறக்கணிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்களும் எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறோம். குறிப்பாக 1996 முதல் 2001 வரை நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஒரு தேர்தலைக் கூட



நாங்கள் புறக்கணித்தது இல்லையே! ஒரு தேர்தலைக்கூட சந்திக்கப் பயந்து நாங்கள் ஓட்டம் பிடித்தது இல்லையே! வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் தேர்தல் என்று வந்தால், இடைத்தேர்தல் என்று வந்தால் தவறாமல் ஒவ்வொரு தேர்தலிலும் நாங்கள் போட்டியிட்டு இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலைக் கண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே பயந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலைச் சந்திக்கப் பயந்து ஓட்டம் பிடித்தது இல்லை.

ஆனால் இன்றையதினம் தி.மு.க. நிலையைப் பார்க்கின்றபோது உள்ளபடியே சொல்லவேண்டுமானால் பரிதாபமாக இருக்கின்றது. இன்றைக்கு தி.மு.க. சட்டமன்றத்திற்குள்ளேயும் செயல்படமுடியவில்லை; சட்டமன்றத்திற்கு வெளியேயும் செயல்படமுடியவில்லை. அரசியல் கட்சி என்று சொல்லிக் கொள்கின்ற ஓர் இயக்கம், ஆற்ற வேண்டிய எந்தக் கடமையையும் அவர்கள் செய்யவில்லை என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? தலைமை சரியாக இல்லை; தலைமை சரியில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12—15*

தி.மு.க. தலைவர் என்ன சொல்கிறார்? அவர் பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார். இனிமேல் இலக்கியத்திற்குத்தான் முதலிடம் அளிப்பேன்; அரசியலுக்கு இரண்டாவது இடம்தான் என்று கூறிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்லவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதியே சொல்லியிருக்கிறார். பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். இனிமேல் இலக்கியத்திற்குத்தான் முதலிடம் என்று சொன்னால் அவர் ஏன் இன்னும் எம்.எல்.ஏ. பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஏன் தி.மு.க. கட்சித் தலைவர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் ஈடுபடுபவர்கள் அரசியலில் இருப்பவர்கள் குறிப்பாக ஓர் இயக்கத்திற்கே, ஒரு கட்சிக்கே தலைவராக இருப்பவர்கள் அரசியலுக்குத்தான் முதலிடம் தர வேண்டும். அதுதான் அவர்களுடைய கடமை. அதைத்தான் இந்த நாடு அவர்களிடம் எதிர்பார்க்கிறது. அதைத்தான் அவர்களுடைய தொண்டர்கள் அவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், கட்சித் தலைவராக இருப்பவர் வெளிப்படையாகவே சொல்கிறார்; எம்.எல்.ஏ.—ஆக இருந்து கொண்டு அவர் சொல்கிறார்; தொகுதி மக்களை மறந்து விட்டு அவர் சொல்கிறார்; இனிமேல் எனக்கு இலக்கியம்தான் முதலிடம், எனக்கு இலக்கியம்

தான் முக்கியம், என்னைப் பொறுத்தவரை இலக்கியத்திற்குத்தான் முதலிடம், அரசியலுக்கு இரண்டாவது இடம் என்கிறார். இந்தச் சட்டமன்றத்திற்கு வருவது இல்லை. தொகுதி மக்கள் பிரச்சினைகளைப் பற்றி இங்கே பேசுவது இல்லை. அப்போது அவருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த தொகுதி மக்களை யார் கவனிப்பது?

சரி, கட்சித் தலைவரே இப்படி என்று சொன்னால், அவருக்கு அடுத்தபடியாக அந்தக் கட்சியின் தலைவர் என்று யாரைக் கருதுகிறார்கள்? அவருடைய மகனைத் தளபதி என்று அழைக்கிறார்கள். தளபதி என்பவர் யார்? தளபதி என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன? ஒரு படைக்கே தலைமை ஏற்பவர்; படைக்கு முன்னால் நின்று, முன்னின்று அந்தப் படையை நடத்துபவர்தான் தளபதி. ஆனால் இங்கே பார்க்கிறோம். இந்தத் தளபதி எப்போதாவதுதான் இந்த அவைக்கு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வந்தால் முன்னால் அவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமருவது இல்லை. ஒதுங்குகிறார்; பதுங்குகிறார்; எங்கோ பின் வரிசையில் அமர்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தளபதி எங்கே இருக்கிறார் என்று தேடித் தேடி கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தளபதி இங்கே நடைபெறுகின்ற விவாதங்களிலே பங்குகொள்வதும் இல்லை; அவர்களுடைய அரசைப் பற்றி அவர்களுடைய முன்னாள் முதல்வரைப் பற்றி, அவர்களுடைய தலைவரைப் பற்றி இங்கே குற்றச்சாட்டுகள் சொன்னாலும்கூடக் கட்சியில் உள்ள மற்றவர்கள் எழுந்து பதில் சொல்கிறார்களே தவிர, தளபதி எந்நேரமும் மவுனம் சாதிக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி என்று சொல்லிக் கொண்டால் போதுமா? படைக்கு முன்னால் நின்று, எதிரிகளுக்கு முன்னால் நின்று தைரியமாக, வீரத்தோடு படைக்கு வழி காட்டி, வழி நடத்துபவர்தான் தளபதி. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து வேறு யார் இருக்கிறார்கள்? பேராசிரியர் அன்பழகன் அவர்கள். இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சியின் தலைவர். எதிர்க்கட்சித் தலைவர். அவர் பாவம் சாந்தமானவர். இப்படி சதா கூச்சல் போடுவது, குழப்பம் விளைவிப்பது, காட்டுமிராண்டித்தனமாக நடப்பது, ரகளை செய்வது இவையெல்லாம் அவருக்குப் பிடிக்காது; ஒத்துவராது; சொல்லிப் பார்த்தார். அவர்கள் கேட்கவில்லை. திருந்தவில்லை. நமக்கு இந்த வம்பே வேண்டாம் என்று அவர் ஒதுங்கிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதாவது வருகிறார். ஒரு சடங்கு சம்பிரதாயம் போல, முன் வரிசையில் அமர்ந்து இரண்டு



வார்த்தைகளைப் பேசிவிட்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போய்விடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவரும் இங்கே தலைமையேற்க வரவில்லை.

அடுத்து அங்கே இருக்கின்ற மூத்த தலைவர் யார்? திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். அவர் பாவம், அவருக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை. இந்த அவைக்கு வருவதே இல்லை. 2001—ல் இந்த அரசு புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட புதிதில் அவர் சில நாட்கள் இந்த அவைக்கு வந்து, சரியாக விவரங்களைப் படித்துக் கொள்ளாமல், சில தவறான விளக்கங்களை எல்லாம் இங்கே தந்து, அதற்கான உரிய பதிலை வாங்கிக் கட்டிக் கொண்ட பிறகு, (மேசையைத் தட்டும் ஒலி) வராமலே இருந்து விடலாம் என்று உடல் நிலையைக் காரணம் காட்டி அவர் ஒதுங்கிக் கொண்டார்.

அடுத்து இருக்கின்ற பெரியவர் அங்கு இருக்கின்ற முன்னாள் அமைச்சர் திரு. கோ.சி மணி அவர்கள். அவரும் எப்போதாவது வருகிறார். அதிக நேரம் இங்கே அமருவது இல்லை. அதிகம் பேசுவதும் இல்லை. முடிந்தவரை மௌனமாக இருந்து விட்டு, சிறிது நேரம் இங்கு இருந்து விட்டு, அவரும் ஒதுங்கிச் சென்று விடுகிறார்.

அப்படியானால், அங்கே எஞ்சியிருக்கின்ற மூத்த தலைவர் வேறு யார்? ஒரே ஒருவர்தான். அவர்தான் பிரதான எதிர்க்கட்சியின் துணைத் தலைவர், திரு. துரைமுருகன் அவர்கள். திரு. துரைமுருகன் அவர்களுக்கு, பாவம் பல சங்கடங்கள் இருக்கின்றன. அவர் மனதில் என்ன இருக்கின்றதோ எனக்குத் தெரியாது. ஆனால் எதிரிலேயே அமர்ந்து இருப்பதால், நான் பார்க்கிறேன். அவருக்கு பல உபாதைகள், பல சங்கடங்கள், அவருக்கு நிறைய ஓய்வு தேவைப்படுகிறது. அதனால் அவர் என்ன நினைக்கிறார்? தலைவரும் வரமாட்டேன் என்கிறார், தளபதியும் ஒதுங்கி ஓடி விடுகிறார், பேராசிரியரும் வரமாட்டேன் என்கிறார், ஆற்காடு வீராசாமி அவர்களும் ஒதுங்கி விடுகிறார். கோ.சி. மணியும் பேசமாட்டேன் என்கிறார். நான் மட்டும் ஏன் இங்கே இருந்து மாட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—20

A leader must lead from the front. A leader must lead by example. ஒரு தலைவர் என்று தன்னை சொல்லிக் கொள்பவர் முன்னால் நின்று ஒரு படையை வழி நடத்த வேண்டும். ஒரு தலைவர் என்று தன்னைத்

தானே சொல்லிக் கொள்பவர் உதாரணத்தால் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். தானே மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாகத் திகழ வேண்டும். நான் காலை முதல் மாலை வரை இந்த அவையிலேயே அமர்ந்திருப்பதால் தான், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த அவையிலேயே இருக்கிறார்கள். என்னுடைய அமைச்சர்களும் இங்கே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நானே இந்த அவைக்கு வரவில்லை என்று சொன்னால், நானே ஒதுங்கிக் கொண்டால், என்னுடைய அமைச்சர்களும், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே வந்து நாள் பூராவும் அமர வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்.

இதுதான் தி.மு.க.—வினருக்கு இருக்கின்ற சங்கடம். குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற சங்கடம். ஆட்சியில் இருந்தபோது அவர்களுடைய தலைவர் திரு. கருணாநிதி பல தவறுகளைச் செய்து இருக்கிறார். அவற்றை எல்லாம் வரலாறு கூறுகிறது. அந்தத் தவறுகளை நாம் சுட்டிக் காட்டுகின்றபோது, அதற்கு திரு. துரைமுருகன் அவர்களால் பதில் சொல்லமுடியவில்லை. தன்னுடைய தலைவர் செய்த தவறுகளை நியாயப்படுத்த முடியவில்லை. அவர் செய்தது தவறு என்று அவருக்கே தெரிகிறது. ஆனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதனால் என்ன சொல்கிறார்? என்ன செய்கிறார்? ஏதாவது! ஒரு சின்ன வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, ஒரு சின்ன காரணத்தைப் பிடித்துக் கொண்டு, அதைப் பெரிதாக்கி வெளிநடப்புச் செய்கிறோம் என்று அறிவித்து விடுகிறார். இன்னும் அங்கே இருக்கின்ற சில இள ரத்தங்களுக்கு வெளிநடப்புச் செய்ய விருப்பம் இல்லை. இவருக்கு என்ன என்று சொன்னால் வெளிநடப்பு என்று அறிவித்துவிட்டால், வெளியே போய்விடலாம். பின்பு ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். திரும்பி இங்கே வரவேண்டியது இல்லை. எவ்வளவு சீக்கிரம் இடத்தைக் காலி செய்து போகலாம் என்று அவர் பார்க்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் பலமுறை இந்த காட்சியைக் காண்கிறோம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வெளிநடப்பு என்று அறிவித்த பிறகும் மற்றவர்கள் இங்கேயே நின்று வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போக விருப்பம் இல்லை. ஆனால் இவர் வெளிநடப்பு என்று அறிவித்துவிடுவதால், வெளிநடப்புச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

225510





இன்னும் சில நேரங்களில் என்ன செய்கிறார்கள். [illegible]மென்றே
ரகளை செய்து, விதிமுறைகளுக்கு மாறாக, பேசக்கூடாதவற்றை எல்லாம்
பேசி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு,
இந்த அவையின் நடவடிக்கைகளை நடைபெற விடாமல் இடையூறு
செய்து கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களே அவர்களை
வெளியேற்றியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்துகிறார்கள்.
மாறி மாறிச் செய்கிறார்கள். ஒரு நாள் வெளிநடப்பு, அடுத்த நாள்
ரகளை. அப்பொழுது பேரவைத் தலைவர் வெளியேற்றியே ஆக
வேண்டும். பத்திரிகைகளில் விளம்பரம்; குண்டுக்கட்டாகத் தூக்கி
வெளியே போட்டார்கள் என்ற செய்தி. இதைத் தவறாமல் உங்களுக்கும்
போரடிக்காமல் பத்திரிகைகள் வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன.
(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தி.மு.க.— வின் சங்கடம் இன்றைக்கு
சரியான தலைமை இல்லை என்பதுதான்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்,
அவர்களுடைய கட்சியின் பேரவைத் தலைவர்; எப்படி அரசியல்
நடத்துவது என்று புரியாமல் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்.
ஆகவே சிறு சிறு விஷயங்களை எல்லாம் பெரிதாக்கி, அவரும் இங்கே
கூச்சல் போடுகிறார். எடுத்ததற்கெல்லாம் வெளிநடப்பு என்று
அறிவிக்கிறார். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
குமாரதாஸ் அவர்கள் பேசிய பேச்சிற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தார்.
அடுத்து வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொன்னார். ஒரு காலத்தில்
எல்லோரும் ஒரே இயக்கத்தில் இருந்தார்கள். ஆரம்பத்திலே எல்லோரும்
காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். பின்னர் அவர்கள் எல்லோரும்
தமிழ் மாநில காங்கிரசுக்குச் சென்றார்கள். அன்றையதினம் டாக்டர்
குமாரதாஸ் அவர்கள் பேசிய பேச்செல்லாம் அவர்களுக்குத் தேனாக
இனித்தது. இன்றைக்கு அவர் பேசுகின்ற பேச்சு வேம்பாகக் கசக்கிறது.

பிற்பகல் 12—25

டாக்டர் குமாரதாஸ் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தபோது,
ஒரு வேதனையான காட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது
அவைக்குறிப்பில் இடம் பெறவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள்
கவனித்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது. எதிரிலே நின்று
கொண்டு இரண்டு பேர், ஒருவர் திமுக.—வைச் சேர்ந்த பரிதி இளம்வழுதி;
இன்னொருவர் காங்கிரசைச் சேர்ந்த ஞானசேகரன். அதில் குறிப்பாக
பரிதி இளம்வழுதி என்னைப் பார்த்து, 'இவர் முன்பு உங்களைப் பற்றி

இந்த அவையில் என்னென்ன பேசினார் தெரியுமா, அவைக்குறிப்புகளை எடுத்துப் பாருங்கள்; முன்பு உங்களைப் பற்றி என்னவெல்லாம் பேசியிருக்கிறார் தெரியுமா?' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். இதையே ஞானசேகரனும் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்களுக்கு என்னுடைய பதில் இதுதான். அன்றையதினம் டாக்டர் குமாரதாஸ் என்ன பேசியிருந்தாலும், அது அவருடைய சொந்தக் கருத்து. இன்றையதினம் டாக்டர் குமாரதாஸ் என்ன பேசினாலும், அதுவும் அவருடைய சொந்தக் கருத்து. அதற்கும் நான் காரணமல்ல; இதற்கும் நான் காரணமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த உறுப்பினருக்கும், எந்த மாண்புமிகு உறுப்பினருக்கும் அவருடைய கருத்தைச் சொல்ல இந்த அவையில் உரிமை உண்டு, சுதந்திரம் உண்டு. அந்தச் சுதந்திரத்தை டாக்டர் குமாரதாஸ் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அதற்காகத்தான் சொல்கிறேன். அன்றையதினம், திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும் ஒரே இயக்கத்தில் இருந்த போது, அன்றையதினம் டாக்டர் குமாரதாஸ் பேசிய பேச்செல்லாம், எப்படிப்பட்ட பேச்சாக இருந்தாலும் அன்றைக்கு அவர்களுக்குத் தேனாக இனித்தது. இன்றைக்கு அரசியல் ரீதியாக மாறுபடுவதால் அவர் பேசுகிற பேச்சு வேம்பாகக் கசக்கிறது.

நான் எல்லோருக்கும் அறிவுரை சொல்லக்கூடிய தகுதியுடையவள் என்று என்னை நானே கருதிக் கொள்ளவில்லை. இருந்தாலும், எனக்கும் ஓரளவிற்கு இப்போது பொது வாழ்க்கையில் அனுபவம் ஏற்பட்டு இருப்பதால், சிலருக்குச் சில அறிவுரைகளைக் கூறுவதில் தவறில்லை என்று கருதுகிறேன். தி.மு.க.—வினருக்கு இந்த அவையின் வாயிலாக நான் சொல்ல விரும்புகிற அறிவுரை என்னவென்றால்,

"You may be disappointed, if you FAIL,
You are doomed, if you do not TRY"

என்பதே ஆகும். 'நீங்கள் ஒரு முயற்சி செய்து, அதில் தோல்வி அடைந்தால், உங்களுக்கு ஏற்படக்கூடியது ஏமாற்றம் அல்லது வருத்தம் அவ்வளவுதான். அதோடு போய்விடும். ஆனால் நீங்கள் முயற்சியே செய்யவில்லை என்றால் உங்களுக்கு எதிர்காலமே கிடையாது. அழிவுதான்'. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்கிறேன். இதெல்லாம் பெரிய மேதைகள், அறிவாளிகள் சொன்னது.





"Failure is not the worst thing in the world, the very worst is not to try." (மேசையைத் தட்டும் ஒலி) 'உலகிலேயே மோசமான ஒன்று, இழிவான ஒன்று என்னவென்றால், அது தோல்வி அல்ல. முயற்சியே செய்யாமல் இருப்பதுதான் இழிவான ஒன்று'. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் சட்டப்பேரவையில் விவாதம் ஆனாலும், வெளியே ஒரு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் ஆனாலும், முயற்சியே செய்யாமல் ஒதுங்கி, பதுங்கி, ஓடி விட்டால், ஓட்டம் பிடித்தால், உங்கள் இயக்கத்திற்கு எதிர்காலமே இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நானும் ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையில் அந்தக் கட்சியின் தலைவருக்கு நான் சொல்கின்ற அறிவுரை, உங்கள் இயக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், முயற்சி செய்யுங்கள், ஓட்டம் பிடிக்காதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே டாக்டர் குமாரதாஸ் பேச்சுக்கு ஆட்சேபம் தெரிவித்தபோது 'வேண்டுமென்றே என் மனதைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக இப்படி எல்லாம் பேசுகிறார்; வேண்டுமென்றே ஆத்திரம் ஊட்டுவதற்காக இப்படியெல்லாம் பேசுகிறார்' என்று சொன்னார். 'அவர் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று ஒரு நிபந்தனை போட்டார். அதாவது, டாக்டர் குமாரதாஸ், எஸ்.ஆர்.பி.—யிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமாம். அதற்குப் பேரவைத் தலைவர் ஒத்துக்கொள்ளாததால் வெளிநடப்பு என்று அறிவித்துவிட்டுப் போய்விட்டார். எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இரண்டு விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, 'எனக்கு ஆத்திரமூட்டுவதற்காகவே இப்படி பேசுகிறார்' என்று சொன்னாரே, ஏன் மாண்புமிகு உறுப்பினர் இப்படி பேசுகிறார்' என்று சொன்னாரே, ஏன் எஸ்.ஆர்பி.—க்கு இவ்வளவு அனுபவம் இருக்கிறதே, இவ்வளவு மூத்தவராக இருக்கிறாரே, இன்னும் ஏன் அவர் அளவுக்கு பக்குவப்படவில்லை; அவருக்கு ஏன் ஆத்திரம் வருகிறது? (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே வருகின்ற எத்தனையோ எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வருவதே எனக்கு எப்படியாவது ஆத்திரமூட்ட வேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் தொகுதிப் பிரச்சினைகளையோ, மக்கள் பிரச்சினைகளையோ பேசுவதற்காக இங்கே வரவில்லை. எப்படியாவது முதலமைச்சரைத் தூண்டிவிட்டு அவருக்குக் கோபம் வரவழைக்க முடியாதா என்பதற்காகவே பேசுகிறார்கள். தினந்தோறும் இங்கே சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போதெல்லாம், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் ஆத்திரமூட்ட வேண்டும் என்பதற்காகவே சில செய்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால், பேரவைத் தலைவரும்

ஆத்திரப்படவில்லை; நானும் ஆத்திரப்படவில்லை. எஸ்.ஆர்.பி. அவர்களால் ஆத்திரப்படாமல் ஏன் இருக்க முடியவில்லை?

பிற்பகல் 12—30

அடுத்து, டாக்டர் குமாரதாஸ் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கேட்டார். என்னதான் இருந்தாலும் எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இவ்வளவு அகம்பாவம் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் ஓர் அறிவுரை கூற விரும்புகிறேன்.

Talent is God given; be humble.
Fame is man given; be thankful;
Conceit is self given; be careful

திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது, அடக்கத்தோடு இருங்கள். புகழ் என்பது மனிதர்களால் கொடுக்கப்பட்டது, நன்றியோடு இருங்கள். அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக்கொள்வது, எச்சரிக்கையாக இருங்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய பல உறுப்பினர்களும், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய 25 சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழகத்தில் நிலவுகின்ற வறட்சியைப் பற்றியும், வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கே பேசினார்கள்.

2002 ஆம் ஆண்டு நமது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் சோதனையான ஆண்டு என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். பிப்ரவரி 2002 ஆம் ஆண்டு பருவம் தவறிப் பெய்த மழையின் காரணமாக தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மிகுந்த சேதத்திற்கு உள்ளாயின. அதனைத் தொடர்ந்து தென் மேற்கு மற்றும் வட கிழக்கு ஆகிய இரு பருவ காலங்களிலும் மழை பொய்த்து விட்டது.

காவிரி வடிகால் பகுதியின் கடைமடை மாநிலமான தமிழகத்தை, தலைமடை மாநிலமான கர்நாடகம் இரக்கமற்ற முறையில் கடுமையாக நடத்தியது. காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஒத்துழைக்க மறுத்து தமிழகத்திற்கு காவிரி நீரில் உரிய பங்கை வழங்கத் தொடர்ந்து மறுத்து வந்தது கர்நாடக அரசு. அதன் காரணமாக காவிரிப் பாசன விவசாயிகள் மிகுந்த துன்பத்திற்கும், துயரத்திற்கும் உள்ளாயினர். பருவ மழை



பொய்த்ததாலும், கர்நாடக அரசின் இத்தகைய இணக்கமற்ற போக்கினாலும் மாநிலம் முழுவதும் வறட்சி நிலை உருவாகி உள்ளது.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் இவ்வாறு இன்னல்களைச் சந்திக்கும்போதெல்லாம் தாயுள்ளம் கொண்ட இந்த அரசு அவர்களது துயரைத் துடைக்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. மாநில அரசின் நிதி நெருக்கடியையும் பொருட்படுத்தாது, இன்னலுறும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் துயர் துடைக்கப் பல்வேறு நிவாரணப் பணிகளை மிகுந்த பொருட்செலவில் இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பருவம் தவறிப் பெய்த மழையின் காரணமாக தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஏற்பட்ட சாலைகள், பாசன ஆதாரங்களின் சேதங்களைச் சீர் செய்யவும் பயிர்ச் சேதத்திற்கு ஈடு செய்யவும், தமிழக அரசு 49 கோடி ரூபாய் நிவாரணத் தொகை வழங்கியது. தமிழ்நாடு, கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி, விவசாயம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டி உள்ளோம்.

தமிழ்நாட்டில், கடந்த 30 ஆண்டுகளில், 2002 ஆம் ஆண்டில்தான் மிகக் குறைந்த அளவு மழை பெய்துள்ளது. வரலாறு காணாத இந்த வறட்சியைச் சமாளிக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 24—6—2002 அன்று நானே நேரடியாக தஞ்சாவூருக்கு சென்று விவசாயிகளின் இடர்ப்பாடுகளை அறிந்து அவர்களின் துயர் துடைக்க 164.18 கோடி ரூபாயில் சிறப்பு நிவாரணத் திட்டம் ஒன்றை அறிவித்தேன். இத்திட்டத்தின் மூலம் வாய்க்கால்களைத் தூர் எடுத்தல், புதிய குளங்கள் ஏற்படுத்துதல், விவசாயக் களங்கள் அமைத்தல், ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நிவாரணப் பணிகள் செயல்படுத்துவதை மேற்பார்வையிடுவதற்கும் ஒவ்வொரு வாரமும் பணிகளை ஆய்வு செய்வதற்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் மாநில அளவில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் கண்காணிப்புடன், இத்திட்டம் சீரான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசின் பங்காக ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனிக்குச் செலுத்தப்பட வேண்டிய பிரீமிய தொகை 6.61 கோடி ரூபாயை அரசு செலுத்தியுள்ளது. இதனால் இந்த மூன்று மாவட்டங்களில் வாழும் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 13.83 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை பெற முடிந்தது.

|செல்வி ஜெ ஜெயலலிதா| |2003 ஜனவரி 31

*பிற்பகல் 12—35*

மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலைமையை ஆய்வு செய்வதற்கென்றே 30—7—2002 அன்று மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டினைக் கூட்டி விரிவான ஆலோசனை நடத்தினேன். இதனைத் தொடர்ந்து, கூட்டுறவுக் கடன் வசூலைத் தள்ளி வைக்க உடனடியாக ஆணையிட்டேன். 5—8—2002 அன்று தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசிற்கு ஒரு விரிவான அறிக்கையை நாங்கள் அனுப்பினோம். 720 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரண உதவி வழங்கவும், வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் டன் அரிசி வழங்கவும் மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டோம்.

பாரதப் பிரதமர் அவர்களை 20—8—2002 அன்று எங்களது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்து விரைவில் நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொண்டது. மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று மத்திய குழு செப்டம்பர் திங்களில் மாநிலத்திற்கு வருகை புரிந்தது. நாம் எதிர்பார்த்ததைவிட வறட்சி நிலைமை கடுமையானதாக மாறியதால் செப்டம்பர் திங்கள் 23ஆம் நாளன்று மத்திய குழு என்னை நேரடியாகச் சந்தித்தபோது 1,434 கோடி ரூபாய் நிதி உதவியும், ஏற்கெனவே கேட்கப்பட்ட 2 இலட்சம் டன் அரிசியுடன் கூடுதலாக மேலும் 5.5 இலட்சம் டன் அரிசியும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினேன்.

மத்திய குழு உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களைப் பார்வையிட்டு 178.29 கோடி ரூபாய் வறட்சி நிவாரண உதவி வழங்க பரிந்துரை செய்தனர். மத்திய அரசிடம் இருந்து நிதி வரும் என்று எதிர்பார்த்துக் காத்திராமல், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க 2002 ஜூன் முதல் டிசம்பர் வரை 67.90 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியைக் கொண்டு 13,676 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதன்கீழ், ஆழ்துளைக் கிணறுகள் தோண்டி கைப் பம்புகள் நிறுவுதல், சிறிய மின் விசைப் பம்புகள் நிறுவுதல், கிணறுகளைத் தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல், குடிநீர்க் குழாய்களை விரிவுபடுத்துதல், குடிநீர்க் குழாய்களைப் புதிதாக மாற்றியமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



2003 ஜனவரி 31] |செல்வி ஜெ ஜெயலலிதா|

இவை தவிர கிராம வேலைவாய்ப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி , 11—வது நிதிக் குழு, உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதி, சிறு சேமிப்பு ஊக்கத் தொகை போன்ற, ஏனைய திட்டங்களின்கீழ் 883.76 கோடி ரூபாயில் 60,110 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு டிசம்பர் 2002—ல் தேசிய பேரிடர் அவசர நிதியிலிருந்து, அதாவது National Calamity Contingency Fund-ல் இருந்து 228.30 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை மற்ற மாநிலங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிகமானதாகும். ஆந்திர மாநிலத்திற்கு 174.61 கோடி ரூபாயும், கர்நாடக மாநிலத்திற்கு 221.46 கோடி ரூபாயும், ராஜஸ்தான் மாநிலத்திற்கு 227.68 கோடி ரூபாயும், ஒரிசா மாநிலத்திற்கு 120.18 கோடி ரூபாயும் மத்திய அரசு அனுமதித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட 228.30 கோடி ரூபாயில் இயற்கைச் சீற்ற நிவாரண நிதியில் National Calamity Contingency Fund—ல் நம்மிடம் ஏற்கெனவே இருப்பிலுள்ள தொகையைக் கழித்துக் கொண்டு மத்திய அரசு 133.06 கோடி ரூபாய் நிதியை இதுவரை விடுவித்துள்ளது.

நாடெங்கும் தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் வேளையில் வறட்சியால் சாகுபடி பாதிக்கப்பட்டதால் வேலை இன்றி வாடும் காவிரிப் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதால் வேலை இன்றி வாடும் காவிரிப் பாசன விவசாயத் தொழிலாளர்களும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தீபாவளிப் பரிசு ஒன்றினை வழங்கினோம். இந்தப் பரிசுப் பையில் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, இனிப்பு 250 கிராம், நெய் 100 கிராம், தேங்காய், வாழைக்காய், கத்தரிக்காய், சுரைக்காய் போன்ற காய்கறிகள், பாசிப்பருப்பு, மஞ்சள், கடுகு மற்றும் மிளகாய் வத்தல் போன்ற பொருட்களுடன் 50 ரூபாய் ரொக்கமும் சேர்த்து வழங்கப்பட்டது. ஒரு பரிசுப் பையின் மொத்த மதிப்பு 210 ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 21 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இதனால் 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன் பெற்றன என்பதையும் இந்த மாநிலமே அறியும்.

*பிற்பகல் 12—40*

இலவச மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே பலர் பல கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற ஆணையையும், காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவையும் புறக்கணித்த கர்நாடக அரசின்

தொடர் பிடிவாதத்தால் தமிழகத்திற்கு உரிய காவிரி நீர் கிடைக்கவில்லை. இதனாலும், பருவ மழை பொய்த்து விட்டதாலும் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் பசி பட்டினியால் வாடக் கூடாது என்ற எண்ணத்தில் அவர்கள் ஒரு வேளையேனும் பசியாற உண்பதற்காக நல்ல சத்துள்ள, சூடான, தரமான உணவு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மதிய உணவு வழங்கும் ஒரு திட்டத்தை 15.1.2003 முதல் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு. இந்தத் திட்டம் சத்துணவு மையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 30.1.2003 அன்றைய நிலவரப்படி 12,11,176 நபர்கள் இத்திட்டத்தில் பதிவு செய்து கொண்டு, 10,02,424 நபர்கள், அதாவது 83 சதவிகிதம் பேர் உணவு உண்டுள்ளனர்.

ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் மற்றும் குழந்தைகள், தாய்மார்கள், முதியோர் ஆகியோருக்கான சத்துணவுத் திட்டம் ஆகியவற்றிற்கு ஆண்டு ஒன்றுக்கு 645.76 கோடி ரூபாய் அளவிற்குச் செலவிடப்படுவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். எனினும், இக்கட்டான இந்த நிதி நெருக்கடி நிலைமையிலும் பசிப் பிணியால் எவரும் வாடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த மதிய உணவுத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளேன்.

வறட்சியைச் சமாளிப்பதற்காக மாநில அரசால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இல்லாமல், எதிர்க்கட்சிகள் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இத்திட்டங்களைக் குறை கூறுகின்றன. மாநில அரசின் சார்பாக மைய அரசுடன் வாதாடி நமக்குள்ள காவிரி நீர் உரிமையைப் பெற்றுத் தருவதிலும் இந்த வறட்சியைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் நிதி உதவியை பெற்றுத் தருவதிலும் அக்கறை காட்டாமல் மாநில அரசைத் தூற்றுவதையே எதிர்க்கட்சியினர் தங்களது தொழிலாகக் கொண்டுள்ளனர்.

அது மட்டுமல்ல, இயற்கை மரணங்களையும், பல்வேறு குடும்பப் பிரச்சினைகளின் காரணமாக நடைபெற்ற தற்கொலைகளையும், தீராத பட்டினியால் ஏற்பட்ட சாவு என்றும், காய்ந்த பயிரினைக் கண்டு மனம் வெதும்பி அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம் என்றும் கூறி, தங்களது செய்தித் தொடர்பு சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்தி விஷமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மாமன்றத்தில் 28-1-2003 அன்று நான் பேசும் போது பயிர் கருகியதாலும் பட்டினியாலும் சிலர்



இறந்து விட்டார்கள் என்ற எதிர்கட்சியினரின் தவறான குற்றச்சாட்டுக்குப் பதில் கூறியுள்ளேன். எனவே அதைப்பற்றி மேலும் விளக்கங்கள் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

ஆளுநர் உரையில் சென்னை தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 24.1.2003 அன்று வெளியிடப்பட்டுள்ளது. தற்போது நான்கு பேர் கொண்ட மத்திய அரசின் குழு தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தஞ்சை டெல்டா உள்ளிட்ட சில மாவட்டங்களை நேரில் பார்த்துவிட்டு இன்று மாலை என்னைச் சந்திக்க உள்ளது. அக்குழுவினரிடம், சம்பாப் பயிர் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கெனவே விடுத்த கோரிக்கைகளுடன் கூடுதலாக, புதிய அறிக்கை ஒன்றைத் தர உள்ளோம்.

சம்பா நெற்பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் மொத்தம் 419.55 கோடி ரூபாயும், காவிரியில் நீர் வராத காரணத்தால் பயிரிடப்படாத நிலங்களுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் 144.53 கோடி ரூபாயும், நடப்பாண்டு கூட்டுறவுக் கடன்களில் குறுகிய கால மற்றும் மத்திய கால கடன்களில் அசல் 240.54 கோடி ரூபாயும், வட்டி 408.09 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டு அதற்கு ஈடான இழப்பீடும் — இது கோரிக்கைதான் — உணவுக்கு வேலை திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ரொக்கமாகவும், 9 இல்ட்சம் டன் அரிசியாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இழப்பீடாக 345 கோடி ரூபாயும், குடிநீர்த் திட்டங்களுக்காக 184.87 கோடி ரூபாயும், சிறு குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கான சிறப்பு மதிய உணவுத் திட்டத்திற்காக 90 கோடி ரூபாயும், கால்நடை பராமரிப்புத் துறைக்கு, தீவனம், நோய்த் தடுப்பு மருந்துகள், குடிநீர் போன்ற வசதிகளுக்காக 18.48 கோடி ரூபாயும், மீனவர்களுக்கு நிவாரண உதவியாக 14.47 கோடி ரூபாயும்— ஆக மொத்தம் 2027.53 கோடி ரூபாயும் 9 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க உள்ளேன்.

பிற்பகல் 12—45

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், கடலூர், மற்றும் நாமக்கல் ஆகிய காவிரிப் பாசன மாவட்டங்களில் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு

ஏற்கனெவே குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள கட்டத்தில் 164.18 கோடி ரூபாய் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, 1.2.2003 அன்றிலிருந்து இந்தப் பகுதிகளில் 217.09 கோடி ரூபாய் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) போர்க்கால அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஊரக வளர்ச்சிப் பணிகள், வாய்க்கால்களைத் துார் எடுத்தல், குளங்கள் அமைத்தல், சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கிழ் மேற்கொள்ளப்படும். வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களுக்கும் இதுபோன்ற திட்டம் ஒரு வாரத்தில் உருவாக்கப்படும்.

பட்டுப்போன தென்னை மரங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஏற்கெனவே ஹெக்டேர் ஒன்றுக்கு 4000 ரூபாய் என்று நான் அறிவித்திருந்தேன். இந்த இழப்பீட்டுத் தொகையினை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் முழுவதும் பட்டுப் போன தென்னை மரம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதமும், பகுதி பட்டுப் போன தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதமும் நிவாரணம் வழங்க ஆணையிட்டுள்ளேன். இதற்கான செலவு சுமார் 30.5 கோடி ரூபாயாகும்.

தருமபுரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கரூர் மாவட்டங்களில் குடிநீர் மேம்பாட்டிற்காக 10.98 கோடி ரூபாய் தற்போது ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயைக் (foot and mouth disease) குணப்படுத்துவதற்கும், கால்நடைகளின் பயன்பாட்டிற்காக 313 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும், கால்நடைத் தீவன வளர்ச்சிக்கும் மொத்தம் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன் என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

இப்போது ஒரு புதிய அறிவிப்பை நான் செய்ய உள்ளேன். இந்த அரசு அறிவிக்கும் அனைத்துத் திட்டங்கள் குறித்தும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்கும் என்று நான் பலமுறை குறிப்பிட்டு இருக்கிறேன். இலவச மதிய உணவுத் திட்டத்தின் மூலம் பயன்





பெறுவோரில் சிலர் தாங்கள் தினம் தினம் சத்துணவு மையத்திற்கு வந்து உணவு பெறுவதில் சில சிரமங்கள் இருப்பதை எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும், ஒருசில நாட்களில் வேலை கிடைக்கும்போது, வேலையைப் பாதியில் விட்டு விட்டு சத்துணவு மையத்திற்கு வந்து உணவு பெற்றுச் செல்ல முடியவில்லை என்றும், சத்துணவு மையம் அமைந்துள்ள இடமும், தாங்கள் வேலை செய்யும் இடமும் சில நேரங்களில் வெவ்வேறாக இருப்பதால் மதிய உணவு பெற இயல்வதில்லை என்றும் அவர்கள் குறைபட்டுள்ளார்கள். விவசாயிகள் மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும், இந்தச் சிறப்பு மதிய உணவுத் திட்டத்தை மாற்றி மக்களின் வசதிக்காக அரிசியாகவே வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இந்தத் திட்டம் குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்போம் என்று நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, தற்போது விவசாயிகளின் கோரிக்கைகளையும், உங்களது கோரிக்கைகளையும் ஏற்று நாளை முதல் இத்திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது என்னும் செய்தியை இந்த மாமன்றத்தின் மூலமாக அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று வரை பதிவு செய்துள்ள பயனாளிகள் குடும்பத்தினர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 30 கிலோ அரிசி என்ற அளவில் (மேசையை . தட்டும் ஒலி) மீண்டும் சொல்கிறேன் இன்றுவரை பதிவு செய்துள்ள பயனாளிகள் குடும்பத்தினர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 30 கிலோ அரிசி என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) அருகிலுள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அரிசியாக இலவசமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 30 கிலோ இலவச அரிசி, ஒரு தவணையில் 15 கிலோ அரிசி வீதம், இரண்டு தவணைகளில் வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல், பயன் பெறும் பயனாளிகள் குடும்பங்கள் இலவச அரிசி பெறுவதற்கு ஏதுவாக அரிசி கூப்பன்கள் [illegible]டியாக வழங்கப்படும் என்பதையும், அந்தக் கூப்பன்களைப் பெற்றுக் கொண்டு தாங்கள் ஏற்கெனவே குடும்ப அட்டை மூலம் அரிசி பெறும் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று கூப்பன்களைக் கொடுத்து அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—50

இவ்வாறு எந்தெந்த வழிகளில் எல்லாம் இயலுமோ, அந்தந்த வழிகளில் எல்லாம் விவசாயப் பெருமக்களுக்குத் துணை நின்று, அவர்களின் துயர் போக்க இயலும், அந்தந்த வழிகளை எல்லாம் கண்டு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது இந்த அரசு. இனியும் வழங்கும். இதற்கு இடையே குறுக்குச் சால் ஓட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு இருக்கின்ற எதிர்க்கட்சியினருக்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது இதுதான். புறநானூற்றிலே சொன்னபடி —

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" !

அதாவது, நல்லது எதனையும் நீங்கள் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்யாமலாவது இருங்கள். நல்லது செய்பவரைத் தடுக்காதீர்கள். நீங்கள் நாட்டுக்குச் செய்கின்ற தொண்டு அதுவாக இருக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இங்கு இருக்கிற உறுப்பினர்கள் சார்பாகவும், வராத உறுப்பினர்கள் சார்பாகவும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இன்னொரு பெரிய புதிய நல்ல அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாமல்லபுரம் அருகே ஏறத்தாழ 5,000 ஏக்கர் பரப்பளவில் தமிழகத்தின் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தனித் தன்மை வாய்ந்த கட்டடக் கலைச் சிறப்போடு ஒரு "புதிய நிர்வாக நகரம்" — New Administrative City அமைக்கப்படும் என்று முன்னர் நான் அறிவித்திருந்தேன். அதன்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் — Chennai Metropolitan Development Authority - CMDA — மற்றும் மலேசிய நாட்டின் கட்டடத் தொழில் வளர்ச்சி வாரியம் —Construction Industry Development Board of Malaysia — ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் Memorandum of Understanding கடந்த 14—1—2003 அன்று கையெழுத்தானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.



பிரம்மாண்டமான இந்தத் திட்டம் பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற பொறுப்பையும், விரிவான திட்ட அறிக்கை அளிக்கின்ற பொறுப்பையும் மலேசிய நாட்டின் கட்டடத் தொழில் வளர்ச்சி வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு, புதிய நிர்வாக நகரத்திற்கான விரிவான சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கையையும், அதற்குப் பின் விரிவான திட்ட அறிக்கையையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கே சில ஆண்டுகள் ஆகும் என்று தெரிகிறது. மேலும், திட்ட விவர அறிக்கையைப் பெற்று, மாபெரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிலான நிதி ஆதாரங்களையும் நாம் கண்டறிந்து, அதன் பின்னர் இந்தத் திட்டம் செயலாக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு, மேலும் பல ஆண்டுகள் ஆகலாம் என்பதே யதார்த்த உண்மை. 15 ஆண்டுகள் ஆகலாம், 20 ஆண்டுகள் ஆகலாம், 25 ஆண்டுகளோ அதற்கு மேலோ கூட ஆகலாம்.

இவ்வாறு, புதிய நிர்வாக நகரம் என்பது நனவாக்கப்பட வேண்டியது நமது இலட்சியக் கனவாக இருக்கின்ற அதே நேரத்தில், தற்போது சென்னையில், தலைமைச் செயலகம் இயங்கி வரும் கட்டடங்கள் நமக்குப் போதுமானவையாக இல்லை என்பதையும், இட நெருக்கடி நமக்கு ஒரு இடர்ப்பாடாகவே எப்போதும் இருக்கிறது என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை மொத்தம் 107.5 ஏக்கர் பரப்பளவு உள்ளது. அதில், சென்னை தலைமைச் செயலகம் அமைந்திருக்கின்ற இடப் பரப்பு வெறும் 3.9 ஏக்கர் மட்டுமே ஆகும். இதில், நடைபாதைகள், உணவுக் கூடங்கள், புல்வெளி ஆகியவையும் அடங்கும். மேலும், தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியாகிய நாமக்கல் கவிஞர் மாளிகை 1974 ஆம் ஆண்டில் முந்தைய தி.மு.க. அரசால் 10 மாடிகளைக் கொண்டதாக கட்டப்பட்டது. 30 ஆண்டுகள்கூட ஆகாத நிலையில், இந்தக் கட்டடம் சிதிலம் அடைந்து, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கிறது. இந்தக் கட்டடத்தின் வடிவமைப்பும், ஒரு தலைமைச் செயலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் கொண்டதாக இல்லை என்பதே உண்மை. கடந்த 25 ஆண்டுகளில் கூடுதலாக நியமிக்கப்பட்ட அரசு அலுவலர்களுக்குப் போதுமான இட வசதியும் இப்போது அந்தப் பத்து மாடிக் கட்டடத்தில் இல்லை. மாடிப்படி ஓரங்களில்கூட முக்கிய அலுவலர்களுக்கு அறைகள் அமைத்து அவற்றில் அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

பிற்பகல் 12—55

எனவே, புதிய நிர்வாக நகரம் அமைக்க ஆண்டுகள் பல ஆகும் என்ற நிலை ஒரு பக்கம்; இருக்கின்ற கட்டடமும் நமது தேவைக்குப் போதுமானதாக இல்லை என்பதோடு, இடிந்து விழுகின்ற நிலையில் இருப்பது ஒரு பக்கம்; இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே இருக்கின்ற நாம் உடனடியாக ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.ஆகவே, இந்த அம்சங்கள் அனைத்தையும் கவனத்தோடு ஆராய்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தை உடனடியாக மாற்ற வேண்டிய இந்தச் சூழ்நிலையில், சென்னை கடற்கரைச் சாலையிலேயே புதிய தலைமைச் செயலக வளாகத்தை அமைக்க எங்கள் அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இராணி மேரிக் கல்லூரி மற்றும் விவேகானந்தர் நினைவில்லம் ஆகியவற்றுக்கு இடையே இந்தப் புதிய தலைமைச் செயலகம் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக உருவாகப் போகும் இந்தத் தலைமைச் செயலகம் பெங்களூரில் அமைந்துள்ள "விதான சவுதா" கட்டடத்தை விட எழில் மிக்க கம்பீரமான கட்டடமாக அமைக்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய தலைமைச் செயலகக் கட்டடம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு நகரங்களிலும், சிறு கிராமங்களிலும்கூட, சாலை ஓரங்களில் குப்பை கொட்டி வைக்கப்பட்டு ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்ற காட்சியை நாம் கண்டு வருகிறோம். தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும், இத்தகைய சுகாதாரக் கேடு விளைவிக்கின்ற காட்சியினைக் காண முடிகிறது. எனவே, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் குப்பைகளை அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் ஆணையிட்டேன்.

தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரம் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கிறது. நகரம் வளர வளர, அதோடு சேர்ந்து அதனுடைய சுகாதாரப் பிரச்சினைகளும் வளர்ந்து வருகின்றன. குறிப்பாக, குப்பைகளை அகற்றுவது எப்படி, அவற்றைக் கொட்டுவது எங்கே என்பன போன்ற பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன. சென்னை





மாநகரில் நாள்தோறும் சுமார் 3000 மெட்ரிக் டன் எடையுள்ள குப்பை சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பை, வட சென்னைப் பகுதியில் கொடுங்கையூர், தென் சென்னையில் பெருங்குடி ஆகிய இரு இடங்களில், ஒவ்வோர் இடத்திலும் ஏறத்தாழ 1500 மெட்ரிக் டன் எடையளவுக்கு கொட்டப்பட்டு வருகிறது. இந்த இரு இடங்களிலும் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத்தான் குப்பைகள் கொட்ட இயலும்.

சென்னை மாநகரின் தற்போதைய மக்கள் தொகை 42 லட்சம் ஆகும். இதே விகிதத்தில் வளர்ந்து கொண்டு போனால், கொட்டப்படுகின்ற குப்பையின் அளவும் மிக அதிகமாகவே வளர்ந்து கொண்டே போகும். எனவே, திடக் கழிவுகளைக் கொட்டி வைக்கும் வளாகங்கள் இன்னும் அதிக அளவில் தேவைப்படும். ஆனால், இந்த நிலையே தொடருமானால், இனிமேலும் குப்பை கொட்ட இடமே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விடும். அதற்குமுன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை, நிரந்தரத் தீர்வைக் காண வேண்டியது நம்முடைய கடமையாகும்.

சென்னை மாநகரைப் பசுமையான நகரமாக, தூய்மையான நகரமாக மாற்றுவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநிலத் தலைநகரங்களுக்கு மத்தியில் சென்னை ஒரு முன்னோடி தலைநகரமாக விளங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இந்தக் குறிக்கோளை அடைய தரமான நகர்ப்புற வசதிகளை நாம் சென்னை மாநகருக்கு அளித்தாக வேண்டும். முக்கியமாக, திடக் கழிவுகளை அகற்றுவதில் நாம் ஒரு முக்கிய முடிவை எடுத்தாக வேண்டி உள்ளது. நான் சற்றுமுன் குறிப்பிட்டதைப் போல, குப்பை கொட்டும் வளாகங்களின் பற்றாக்குறை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

ஆகவே, அரசு தீவிரமாகச் சிந்தித்து ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்துள்ளது. மாநகராட்சியின் திடக் கழிவுகளை அகற்றுகின்ற அதேநேரத்தில், அந்தத் திடக் கழிவுகளைப் பயன்படுத்தி அவற்றைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்திட ஒரு சீரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1—00

சென்னை மாநகரிலிருந்து அகற்றப்படும் குப்பைகளைப் பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு உருவாக்கி உள்ளது. அதன் அடிப்படையில் பெருங்குடி

குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி சார்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் உலக அளவில் ஒப்பந்தப்புள்ளியை அதாவது Global Tender-களைக் கோரியது. அதில் திருவாளர்கள் ஈ.டி.எல். இந்தியா பி.லிட். என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளிக்கு அரசு 5—1—1999 அன்றே ஒப்புதல் அளித்தும், சென்னை மாநகராட்சியும் திருவாளர்கள் ஈ.டி.எல். நிறுவனமும் 23—2—2001ல் தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் — MOU-ல் கையெழுத்திட்டன. ஆகவே இத்திட்டம் உடன் செயல்படுத்தப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முந்தைய தி.மு.க. அரசு எடுக்கவில்லை.

இந்த நிலையில் இதுகுறித்து நான் 22—1—2003 அன்று, சென்னை மாநகராட்சி, மாசுக் கட்டுப்பாடு வாரியம், மின் துறை ஆகிய துறைத் தலைவர்களுடன் ஆய்வு செய்தேன். மேலும் ஈ.டி.எல். நிறுவனம் எத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இத்திட்டத்தினை நிறைவேற்ற உள்ளது என்பதையும் கேட்டறிந்தேன். குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் போது குப்பைகள் எரிக்கப்படாமல் புகையின்றி Pyrolysis என்னும் தொழில்நுட்பம் மூலம் வாயு தயாரிக்கப்பட்டு, அதாவது gasification செய்து, அதன் உதவியுடன் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. எனவே, இந்தத் தொழில்நுட்பத்தால் புகை ஏற்பட வாய்ப்பில்லை. அதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படமாட்டாது என்பது தெரிய வருகிறது. எனவே, இத்திட்டம் சென்னை மாநகர மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தால் இதனை உடனே நிறைவேற்ற இந்த அரசு தீர்மானித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில் ஒரு செய்தியை நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்தத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் — Memorandum of Understanding — முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது என்றாலும் திட்டத்தைச் செயல்படுத்த திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருந்தது. ஆனால், மக்களின் நலத்தையே முன் வைத்துச் செயல்படுகின்ற இந்த அரசு முந்தைய தி.மு.க. அரசின் காலத்தில் வகுக்கப்பட்டது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடாமல் இதற்கு உயிர் கொடுத்துச் செயல்படுத்த முன்வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வேற்றுமை பாராட்டுதல், ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்ளுதல், மற்றவர்களுக்குப் புகழ் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற மாச்சரியத்தோடு செயல்படுதல் ஆகிய குணாதிசயங்கள், தி.மு.க.—விற்கே சொந்தமாக இருக்கட்டும். நாம் எப்போதும் மக்கள்



நலனையே முன்வைத்துச் செயல்படுவோம் என்பதுதான் என்னுடைய கொள்கை, இந்த அரசினுடைய கொள்கை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த மாநிலம் முழுவதற்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க, ஆஸ்திரேலிய நாட்டின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை அருகே பெருங்குடியில் 14.85 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை இந்த அரசு அமைக்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'கட்டுதல்—சொந்தமாக்குதல்—இயக்குதல்' Build-Own-Operate என்ற அடிப்படையில் இந்த மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும். இதனால் சென்னை நகரின் மின் தேவையையும் பூர்த்தி செய்ய இயலும். இத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் மின்சக்தியினை மின் வாரியம் கொள்முதல் செய்யும். இத்திட்டம் 24 மாதங்களுக்குள் செயல்வடிவம் பெற்று மின்உற்பத்தி தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு ஏறத்தாழ 180 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படும். அந்தச் செலவினையும் ஈ.டி.எல். நிறுவனமே ஏற்றுக் கொள்ளும். இதற்கு தேவையான இடம் 30 ஏக்கர். இதற்கான அடிக்கல் நாட்டு விழா தமிழ்ப் புத்தாண்டு தினமான 14—4—2003 அன்று நடைபெறும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மின்சாரம் உற்பத்தி செய்த பிறகு, எஞ்சுகின்ற கழிவுப் பொருட்களைச் சாலைகள் அமைப்பதில் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையின் வரலாற்றில், ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில், ஒரு புதிய குறிப்பிடத்தக்க அம்சமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை முதன் முதலாக, 1992 ஆம் ஆண்டில், சென்னையில் நான் தொடங்கி வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குக் கிடைத்த வரவேற்பு, வெற்றி, பாராட்டு, ஆகியவற்றின் ஊக்கத்தினால், அதிக எண்ணிக்கையிலான, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதன் எண்ணிக்கை, 1996 ஆம் ஆண்டுக்குள், 58 ஆக அதிகரித்தது. ஆனால், அடுத்து அமைந்த தி.மு.க. ஆட்சியில், 1996 முதல் 2001 வரை 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் புதியதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றுகூடத் தொடங்கப்படவில்லை என்பதோடு, ஏற்கெனவே நான் அமைத்த மகளிர் காவல் நிலையங்கள் அனைத்தும், சீர்கேட்டுக்கு ஆளாக்கப்பட்டு, எந்த நோக்கங்களுக்காக அவை தொடங்கப்பட்டனவோ, அந்தச் சீரிய நோக்கங்களைச் செயல்படுத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

பிற்பகல் 1—05

மறுபடியும், ஆட்சிப் பொறுப்பை 2001 மே மாதத்தில் நான் ஏற்றுக்கொண்ட பிறகு, பெண்கள் நலன் காக்க புதிய உத்வேகத்துடன் செயல்படும் வகையில் மேலும் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்க உத்தரவிட்டேன். அதுமட்டுமல்லாமல், பெண்களின் அச்சத்தைப் போக்கி, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் களைவதற்காக, தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டேன்.

அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களில், ஏற்கெனவே எனது ஆட்சிக் காலத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டிருந்த 58 உட்கோட்டங்கள் நீங்கலாக, மீதமுள்ள 130 காவல் உட்கோட்டங்கள் அனைத்திலும், ஒரு உட்கோட்டத்திற்கு ஒன்று வீதம், படிப்படியாக 3 ஆண்டுகளில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2001—2002 ஆம் ஆண்டில், 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. 2002—2003 ஆம் ஆண்டில், 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்க ஆணையிடப்பட்டு, அவற்றில் முதலாவதும் தமிழகத்தின் 109—வதுமான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை ஆண்டிபட்டியில் தொடங்கி வைத்து, அண்மையில் 27—1—2003 அன்று தமிழகத்தில் ஒரே நேரத்தில், சென்னை தியாகராயர் நகரில் ஒரு நிலையமும், பிற 36 உட்கோட்டங்களில் 36 நிலையங்களும், ஆக, 37 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஒரே நாளில் தொடங்கி வைத்தேன். தற்போது சாத்தான்குளத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படவிருக்கின்ற, இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், பின்னர் தொடங்கி வைக்கப்படும். 2003—2004 ஆம் ஆண்டில், எஞ்சியுள்ள 40 காவல் நிலையங்கள் தொடங்கி வைக்கப்படும். தயக்கமின்றி பெண்கள் நேரில் சென்று, தங்கள் குறைகளைக் கூறி, உடனடி நிவாரணம் பெறும் வகையில், உலகமே பாராட்டும்படி, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



பாதிப்புக்கு ஆளான பெண், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நேரில் அணுக முடியாத போது, 1091 என்ற தொலைபேசி எண்ணுடன் அவரோ அல்லது அவரைப் பற்றித் தகவல் அறிந்த வேறு நபர்களோ தொடர்பு கொண்டால், உடனே மகளிர் காவலர்கள் காவல் நிலையத்தில் இருந்து விரைந்து சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் வகையில், Women Helpline என்னும் சிறந்த ஏற்பாட்டையும் நான் உருவாக்கினேன். இதுமட்டுமன்றி, குழந்தைகள் பாதிப்புக்கு ஆளாகும் போது, 1098 என்ற தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொண்டால், அவர்களுக்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மூலம் உடனடி உதவி கிடைக்கும் வகையில், Child Helpline என்னும் ஏற்பாட்டையும், செய்திருக்கின்றேன்.

மேலும், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் புகார், தொலைபேசியில் கிடைத்தவுடன், மகளிர் ஆலோசனைக் குழு விரைந்து சென்று நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் நடமாடும் ஆலோசனைக் குழுவிற்கான முதல் வாகனத்தை, அதாவது, Mobile Counselling Unit—ஐ, 27—1—2003 அன்று சென்னை, தியாகராயர் நகர், அனைத்து மகளிர் காவல் நிலையத் தொடக்க விழாவில், காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறை பயன்பாட்டுக்கென வழங்கினேன். இந்த நடமாடும் ஆலோசனைக் குழு வாகனத்தில், தொலைக்காட்சிப் பெட்டி, ஒலிபெருக்கி, VCR, வீடியோ கேசட்டுகள், வான் செய்தி கருவிகள் (VHF Sets). ஜெனரேட்டர்கள், Halogen bulb-கள், விழிப்புணர்வு கருத்துப் பலகைகள் போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இருள் சூழ்ந்த இடத்திலும்கூட, இந்த வாகனத்தில் உள்ள கருவிகள் மூலம், வெளிச்சத்தை வழங்க முடியும். இத்தகைய 17 வாகனங்கள் அன்று ஒரேநேரத்தில் 17 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு, அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நவீனப்படுத்தி, பெண்களின் துயரங்களைத் தீர்த்து வைத்து, அவர்களுக்கு நம்பிக்கை வழங்குகின்ற வகையில், அவற்றுக்கு புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் வழங்கி இருக்கிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாளில் 24 மணி நேரமும், அல்லும் பகலும் தொடர்ந்து கடமையாற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் காவல் துறையினர். அவர்களது குறைகளை நேரில் கேட்டறிவதற்காக, அவர்களை சென்னை,

தலைமைச் செயலகத்திற்கே வரவழைத்து, "காவலர் குறை தீர்க்கும்" கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தேன். இந்தியாவிலேயே இதுவரை எந்த முதல்வரும் செய்திராத சாதனை என்று அதனைப் பலரும் பாராட்டுகின்றனர். அவ்வாறு குறை கேட்டபோது, தங்கள் சிறிய குழந்தைகளை வீட்டிலேயே விட்டு விட்டுப் பணிக்குச் செல்வதால், ஏற்படுகின்ற துன்பத்தைப் பற்றி, பெண் காவலர்கள் என்னிடம் முறையிட்டார்கள். மக்களுக்குப் பணியாற்றுகின்ற கடமையில் எப்போதும் இருக்கின்ற காவலர்கள், குறிப்பாக, மகளிர் காவலர்கள் தங்கள் பணியைச் சிறப்புடன் செய்திட உதவும் வகையில், அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவதற்காக, "காவலர் குழந்தைகள் நலக் காப்பகம்" என்னும் சிறந்த திட்டத்தைத் தொடங்க உத்தரவிட்டேன்.

பிற்பகல் 1—10

இதற்கிணங்க, மாவட்டத்திற்கு ஒன்று வீதம், 29 மாவட்டங்களிலும், மாநகருக்கு ஒன்று வீதமும், 6 மாநகரங்களிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கு 9ம், ஆக மொத்தம் தமிழகமெங்கும் காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்கள் 44 தொடங்கப்படும். இந்தக் குழந்தைகள் நலக் காப்பகங்களில் பெண் காவலர்கள் தங்களுடைய குழந்தைகளை நம்பிக்கையோடு விட்டு விட்டு, நாட்டுக்குத் தாங்கள் செய்கின்ற கடமையை நிம்மதியாகச் செய்யலாம். இந்தக் காப்பகங்களில், விளையாட்டுப் பொருள்களும், கல்வி புகட்டும் எளிய சாதனங்களும், குழந்தைகளுக்காக வைக்கப்பட்டிருக்கும். இந்தக் காப்பகங்களில், குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆரோக்கியமான உணவு வகைகள் வழங்கப்படும். இதற்குரிய செலவினத்தில், 50 சதவிகிதத் தொகை, குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து வசூலிக்கப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை, உடனுக்குடன் அரசுக் கணக்கில் தவறாமல் வரவு வைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளேன்.

காப்பகங்களில் குழந்தைகளைப் பாராமரிக்கும். 'ஆயா' வேலையில், காவல் துறை குடும்பங்களைச் சார்ந்த மகளிரே ஈடுபடுத்தப்படுவார்கள். கருணை அடிப்படையில் பணியில் நியமிக்கப்படுவதற்கு என்று காத்திருக்கும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களிடையே இருந்து இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,500/— தொகுப்பூதியமாக வழங்கப்படும். 10 குழந்தைகளுக்கு ஓர் ஆயா வீதம், 20 குழந்தைகளுக்கு 2 ஆயாக்கள் நியமிக்கப்படுவார்கள். ஒரு பெண் உதவி ஆய்வாளர் இந்தக் குழந்தைகள் நலக் காப்பகத்தின் பொறுப்பாளராகச் செயல்பட்டு அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிடுவார்.



இந்தத் திட்டத்தின்படி, சென்னை புதுப்பேட்டையில் உள்ள ஆயுதப் படை வளாகத்தில் அமைந்துள்ள, சென்னை மாநகர காவலர் குழந்தைகள் நலக் காப்பகத்தை 27—1—2003 அன்று நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தேன். மேலும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை, ஆகிய 5 மாநகர காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்களையும் அதே விழாவில் தொடங்கி வைத்தேன். மீதமுள்ள காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்கள் அனைத்தும் படிப்படியாகத் தொடங்கி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பலவிதமான கருத்துகளைத் தெரிவித்தார்கள். ஆகவே மீண்டும் இதற்கு ஒரு விளக்கம் அளிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

கடந்த 1991 ஆம் வருடம் முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்தபோது சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வந்தது என்னைப் பெரிதும் பாதித்தது. பெருகிவரும் மக்கள் தொகை, அடிக்கடி பருவமழை—குறிப்பாக வடகிழக்குப் பருவமழை—பொய்த்தல் ஆகியவை இந்தப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கியது. எப்படியாவது சென்னை மாநகருக்கு இவ்வாறு ஏற்படுகின்ற குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகவும், முழுமையாகவும் தீர்க்க வேண்டும் என்பதை நான் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு அதற்கான தீர்வு குறித்துத் தீவிரமாகச் சிந்தனை செய்தேன். அதற்காகப் பல்வேறு திட்டங்களின் சாதக பாதகங்களை ஆராய்ந்து இறுதியில் 1993 ஆம் ஆண்டு நான் "புதிய வீராணம் திட்டத்தை" அறிவித்தேன். அப்போது இந்தத் திட்டத்தை உலக வங்கியின் உதவியோடு 464 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிர்வாக அனுமதி வழங்கியது.

இவ்வாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு உரிய கடனுதவிக்காக இந்தத் திட்டம் உலக வங்கிக்குப் பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு சாத்தியக் கூறு ஆய்வினை அதாவது Feasibility Study-ஐ 1994 ஆம் ஆண்டில் Tata Consultancy Engineers என்ற தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டது. அந்த நிறுவனம் வீராணம் ஏரியின் நீர்வரத்து விவரங்களை அடிப்படையாக வைத்து

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 31

கிடைக்கின்ற நீர் அளவை நன்கு ஆராய்ந்தது. மேலும், அடுத்த 100 ஆண்டுகளுக்கான தேவையைக் கணக்கில் கொண்டு அந்தப் பகுதியின் விவசாயத்திற்கும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்கும் தேவைப்படக்கூடிய நீர் அளவை மதிப்பிட்டது. அத்தகைய ஆய்வுக்குப் பின்னர், அவ்வாறு கிடைக்கின்ற நீர் அளவு இந்த இரண்டு தேவைகளுக்கும் போதுமானதாக இருக்குமென்று நன்கு, உறுதியாகத் தெரிந்த பின்னரே, வீராணம் ஏரி, வடவாறு வாய்க்கால் மற்றும் வீராணம் ஏரியின் பாசனக் கால்வாய்களை மேம்படுத்த உரிய பரிந்துரையை அந்த நிறுவனம் அரசுக்கு வழங்கியது. அதுமட்டுமின்றி, உலக வங்கியும் தனது தொழில்நுட்பக் குழுக்களை அனுப்பி இந்தத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் துல்லியமாக ஆய்வு செய்தது. அதன் பின்னர்தான் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் இந்தத் திட்டம் நிரந்தரமாகச் செயல்படுத்தப்படுவது சாத்தியமே என்று உலக வங்கியும் உறுதி செய்தது. இவ்வாறு உலக வங்கியே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் பலன்களையும் மிகவும் தீவிரமாக ஆய்வு செய்த பின்னரே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1,638 கோடி ரூபாயைக் கடனாக வழங்க முன்வந்தது. அதன் பின்னர் எனது தலைமையிலான அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலிருந்தபோதே, 1995—ல் உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

*பிற்பகல் 1—15*

பின்னர், 1996 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை, திருத்தப்பட்ட மதிப்பீடான 1,638 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான உலக அளவிலான ஒப்பந்தப் புள்ளிகள் அதாவது, Global Tenders கூட எங்கள் அரசால் அப்போது விடப்பட்டன. ஆனால், அதனை அடுத்துவந்த பொதுத் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், திரு. கருணாநிதி முதலமைச்சராக பதவியேற்றவுடன், உலகவங்கியே முன்வந்து 1,638 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கிய பின்னர்கூட, ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்ட நிலையில் கூட, அந்தத் திட்டத்தை அப்படியே உதாசீனப்படுத்திக் குப்பையில் போட்டுவிட்டார்.

அதற்குக் காரணம் என்ன தெரியுமா? சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, தொலைநோக்குப் பார்வையோடு, வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடிக்கப்படக்கூடிய புதிய வீராணம் திட்டத்தை நான் கொண்டு வந்தேன் என்ற



2003 ஜனவரி 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காழ்ப்புணர்ச்சி தான்! அதுமட்டுமல்லாமல், வீராணம் என்ற பெயரைக் கேட்டாலே தமிழகத்திலேயே அந்தப் பெயரைக் கண்டு அச்சப்படக் கூடிய ஒருவர் உண்டு என்று சொன்னால் அவர் திரு. கருணாநிதி மட்டும்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கெல்லாம் வீராணம் என்று சொன்னால், எப்போதும் கடல் போன்று நீர் தேங்கி நிற்கக் கூடிய வீராணம் ஏரியும், அதன் நீண்ட கரைகளும்தான் நினைவுக்கு வரும். ஆனால் திரு. கருணாநிதிக்கோ, வீராணம் என்ற சொல்லைக் கேட்டாலே allergy தான்! திரு. கருணாநிதி அன்றைய பழைய வீராணம் திட்டத்தில் நடத்திய ஊழல், சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டு, அம்பலப்படுத்தப்பட்டதெல்லாம் நினைவுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாகவோ என்னவோ, அவர் என் மீது கொண்ட பொறாமை உணர்ச்சியாலும், அவருக்கு இருந்த அச்ச உணர்வினாலும், இந்த நல்ல திட்டத்தைப் பாழ்படுத்தத் துணிந்தார் திரு. கருணாநிதி.

காவிரி நதிநீர் தொடர்பான வழக்கினை உச்ச நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு, தமிழக மக்களுக்கு மாபெரும் துரோகத்தை இழைத்த திரு. கருணாநிதி, மீண்டும் தான் முதலமைச்சராக இருந்த போது இந்தப் புதிய வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தாமல், குறுகிய மனப்பான்மையோடு அதனை இரத்து செய்து, சென்னை மாநகர மக்களுக்கு ஒரு மாபெரும் அநீதியை, துரோகத்தை இழைத்துவிட்டார் என்று நான் அவர் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, உலக வங்கி தமிழகத்திற்கு 1,638 கோடி ரூபாய் கடனுதவி வழங்க முன்வந்ததே பெரிய விஷயம். அவ்வாறு உலக வங்கியே முன்வந்த போது சென்னை மாநகர மக்களைப் பாதிக்கின்ற வகையில் அரசியல் காரணங்களுக்காக திரு. கருணாநிதி அதனை உதாசீனப்படுத்தியது எந்த வகையில் நியாயம்? அப்போதே நான் தொடங்கிவைத்த திட்டத்தை, Global Tenders நிலைக்குக் கொண்டு வந்திருந்த புதிய வீராணம் திட்டத்தை, தொடர்ந்து திரு. கருணாநிதி செயல்படுத்தியிருந்தால், சுமார் மூன்றரை வருட காலத்தில் அதாவது 1997 ஆம் ஆண்டின் இறுதியில், அந்தத் திட்டத்தை முடித்து இருக்கலாம். 1998—லிருந்து தண்ணீர் வரத் தொடங்கியிருக்கும். சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையும் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அதை திரு. கருணாநிதி செய்யாத காரணத்தால், அப்போதே தீர்க்கப்பட்டிருக்கக்கூடிய சென்னை மாநகாக் குடிநீர்ப் பிரச்சினை தற்போதும் நிலவி வருகிறது.

அரும்பாடுபட்டு, பகீரதப் பிரயத்தனம் செய்து நான் உலக வங்கி உதவியோடு கொண்டு வந்த புதிய வீராணம் திட்டத்தைப் பாழ்படுத்தி, திரு. கருணாநிதி செய்த மாபெரும் தவறினால், மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதற்காகப் புதியதோர் முயற்சியைத் தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய நல்ல திட்டத்தை எந்த ஒரு பொறுப்புள்ள முதலமைச்சராவது இவ்வாறு பாழ்படுத்தத் துணிவாரா? என்னால் தொடங்கப்பட்ட திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக அந்தத் திட்டத்தின் பயன் தொழில்நுட்ப ரீதியாக வல்லுநர்களால் உறுதி செய்யப்பட்ட பின்னர்கூட அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு திரு. கருணாநிதி அந்தத் திட்டத்தைச் சிதைத்துவிட்ட காரணத்தால், 5 ஆண்டுகள் வீணாக்கப்பட்டு, பெரிய இடைவெளிக்குப் பின்னர், எங்களது அரசு பதவியேற்ற பிறகு, இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மறுபடியும் புதிய முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும், சென்னைவாழ் மக்களின் நலன் கருதி, அவர்கள் ஆண்டுதோறும் பட்டுக்கொண்டிருக்கும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறைத் துன்பம் நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், நான் மீண்டும் சென்னை பெருநகர குடிநீர்ப் பெருக்கத் திட்டம்—I என்ற திட்டத்தை 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிட்டு, அதனை வருகின்ற 2—2—2003 அன்று அதாவது நாளை மறுநாள் கடலூரில் நடைபெற இருக்கின்ற அரசு விழாவில் தொடங்கி வைக்க உள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—20

ஆனால் திரு. கருணாநிதி, தான் முதலமைச்சராக இருந்தபோது என்ன செய்தார்? புதிய வீராணம் திட்டம் வேண்டாம் என்றார். ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருகிறேன் என்றார். அதைத்தான் ஒழுங்காகக் கொண்டு வந்தாரா? அதுவும் இல்லை. இப்போது சென்னை நகரில் குடிநீர் நிலைமை எப்படி உள்ளது? திரு. கருணாநிதியின் பொறுப்பற்ற செயலால் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது.

ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலேயே போதுமான தண்ணீர் இல்லை. ஆந்திர மாநிலத்திலும் பருவமழை பொய்த்துவிட்டதால் இந்த ஆண்டு அங்கேயும் வறட்சி பெரிய அளவில் நிலவி வருகிறது. அதுமட்டுமன்றி அலமாட்டி



அணையிலிருந்து ஆந்திர மாநிலத்திற்கு உரிய தண்ணீரை கர்நாடக மாநிலம் தர மறுக்கின்றது. ஆக, அவர்களுக்கே சிரமமான நிலை இருக்கும்போது ஆந்திர மாநிலம் இந்த ஆண்டில் நமக்குத் தண்ணீர் கொடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. திரு. கருணாநிதி, தன் குறுகிய மனப்பான்மையாலும் பொது நோக்கற்ற செய்கையினாலும் புதிய வீராணம் திட்டத்தைப் பாழபடுத்தினார். கிருஷ்ணா நதி நீரும் ஆந்திர மாநிலத்தில் இருந்து முழுமையாகக் கிடைப்பது தற்போது ஆந்திர மாநிலத்திலுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையான சூழ்நிலையில் சிரமமாக உள்ளது.

பொறுப்புள்ள ஓர் அரசாங்கம் என்று சொன்னால், அது பொது மக்களைப் பெரிய அளவில் பாதிக்கின்ற பிரச்சினைகளில் பல தீர்வுகளைத் தொலைநோக்குப் பார்வையோடு தேடிக் கண்டுபிடித்து ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். நான் அன்றையதினம் 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக இருந்தபோது ஒரு பக்கம் தெலுங்கு கங்கைத் திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டு இருந்தேன். மறுபக்கம், அதையே நம்பிக்கொண்டிருக்காமல் புதிய வீராணம் திட்டத்தையும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஒரு திட்டத்தில் குறை ஏற்பட்டால், மற்றொன்று கை கொடுக்கும் என்னும் தொலைநோக்குப் பார்வையோடு ஒட்டுமொத்தமாக சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினை அடியோடு தீர்க்கப்பட, சென்னை மாநகர மக்களுக்கு அன்றாடம் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கைகளையெல்லாம் இதய சுத்தியோடு நான் எடுத்தேன். ஆனால் திரு. கருணாநிதியோ தன்னுடைய மலிவான அரசியல் போக்கினாலும், மக்கள் விரோதப் போக்கினாலும் இரண்டு திட்டங்களையும் கோட்டை விட்டார். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் வருவதைக் கெடுத்து விட்டார். இன்றைக்கு என்ன நிலைமை? வீராணத்திலிருந்தும் தண்ணீர் வரவில்லை. கிருஷ்ணா நதிநீரும் வரவில்லை. அதன் விளைவு, இன்று சென்னை மாநகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை ஏற்பட்டுள்ளதற்கு திரு. கருணாநிதிதான் காரணம் என்பதை சென்னைவாழ் மக்கள் நன்கு அறிவர். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது எங்கள் அரசு செயல்படுத்தவுள்ள 720 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை பெருநகர குடிநீர்ப் பெருக்கத் திட்டம்—I சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 2.45 டி.எம்.சி. அடி தண்ணீர் வழங்கும். தற்போதுகூட இந்தப் புதிய வீராணம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 31

திட்டம் சாத்தியமானது அல்ல என்று சில எதிர்க்கட்சியினர் குறைகூறி வருகின்றனர். பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் இந்தத் திட்டத்தின் சாத்தியக்கூறுகள் பற்றிச் சில ஐயங்களைத் தெரிவித்தார். இந்த ஐயங்களைப் போக்கும்வகையில் ஒருசில முக்கிய தொழில்நுட்ப ஆய்வு முடிவுகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

*1994* ஆம் ஆண்டு முதல் *2002* ஆம் ஆண்டு வரை *9* ஆண்டுகள் பதிவாகியிருந்த நீர்வரத்துக் குறிப்புகளை ஆய்வு செய்ததில் ஏற்கெனவே Tata Consultancy Engineers எடுத்த முடிவு இந்த *9* ஆண்டுகளுக்கும் பொருந்தும் எனத் தெரிகிறது. எனவே, *1965* முதல் *2002* வரை *38* ஆண்டுகளின் நீர்வரத்து விவரங்களை ஆய்வு செய்ததில் வீராணம் ஏரி மற்றும் கால்வாய்களை மேம்படுத்தும் பணிகள் முடிவுற்ற பின்னர் விவசாயத்திற்கும் சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கும் போதிய நீரைப் பெற முடியும் எனத் தெரிய வந்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சமர்ப்பித்த ஒரு கருத்துருவின்படி அன்றையநிலையில் பாசனத் தேவை மற்றும் சென்னை குடிநீர் தேவைக்கும் குறைவாகவே நீர் இருக்கும் எனக் கூறியுள்ளதாக இந்தச் சபையில் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சமர்ப்பித்த கருத்துருவினை ஆய்ந்து பார்த்தபோது அவர்களின் கணக்கின்படி சராசரியாக ஆண்டொன்றிற்குக் கிடைக்கும் நீர் விவசாயத்திற்கும் சென்னைக்கு எடுக்கும் நீரையும் சேர்த்து போதுமானதாக இருக்கும் எனத் தெரிய வருகிறது.

*பிற்பகல் 1—25*

இவை மட்டுமன்றி, இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர் தான் இந்தத் திட்டம் செயல்படுத்தத் தேவையான *720* கோடி ரூபாய் திட்டச் செலவில் அரசுப் பங்குத் தொகையாக *239* கோடியே *36* இலட்சம் ரூபாய் போக மீதம் தேவைப்படும் *480* கோடி ரூபாய் கடனுதவியை LIC, HUDCO, Corporation Bank மற்றும் TUFIDCO போன்ற நிதி நிறுவனங்கள் அளிக்க முன்வந்திருக்கின்றன. இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படும் என்று உறுதி செய்துகொண்டதன் பின்னர் தானே, இந்த நிதி நிறுவனங்கள் எல்லாம் கடன் உதவிகளை அளிக்க முன்வந்து இருக்கின்றன? அவர்கள் தொழில்நுட்ப ரீதியாக உறுதி செய்துகொள்ளாமல் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கடனாக வழங்க எப்படி முன்வருவார்கள் என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 ஜனவரி 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அன்றையதினம், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், இத்திட்டத்திற்காக உலக வங்கி, *1,638* கோடி ரூபாய் கடனாக வழங்க முன்வந்ததும், இன்றையதினம் இந்த நிதி நிறுவனங்கள் எல்லாம் *720* கோடி ரூபாய் கடன் வழங்க முன்வந்திருப்பதுமே இந்தத் திட்டம் சாத்தியமானதுதான் என்பதற்கான சான்றுகள் ஆகும். வேறென்ன சான்று தேவை?

வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு ஆண்டு ஒன்றுக்கு *2.45* டி.எம்.சி. அடி தண்ணீர் கொண்டு செல்லப்படுவதால் வீராணம் ஏரியின் மூலம் பயன்பெறும் பாசனப் பகுதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதை ஏற்கெனவே இங்கே விளக்கமாகக் கூறியிருக்கின்றேன். அதைத் தற்போது நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்வதோடு, வீராணம் ஏரி சார்ந்த பாசன வாய்க்கால்களும் பயன்பெற்றிடும் வகையில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வீராணம் ஏரியின் பாசனப் பகுதிகளைப் பாதுகாத்திட *110.95* கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள *1996* ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வாறு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டதால் ஏரியின் கொள்ளளவு *930* மில்லியன் கன அடியிலிருந்து *1,485* மில்லியன் கன அடி என அதிகரிக்கப்பட்டுள்ளது. வீராணம் ஏரிக்குக் காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டு வரும் வடவாறு கால்வாயில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பயனாக இதில் நீர்வரத்து வினாடிக்கு *1,400* கன அடி என்பதிலிருந்து வினாடிக்கு *2,300* கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஏரியினைத் தூர் வாரி அதன் கரையின் உயரம் *2* அடி உயர்த்தப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின் மூலம் இதுவரை *54* கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள ஏரி மற்றும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை நிறைவு செய்யவும் பாசனப் பரப்பிலுள்ள நீர் வழிகளை மேம்படுத்தவும் *35* கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு இந்தப் பணிகளையும் ஜூன் *2004*—க்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்ட பின்னர், விவசாயத்திற்கு என்று கிடைக்கும் நீரின் அளவு, எந்த ஓர் ஆண்டிலும் இதற்கு முன்னர் கிடைத்த நீரின் அளவைவிட ஒரு டி.எம்.சி. அடி

அளவிற்குக் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

காவிரி தொழில்நுட்ப மையத்தின் தலைவர் மற்றும் நீர் ஆதாரங்களுக்கான தமிழ்நாடு அரசின் ஆலோசகர், 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, சென்னை நகர்க் குடிநீர்த் தேவைக்கு தினமும் 180 மில்லியன் லிட்டர் உறுதியளிக்க எந்தவித சிரமமும் இல்லை என்று தனது கருத்தினைத் தெரிவித்துள்ளார். மேலும், வீராணம் ஏரியின் நீர் மட்டத்தை ஒவ்வொரு மாதமும் பாசனத்திற்குத் தேவையான அளவிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு, பாசனத் தேவையினை முழுமையாகப் பாதுகாக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதன் மூலம் கிடைக்கும் ஒரு லிட்டர் நீரின் விலை சுமார் 1.8 பைசா அதாவது 1,000 லிட்டரின் விலை 18 ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மாற்றுத் திட்டங்களான காவிரி ஆற்றில் ஜேடர்பாளையத்திலிருந்து குடிநீர் எடுக்கப்படுவது மற்றும் உவர்ப்பு நீர் மற்றும் கடல் நீரைக் குடிநீராக்குவது ஆகிய திட்டங்களுக்கான விலையைவிடக் குறைவான விலையே ஆகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு வருகின்ற திட்டம் பற்றிச் சில விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக அப்போதைய தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், ஆந்திர மாநிலத்தின் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. என்.டி. ராமராவ் அவர்களுக்கும் இடையே 18—4—1983 அன்று ஓர் ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி சென்னை குடிநீர்த் தேவைக்காக ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து ஆண்டுதோறும் 15 டி.எம்.சி. அடி நீரைக் கால்வாய்களின் மூலம் கொண்டு வந்து இடையில் ஏற்படும் நீர் விரயமான 3 டி.எம்.சி. அடி நீரை கழித்துக் கொண்ட பிறகு, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 மாதங்களுக்கு 8 டி.எம்.சி. அடி நீர், அதனை அடுத்து ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டி.எம்.சி. அடி நீர் என்ற விகிதத்தில் மொத்தம் 12 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழ்நாட்டு எல்லையில் ஆந்திர அரசு அளிக்க வேண்டும்.



பிற்பகல் 1—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** தலைவர் சொல்லவில்லை. அதனால்தான் பார்த்தேன். *(சிரிப்பு)*

1994 ஆம் ஆண்டின் விலைப் பட்டியல்படி இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 2,191 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாட்டின் பங்கு 522 கோடி ரூபாய் ஆகும். இதுவரை தமிழ்நாடு 512 கோடி ரூபாயைச் செலுத்தியிருக்கிறது. இவ்வாறு மொத்தம் செலுத்தப்பட்ட 512 கோடி ரூபாயில் 330 கோடி ரூபாயினை 1991 முதல் 1996 வரை இருந்த எனது தலைமையிலான அரசு வழங்கியது மட்டுமன்றி, இது தொடர்பான பணிகளைத் துரிதப்படுத்தவும் செய்தோம்.

திட்ட மதிப்பீடாக தமிழ்நாடு செலுத்த வேண்டிய பங்கு மட்டுமன்றி, 189 கோடி ரூபாயை ஆந்திர மாநிலத்தின் எல்லைப் பகுதியையும், பூண்டியையும் இணைக்கின்ற இணைப்புக் கால்வாய், பூண்டி—செங்குன்றம் இணைப்புக் கால்வாய் மற்றும் செம்பரம்பாக்கம் இணைப்புக் கால்வாய் ஆகியவற்றை ஆழப்படுத்துகின்ற பணிக்காகவும், பூண்டி, செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை உயர்த்த அதன் கரைகளை உயர்த்தும் பணிக்காகவும் தமிழ்நாடு ஏற்கெனவே செலவழித்துள்ளது.

கடந்த 25—12—2002 அன்று நான் ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களைச் சந்தித்து தெலுங்கு—கங்கைத் திட்டத்தில் ஆந்திரப் பிரதேச அரசினால் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்ற, எஞ்சி இருக்கின்ற பணிகளை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். குறிப்பாக, ஒன்று, சோமசீலா நீர்த்தேக்கத்தின் முழுக் கொள்ளளவு 78 டி.எம்.சி. அடி. நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ள 11 கிராமங்களில் உள்ள மக்களை வேறு இடத்தில் குடியமர்த்தும் பணிகளும், அவர்களுக்கான புனரமைப்புப் பணிகளும் முடிக்கப்படாமல் இருப்பதால், தற்போது இந்த நீர்த்தேக்கத்தில் 37 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே தேக்கி வைக்கமுடிகிறது. இதனால் கடந்த சில ஆண்டுகளில் இருமுறை வெள்ளம் வந்தும் தண்ணீரைச் சேமிக்க முடியாமல் கடலுக்கு வீணாகச் சென்றது. இதனைச்

சுட்டிக்காட்டி, சோமசீலா நீர்த்தேக்கத்தில் அதன் முழுக் கொள்ளளவு வரை நீரைத் தேக்கி வைக்கும்பொருட்டு இந்தப் பணிகளை விரைவில் முடித்திட வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

இரண்டாவதாக, கண்டலேறு நீர்த்தேக்கத்தில் அதன் முழுக் கொள்ளளவான 59 டி.எம்.சி. அடி நீர் வரையில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்வதற்காக அந்த நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேற்பகுதியில் உள்ள இரண்டு சாலைகளை மாற்றியமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியத்தை ஆந்திர மாநில முதலமைச்சரிடம் வலியுறுத்திக் கூறினேன்.

மூன்றாவதாக, தெலுங்கு கங்கைக் கால்வாய் மூலம் பெண்ணாறுக்கு நீர் வரும் சென்னமுகப்பள்ளி கால்வாய் இணைப்பில் மீதமுள்ள 13.81 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் தோண்டும் பணி உடனடியாக முடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் மற்றும் சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு வெள்ள நீரை எடுத்துச் செல்லும் கால்வாய் மற்றும் கண்டலேறு — பூண்டி கால்வாய்கள் ஆகியவற்றில் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணிகளை விரைந்து உடனடியாக முடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

நான்காவதாக, வட கிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, தற்பொழுது சென்னை மாநகருக்குக் குடிநீர் அளிக்கும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர் இருப்பு மார்ச் 2003 வரைக்கும் மட்டுமே போதுமானதாக உள்ளதால், ஏப்ரல் 2003 முதல் சென்னை மாநகருக்குப் போதுமான குடிநீரை அளிக்கவும் ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களின் உதவியை நான் கோரினேன்.

அதைத் தொடர்ந்து இத்திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுவை உடனடியாகக் கூட்ட வேண்டும் என நான் கேட்டுக்கொண்டேன். ஆந்திர முதல்வரும் அதனை ஏற்றுக் கொண்டார். அதன்படி, ஒருங்கிணைப்புக் குழு தனது 39—வது கூட்டத்தை 10—1—2003 அன்று ஹைதராபாத் நகரில் கூட்டியது. அந்த கூட்டத்தில் இரு மாநில தலைமைச் செயலாளர்களும், இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் பற்றி விவாதித்தார்கள். அந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.



பிற்பகல் 1—35

ஒன்று, சென்னமுகப்பள்ளி கால்வாய் தோண்டுவதில் 13.81 கி.மீ. இடைப்பட்ட தூரத்திற்கு இருந்து வந்த அனைத்து சட்ட இடையூறுகளும் நீங்கிவிட்டன. இப்பணி மார்ச் 2005—க்குள் முடிவடையும். இதற்கிடையில் சென்னமுகப்பள்ளி கால்வாயில் 24.9 ஆம் கிலோமீட்டரில் உள்ள ரெகுலேட்டர் வழியாகப் பெண்ணாற்றை வந்தடையும் வக்கிலேறு ஓடைக்குத் தண்ணீர் விடுவிக்கப்படும்.

இரண்டாவதாக, சோமசிலா நீர்த்தேக்கத்தில் நீரில் மூழ்கும் பகுதியில் உள்ள நிலங்களைக் கையகப்படுத்துதல், புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் அந்த அணையின் முழுக் கொள்ளளவான 78 டி.எம்.சி. அடியில், 60 டி.எம்.சி. அடி வரையில் நீரைத் தேக்கி வைக்கும் வகையில் பணிகள் ஆகியவை வருகின்ற ஜூன் மாதத்தில் முடிவடையும்.

மூன்றாவதாக, கண்டலேறு நீர்த்தேக்கத்தின் மேற்பகுதியில் உயர்மட்ட contour—களில் தற்பொழுதுள்ள இரண்டு சாலைகளை மாற்றி அமைக்கும் பணி வருகின்ற ஜூன் மாதத்தில் முடிவடையும். இதன் மூலம் தற்பொழுது தேக்கி வைக்கப்படும் 16 டி.எம்.சி. அடியிலிருந்து, 30 டி.எம்.சி. அடி வரை கூடுதலாக நீரை அடுத்த பருவ காலத்தில் தேக்கி வைக்க முடியும். இந்தப் பருவ காலத்திற்குள் தேவையான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விடும். கண்டலேறு—பூண்டி கால்வாயில் பாதிப்படையும் பகுதிகள் அனைத்தையும் சீரமைத்து லைனிங் செய்யும் பணி வருகின்ற ஜூலை மாதத்தில் முடிவடையும்.

சென்னை நகரின் குடிநீர் இருப்பு மிகவும் குறைவான நிலையை எட்டியுள்ளதால், கூடியவிரைவில் ஸ்ரீசைலம் மற்றும் சோமசிலாவிலிருந்து கண்டலேறுவுக்கு நீரை வழங்குமாறு ஆந்திரப் பிரதேச தலைமைச் செயலாளரை, தமிழக தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு, சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீரை தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் முழுமையாகப் பெறவும், வரும் மாதங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், தக்க முயற்சிகள் இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு மதிப்புக் கூட்டு வரி, அதாவது VAT அறிமுகத்தால் நிதி நிலைமையில் ஏற்படும் விளைவுகள் பற்றி நான் இங்கே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

*21—12—2002* அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பங்கேற்று மாநில நிதி ஆதாரங்களைப் பற்றிச் சில வாதங்களை எடுத்துரைத்தேன். மதிப்புக் கூட்டு வரி முறையை ஏப்ரல் *1, 2003*—ல் இருந்து செயல்படுத்தும்பொழுது பல மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று நான் சுட்டிக் காட்டினேன். அதற்கீடாக *100* சதவிகித நஷ்ட ஈட்டினை மத்திய அரசு வழங்க வேண்டுமென்றும், தொடர்ந்து இதனை மூன்று ஆண்டுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் கூறி இருந்தேன். அத்துடன் மத்திய அரசு விற்பனை வரியை— Central Sales Tax -ஐ, மாற்றுவதாக இருந்தால் அதற்கு நிரந்தரமான *100* சதவிகித நஷ்டஈடு வழங்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தேன். அந்தக் கூட்டத்தின் இறுதியில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் பொழுது, முதல் ஆண்டிற்கு *100* சதவிகித நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அந்தக் கூட்டத்தில் மத்திய விற்பனை வரியை மாற்றியமைப்பது பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக *17—1—2003* அன்று புது டில்லியில் நடந்த மாநில நிதி அமைச்சர்களின் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது மதிப்புக் கூட்டு வரி *1—4—2003*—ல் இருந்து செயல்படுத்தப்படும்போது முதல் ஆண்டுக்கு *100* சதவிகித நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்றும், இது படிப்படியாகக் குறைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். அத்துடன் மத்திய விற்பனை வரியைக் கைவிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இதற்கான நஷ்டஈட்டுத் தொகை அதேமுறையில், அதாவது முதல் ஆண்டுக்கு *100* சதவிகிதம் என்றும், அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூட்டத்திலேயே மத்திய விற்பனை வரியை மாற்றும் கட்டத்தில் மாநிலங்களுக்கு நிரந்தர வருவாய் இழப்பு ஏற்படும் என்பதால் மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்திய பின்னர் மத்திய விற்பனை வரியை நீக்குவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இவ்வரசு வலியுறுத்தியது. மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்படுத்தும் பொழுது படிப்படியாக அதனால் ஏற்படக்கூடிய வருவாய் கூடும் என்பதால் அது மூன்று ஆண்டுகளில் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடு





செய்யும் என்று நம்புகின்றோம். ஆனால், மத்திய விற்பனை வரியைப் பொறுத்தவரை, அதனால் ஏற்படக்கூடிய இழப்பு ஒரு நிரந்தர இழப்பாக இருக்கின்றது. ஏனென்றால், மதிப்புக் கூட்டு வரி முறையில் கிடைக்கக் கூடிய கூடுதல் வருவாய் இதில் ஏற்பட வாய்ப்பில்லை. எனவேதான் மத்திய விற்பனை வரியை மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் நேரத்தில் விட்டுக் கொடுக்க வேண்டாம் என்பது எங்கள் கருத்து. அவ்வாறு செய்வதாக இருந்தால் அதற்கு நிரந்தரமாக *100* சதவிகித நஷ்டஈட்டுத் தொகையை வழங்கும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை. இதனை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மேலும் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

பிற்பகல் *1—40*

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதாவது, அனைத்து மாநிலங்களும் மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்றுக்கொண்டு அதனைச் செயல்படுத்த ஒரு தீவிர முயற்சி செய்து வரும் நேரத்தில் மத்திய விற்பனை வரியை அறவே நீக்க வேண்டும் என்றும், அதற்குப் போதுமான நிரந்தர நஷ்டஈட்டுத் தொகை வழங்கக் கூடியமுறை ஏற்படுத்தாமல் இருப்பதன் மூலம் பல மாநிலங்களுக்கு மிகச் சங்கடமான நிதிநிலை உருவாக்கப்படும் என்றும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் கட்டத்தில் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் மத்திய விற்பனை வரியையும் நீக்குவதனால் மேலும் ஒரு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய ஓர் அபாயகரமான நிலை உருவாகியுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய விற்பனை வரியை நீக்குவது என்ற முடிவை சற்றுப் பொறுத்து எடுத்துக் கொள்ளலாம் என்றும் அல்லது இதற்கு ஒரு நிரந்தர *100* சதவிகித நஷ்டஈட்டுத் தொகை வழங்கும் முறையை ஏற்படுத்த வேண்டுமென்றும், இதனைத் தவிர்த்து ஓர் அரைகுறையான நஷ்டஈட்டு முறையை ஏற்படுத்துவதனால் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்லாமல் குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, மேற்கு வங்காளம் போன்ற பல மாநிலங்களுக்கும் பெரும் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய ஓர் அபாயகரமான நிலை இருக்கிறது என்பதையும் இம்மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதுகுறித்து மத்திய அரசு ஒரு சாதகமான முடிவினை எடுக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, மத்திய அரசின் புதிய கடன் மாற்றியமைக்கும் திட்டம் - Debt Swap Scheme- பற்றிச் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். *18—10—2002* அன்று புதுடெல்லியில் மாநிலங்களிலுள்ள நிதிநிலையைப்

பரிசீலிக்க மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்று நான் உரையாற்றும் பொழுது, மாநிலங்களின் கடன் பளு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது என்றும், வட்டி பளு அதைவிடக் கிடுகிடுவென உயர்ந்துகொண்டே இருக்கின்றது என்றும், இதனால் மாநிலங்களால் எந்த வளர்ச்சிப் பணியையும் எடுத்துச் செயல்படுத்த இயலவில்லை என்றும் குறிப்பிட்டு இருந்தேன். அத்துடன் 11—வது நிதிக்குழு மாநிலங்களுக்கு கடன் நிவாரணம் வழங்கத் தவறி விட்டது என்பதையும் சுட்டிக்காட்டி இருந்தேன்.

மாநிலங்களின் வட்டி பளுவைக் குறைக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு கொண்டு வந்த கடன் மாற்றியமைக்கும் திட்டத்தை, Debt Swap திட்டத்தை வரவேற்கும் நேரத்தில், இதனை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று குறிப்பிட்டிருந்தேன், இந்தக் கடன் மாற்றியமைக்கும் திட்டத்திற்கு மாநிலங்கள் பெறக்கூடிய சிறுசேமிப்புக் கடனில் 20 சதவிகிதத்தைத் திருப்பி வழங்க வேண்டுமென்று கூறப்பட்டு இருந்ததுதான் இதற்கு முக்கிய காரணம். இவ்வாறு 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனைத் திருப்பிக் கொடுப்பதனால் மாநிலங்களுக்கு திடீரென்று மேலும் நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதோடு அன்றாடச் செலவினங்களுக்கே பெருத்த அளவில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து இருந்தேன். I had pointed out that the State will face a serious liquidity crisis.

21—12—2002 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் மாநிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில் கடன் நிவாரணத் திட்டமும் கடன் மாற்றியமைக்கும் திட்டமும் அறிவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தேன். ஆனால், அதன் பிறகு மத்திய அரசு இந்தக் கடன் மாற்றியமைக்கும் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு பகுதி வெளிச்சந்தையில் இருந்து புதிய கடன் பெற்றுக்கொள்ளவும், மற்றொரு பகுதி 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனில் இருந்து திருப்பி வழங்குதல் என்ற ஒரு முறையை வலியுறுத்தி, இதற்கு மாநிலங்கள் தங்களுடைய விருப்பத்தினை உடனே தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனை நடப்பாண்டில் மறுபடியும் செலுத்துவதால் ஏற்கெனவே உள்ள நிதிப் பற்றாக்குறை மேலும் கடுமையாக மோசமடைய வாய்ப்பு இருக்கின்றது. எனினும் வரக்கூடிய ஆண்டுகளில் வட்டிப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பெரும்பாலான மாநிலங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, இதனை நாமும் ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்மானித்துள்ளோம்.



ஆனால் 28—1—2003 அன்று பத்திரிகைகளில் மத்திய அரசு அவர்களுடைய கடன் பளுவைக் குறைப்பதற்கு ஏறத்தாழ 13,600 கோடி ரூபாய் அளவிற்கு வெளிச்சந்தையில் இருந்து புதிய கடனாகப் பெற்று உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடனை முன்கூட்டியே செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது. மத்திய அரசு தங்களுடைய வட்டிப் பளுவைக் குறைப்பதற்கு முழு அளவில் வெளிச்சந்தையில் இருந்து கடன் எழுப்பும் போது, மாநில அரசுகளுக்கு மட்டும் இந்த முறையை ஏன் பின்பற்றவில்லை என்ற வினா எழும்பியுள்ளது. மாநிலங்கள் மட்டும் 20 சதவிகித சிறுசேமிப்புக் கடன் முன்கூட்டியே செலுத்த வேண்டுமென்ற ஒரு நிபந்தனை விதிப்பது நியாயமாகத் தென்படவில்லை. எனவே, மாநிலங்களும் கடன் மாற்றியமைக்கும் திட்டத்திற்கு முழுமையாக வெளிச்சந்தையில் இருந்து கடன் எழுப்பலாம் என்ற முறையைப் பின்பற்றலாம். எனவே, மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள கடன் மாற்றுத் திட்டத்தினை ஏற்று கொண்டு இருந்தாலும், நம்முடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து முழு அளவில் வெளிச் சந்தையில் இருந்து புதிய கடன் எழுப்ப வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—45

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்திருந்தீர்களே, அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். ஊரகப் பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வெளிச்சந்தையில் உள்ள வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடன் என் தலைமையிலான அரசு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் இதுவரை 182 வளர்ச்சி வட்டாரங்களில் 227.41 கோடி ரூபாய் செலவில் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இப்போது வங்கிகள் வாயிலாக 12 திட்டங்களும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் — Tamil Nadu Industrial Investment Corporation - TIIC - மூலமாக 6 திட்டங்களும்

செயல்படுத்த இப்போது அனுமதியை வழங்கியுள்ளன என்பதை இந்த அவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாக வெளிச்சந்தையில் விற்பனை ஆகக்கூடிய உற்பத்திப் பொருட்களைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டு ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து அப்பகுதி மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும் என்பதே இந்த அரசின் சீரிய நோக்கமாகும். இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இப்போது போற்றத்தகுந்த வகையில் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த கட்டப் பணிகளுக்காக வங்கிகளும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் இத்திட்டங்களுக்கான கடன் அனுமதியை வழங்குவதன் பொருட்டு அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெகுவிரைவில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் வங்கியின் அனுமதியைப் பெற்று தொழில் தொடங்கும் திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இந்த அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசிய பல உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தீர்களே தவிர செயல்படுவதாகத் தெரியவில்லையே என்று கேட்டார்கள். தமிழக மக்களின் வருவாயை 2010 ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக உயர்த்தும் நோக்கத்துடன் என்னுடைய அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் மானாவாரிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மேம்படுத்தி, வேளாண் உற்பத்தி மற்றும் வருவாயைப் பெருக்கும் வண்ணம் வேளாண் சார்ந்த வனம், தோட்டப்பயிர் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்து தரிசு நிலங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் திட்டத்தினைத் தலையாய முயற்சியாக மேற்கொண்டுள்ளோம்.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இரு பிரிவுகளாகச் செயல்படுத்தப்படுகிறது:

(1) நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளின் பட்டா நிலங்களை மேம்படுத்துதல் அதாவது Participatory Watershed Management.





(2) கூட்டாண்மை, சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக அரசு தரிசு நிலங்களை மேம்படுத்துதல் அதாவது — Leasing of Government Waste lands for Development by Corporate Sector/Small Companies/Co-operatives.

விரிவான தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் மூலம் வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், தேனி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் இதுவரை 20,529 ஹெக்டேர், அதாவது, 51,323 ஏக்கர் நிலப்பரப்பில் வீரியவகை ஒட்டு மாங்கனி, நெல்லி, சப்போட்டா, சொர்க்க மரம் என்கிற சைமரூபா(Simarouba), புளி, வேம்பு, மூங்கில் மற்றும் சவுக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன. இதற்கென அரசு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. இரு பருவ மழைகளும் பொய்த்துவிட்ட தருணத்தில் தற்போது மேலும் முடுக்கிவிட இயலாத நிலை உள்ளது. எனவே வரும் பருவமழைக் காலத்தில் இப்பணி மேலும் தீவிரப்படுத்தப்படும். விவசாயிகள் தங்களது தரிசு நிலங்களில் இத்தகைய மரக்கன்றுகள் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

பிற்பகல் 1—50

இரண்டாவது செயல் திட்டமாக அரசின் பொறுப்பிலுள்ள பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத தரிசு நிலங்கள் குறித்து, 423 விண்ணப்பங்கள் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு அதில் 224 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டன. 3,689 விண்ணப்பங்கள் சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 1,373 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

இதுவரை நாமக்கல், கரூர், திருச்சி, விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 7 மாவட்டங்களில் 8 கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ஏற்றுமதித் தரம் வாய்ந்த பழச்சாறு, ஜாம், மூலிகைகள், மருந்து வகைகள், அழகு சாதனப் பொருட்கள், காகிதக் கூழ் மூலப்பொருள் தயாரித்தல் போன்ற திட்டங்களுக்கென 2,044 ஏக்கர் அவர்களின் செயல் திட்டத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல் மாவட்டங்களில் அமைந்துள்ள பொருளாதாரத்தில் தன்சார்பு பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் ஒரு கூட்டமைப்பாக அமைந்து அதாவது Federation of Self-Help Groups for Wasteland Development அமைத்து அவற்றின்மூலம் விண்ணப்பங்கள்

வரவேற்கப்பட்டு, 20 ஏக்கருக்கும் குறைவாக உள்ள தரிசு நிலப்பகுதிகளை மேம்படுத்த இந்த விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான குழுக்களின் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசுகின்றபோது சுய உதவிக் குழுக்களுக்கு இந்தத் தரிசு நிலங்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் இந்தத் திட்டத்தின்படி நிலத்தை வழங்க முடியாது. ஏனென்றால் ஒரு குழுவிற்குக் கொடுத்தால் அதை மேம்படுத்தும் சக்தி அவர்களுக்கு இருக்காது. ஆனால், ஒரே இடத்தில் பல சுய உதவிக் குழுக்களை அமைத்து அந்தக் குழுக்கள் எல்லாம் இணைந்து ஒரு Federation என்று ஒருங்கிணைந்து அவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு நிலம் வழங்கப்படும். அதற்கான ஏற்பாட்டினை நீங்கள் இப்போது செய்யலாம்.

கேரள அரசு பவானி ஆற்றில் தனது மாநிலப் பகுதியில் முக்காலி என்ற இடத்தில் தண்ணீரைத் தனது பகுதிக்குத் திருப்புவதற்காக ஒரு தடுப்பணை கட்ட முயற்சி செய்தது. இதனை உடனடியாக அறிந்து அத்திட்டத்தினைச் செயலாக்குவதைத் தடுத்து நிறுத்தி வைக்குமாறு கேரள முதல்வருக்கு 24—12—2002 அன்று கடிதம் எழுதினேன். அதே நாளில் மத்திய அரசின் நீர்வள ஆதாரத் துறைக்கும் இப்பணியை நிறுத்தி வைக்க கேரள அரசுக்கு அறிவுறுத்துமாறு கோரி கடிதம் எழுதப்பட்டது. 6—1—2003 அன்று கேரள அரசு இத்தடுப்பு அணையைக் கட்டுவதற்குத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு காவிரி நடுவர் மன்றத்தில் ஒரு பல்வகை மனுவையும் தாக்கல் செய்துள்ளோம்.

இந்நிலையில், மத்திய அரசின் வனத் துறை இத்திட்டத்திற்காக ஏற்கெனவே, கேரள மாநில வனப் பகுதி நிலத்தில் வேலை செய்வதற்காகக் கொடுத்திருந்த அனுமதியை நிறுத்தி வைத்து, இத்திட்ட கட்டுமானப் பணியை மேற்கொண்டு தொடர வேண்டாமென்று கேரள அரசுக்கு 28—1—2003 அன்று கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் கேரள அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க ஏற்கெனவே காவிரி நடுவர் மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கிற்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படாவண்ணம், கேரள அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாமா என்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்துள்ளேன். அதனடிப்படையில் தக்க மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



கைத்தறி நெசவாளர்களின் துயரினை நீக்கி, அவர்தம் நலனைப் பேணிக்காக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

முந்தைய தி.மு.க. அரசு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி மற்றும் சேலைகளை கோ—ஆப்டெக்ஸ் மூலம் முறையாகக் கொள்முதல் செய்யாத காரணத்தால், நெசவாளர்கள் சொல்லொணாத் துயருக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1998 ஆம் ஆண்டிலிருந்து வட்டி மானிய நிலுவைத் தொகையையும், முதியோர் குடும்ப ஓய்வூதியத்தையும் வழங்கவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்படாத உற்பத்தியின் விளைவாக 230 கோடி ரூபாய் அளவிற்கு சரக்கு தேக்கம் ஏற்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டன. இதனைச் சீர்செய்ய இந்த அரசு பொறுப்பேற்ற உடன் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய சென்ற ஆண்டில் 30 சதவீதத் தள்ளுபடி மானியம் வழங்கி ஆணை பிறப்பித்தோம்.

பிற்பகல் 1—55

அதேபோல், நடப்பாண்டிலும் பருத்தி ரகங்களுக்கு 30 சதவீதத் தள்ளுபடி மானியம் வழங்கி ஆணையிட்டுள்ளோம். நான் எடுத்த இந்தச் சிறப்பு நடவடிக்கையால் தேங்கிக் கிடந்த துணிகள் 73 கோடி ரூபாய் அளவில் விற்பனையாகி உள்ளன. இலவச வேட்டி சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சுமார் 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் வகையில் அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 20 கிலோ அரிசி இந்த அரசால் மொத்தம் மூன்று முறை இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வேட்டி சேலைகளை கோ—ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்வதற்கு 25 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து, அதன்மூலம் 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டன.

கோ—ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் இருந்த 45 இலட்சம் வேட்டிகள் மற்றும் 45 இலட்சம் சேலைகளில் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு 20 இலட்சம் சேலைகளையும்

4 இலட்சம் வேட்டிகளையும் இலவசமாக வழங்க உத்தரவிட்டுள்ளேன். எஞ்சியுள்ள சேலைகளையும், வேட்டிகளையும் மற்றும் தற்போது கொள்முதல் செய்யப்படும் சேலைகளையும், வேட்டிகளையும் நியாய விலைக் கடைகள் மூலமும் மற்றும் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் மலிவு விலையில் விற்பனை செய்ய ஆணை பிறப்பித்தேன். இத்திட்டத்தின்கீழ் சுமார் 43 இலட்சம் சேலைகளும் 37 இலட்சம் வேட்டிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு 28.19 கோடி ரூபாய் ஆகும்.

1998 ஆம் ஆண்டிலிருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த வட்டி மானிய நிலுவைத் தொகைக்காகவும், முதியோர் ஓய்வூதியத்திற்காகவும் 30 கோடி ரூபாய் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளேன்.

இலவச வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் ஈடுபட்டு வந்த 25,000 கைத்தறிகளில் 15,000 தறிகளை மலிவு விலை வேட்டி சேலை உற்பத்திக்கும். 6,000 தறிகளை முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கான இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்கும், 4,000 தறிகளை இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் துணிகளை உற்பத்தி செய்வதற்கும் ஆணையிட்டு அதன் மூலம் அவர்களுக்குத் தொய்வின்றித் தொடர்ந்து வேலை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளேன். மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 47.41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலிவு விலை வேட்டி சேலை மக்களிடம் வரவேற்பைப் பெறும் வகையிலும், விற்பனையை உயர்த்தும் வகையிலும், தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம், நெசவாளர் சேவா மையம் மற்றும் கோ—ஆப்டெக்ஸ் கணினி மையம் ஆகியவை இணைந்து, சேலைகளுக்காக 150 புதிய வடிவமைப்புகளும், வேட்டிகளுக்காக 11 புதிய வடிவமைப்புகளும் உருவாக்கி, இந்தப் புதிய வடிவமைப்புகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி சேலைகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. பாலியெஸ்டர் நூல் கலந்த சேலை மற்றும் வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நீண்டதொரு பதிலுரையை நான் அளித்திருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லாவிட்டாலும், வெளியில் இருந்து இந்த உரையைக் கேட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். 2001—ல் இந்த அரசு பொறுப்பேற்றபோது எவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியைச்



சந்தித்தது, எத்தனை சோதனைகளைச் சந்தித்தது என்பதைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலும் பேசியிருக்கிறேன்; வெளியேயும் விளக்கம் கூறியிருக்கிறேன். இன்னும் அந்தச் சோதனைகள் தீர்ந்தபாடில்லை. இன்னும் நிதிநெருக்கடி தீர்ந்தபாடில்லை. இன்னும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் ஓய்ந்தபாடில்லை. இவ்வளவுக்கும் மத்தியிலே மக்களுக்காக இந்த அளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் Faith and Strength. ஒரு பழமொழி உண்டு, “Faith and strength help you go through tough times”. Faith என்றால் நம்பிக்கை. Strength என்றால் சக்தி, வலிமை. இந்த நம்பிக்கையும் சக்தியும் இருந்தால், அவைதான் கடுமையான சோதனைக் காலங்களைக் கடக்க நமக்குப் பேருதவியாக இருக்கின்றன என்பது பழமொழி. நம்பிக்கை என்றால் எந்த வகையான நம்பிக்கை? ஒன்று இந்தச் சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டுமென்று, அதற்கு ஆண்டவன் துணைபுரிய வேண்டுமென்று ஆண்டவன் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை ஒருவகை.

*பிற்பகல் 2—00*

இன்னொன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்திருக்கிறோம், அம்மாவை நம்பி ஓட்டு போட்டு இருக்கிறோம், எத்தகைய சோதனைகள் வந்தாலும் அம்மா அவற்றை எல்லாம் தீர்த்து வைப்பார்கள் என்று மக்கள் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போதிருக்கின்ற நெருக்கடிகள், சோதனைகள் இவற்றை எல்லாம் பார்க்கின்றபோது ஆண்டவன்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைதான் நம்மை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்ல வேண்டிருக்கிறது. அதே நேரத்தில் நமக்கு இந்தப் பிரச்சினைகளை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி கொள்வதற்கு வலிமை, சக்தி எங்கிருந்து வருகிறது என்று சொன்னால் மக்கள் நம்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நமக்கு வலிவூட்டும் சக்தி. ஆகவே இந்த நம்பிக்கையையும், இந்த வலிமையையும் வைத்துக் கொண்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தொய்வின்றி இந்த அரசு செய்து வருகிறது. ஆகவே இப்போதாவது எதிர்க்கட்சியினர் மனம் மாறி, திருந்தி, வருந்தி, யதார்த்த நிலையை உணர்ந்து, இந்த அரசு எதைச் செய்தாலும், எந்தச் சுயநல நோக்கத்துடனும் செய்யவில்லை, மக்களுக்காகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து,

ஏற்றுக் கொண்டு இனிமேலாவது மக்கள் நலப் பணிகளில் இந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்படி ஒத்துழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு எனக்குள்ளது என்று தெரிவித்துக் கொண்டு, அப்படி ஒத்துழைக்கவில்லை என்றால் எங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை, நஷ்டம் அவர்களுக்குத்தான் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிறைவான பதிலுரையோடு விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பதிலை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய உரையிலே அடுத்த ஆண்டு விவசாயிகள் விதை நெல் போன்றவற்றைப் பெறுவதற்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தத்தைத் திரும்பப்பெறுகிறேன் என்று சொல்லுங்கள், பேசுவதற்கு இன்னும் எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ப. அரசன்:** அடுத்த ஆண்டு விவசாயிகளுக்கு விதை நெல் தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், வறட்சி நிவாரண வேலைவாய்ப்புகளிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள். திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா இல்லையா? இல்லையா, உண்டா என்பதுதான். திருத்தத்தை வலியுறுத்தவில்லை என்று சொல்லுங்கள்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.



**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"2003 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் 28—1—2003 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

***

பிற்பகல் 4—30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2003). திருவாளர்கள் வி.கே. லட்சுமணன், எச்.எம். ராஜு, டிஎன். சிவசுப்பிரமணியன், கு. ஜெயக்குமார் மற்றும் திருமதி எஸ். மகேஸ்வரி ஆகியோரில் ஒருவர், 14—1—2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை முன்மொழிவர். அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.*

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2003)." மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 30—1—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 32 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 32 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"*

எனக் கோருகிறேன்.

[2003 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2003) அவசரச் சட்டத்தை நிராகரிக்கக் கோரும் தீர்மானம் கொடுத்த திரு. க. முருகவேல் ராஜன் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால், தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2003)." மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29—01—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2003 ஜனவரி 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2003), அவசரச் சட்டத்தை நிராகரிக்கக் கோரும் தீர்மானத்தைக் கொடுத்த திரு. க. முருகவேல் ராஜன் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால், தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2003)."மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

பிற்பகல் 4—35

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29—01—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2003 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)—ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



2003 ஜனவரி 31] [பேரவைத் தலைவர்]

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம், நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 4—36 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*31. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 15—11—2002 ஆம் நாளிட்ட 251 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)*

*32. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினோராவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

*33. 2001—2002 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

*34. 2001—2002 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

*35. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்—1) முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவன்ங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

[2003 ஜனவரி 31

36. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்—2) பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

37. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்—I) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

38. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

39. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

27. 1995—96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

28. 1996—97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

29. 1997—98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

30. 1998—99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

31. 1999—2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)



2003 ஜனவரி 31]

32. 2000—2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

33. மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது அறிக்கை (2001—2003).

34. மதிப்பீட்டுக் குழுவின் பதினோராவது அறிக்கை (2001—2003).

35. மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை (2001—2003).

36. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை (2001—2003).

37. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை (2001—2003).

38. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்தி மூன்றாவது அறிக்கை (2001—2003).

39. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை (2002—2003).

40. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை (2002—2003).

41. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து ஐந்தாவது அறிக்கை (2002—2003).

42. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து ஆறாவது அறிக்கை (2002—2003).

43. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து ஏழாவது அறிக்கை (2002—2003).

44. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து எட்டாவது அறிக்கை (2002—2003).

45. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து ஒன்பதாவது அறிக்கை (2002—2003).

46. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பதாவது அறிக்கை (2002—2003).

[2003 ஜனவரி 31

47. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஒன்றாவது அறிக்கை (2002—2003).

48. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து இரண்டாவது அறிக்கை (2002—2003).

49. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை (2002—2003).

50. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை (2002—2003).

51. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஐந்தாவது அறிக்கை (2002—2003).

52. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஆறாவது அறிக்கை (2002—2003).

53. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஏழாவது அறிக்கை (2002—2003).

54. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து எட்டாவது அறிக்கை (2002—2003).

55. அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை (2002—2003).

56. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை (2002—2003).

57. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தாவது அறிக்கை (2002—2003).

58. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினோராவது அறிக்கை (2002—2003).

59. அரசு உறுதிமொழிக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை (2002—2003).

60. அரசு உறுதிமொழிக் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை (2002—2003).



2003 ஜனவரி 31]

61. மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (2001—2003).

62. மனுக்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை (2001—2003).

63. மனுக்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை (2001—2003).

64. மனுக்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (2001—2003).

65. மனுக்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (2001—2003).

66. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

67. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) விலக்கிக் கொள்வதைத் தேவையானதாக்கிய சூழ்நிலையினை விளக்குகிற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 163 ஆம் விதியின் படியான விளக்கவுரை.

---

தமிழ்நாடு
225510

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.